மணிக் கொடி

கொடி 8 மணி 3

15.4.39


M211,N32MK
N39.8.3
198774


15-4-39
ManiKKodi

இதோ வருகிறது ! எதிர்பாருங்க[ள்]

## நவமோஹனமூர்த்தி கிருஷ்ண பகவான்

தோன்றும்

# ராதாகிருஷ்ண (தெலுங்கு)

# சியாமசுந்தர் (தமிழ்)

## THAVAMANIDEVI

in Lakshmi Cinetone's super Production



SYAMA SUNDER

மனித ஹிருதயத்தில் அந்த பரமாத்மாவின் நிம்மதியான தோற்றம்—அப்புறம்............

அவனைக் காணும் ஆர்வமும், அவனது நவநவமான கல்யாண குணங்களோடு இரண்டறக்கலக்கும் ஆசையும், படிப்படியாக வளருகிறது.

விவரங்களுக்கு:—

**லக்ஷ்மி ஸினிடோன் லிமிடெட்,**

146, பிராட்வே, சென்னை.

# ஏப்ரல் 14உ

## புது வருஷம் பிறக்கிறது !

## இப்புது வருஷத்திற்கு ஒரு பொற்செய்தி !!

வருஷப் பிறப்பன்று

மதுரை — — சில்வர் ஜூபிலி டாக்கீஸ்,
கோவை — — கர்னடிக் டாக்கீஸ்,
திருச்சி — — வெல்லிங்டன் டாக்கீஸ்,
திருவனந்தபுரம் — சித்ரா டாக்கீஸ்

REGISTRAR OF ... 21 APR 1938 MADRAS

ஆகிய இடங்களுக்கு

# பக்த குமணன்

அல்லது

# ராஜ யோகி

## விஜயம் செய்கிறார்.

அவரது வருகை அவ்வூர்களில் உள்ளோருக்கு அளவற்ற ஆனந்தத்தைத் தரும்.

டி. பி. ராஜலக்ஷ்மி, வி. ஏ. செல்லப்பா, பேபி ருக்மணி, வி. எஸ். மணி நடித்தது.

(சென்னை) பிராட்வே டாக்கீஸிற்கும் இதர இடங்களுக்கும் விரைவில் வருகிறார்.

"குமணன்" பாடல்களை "எங் இந்தியா" ரிகார்டுகளில் கேளுங்கள்.

யோகிகள் :

## கபூர்சந்த் & கம்பெனி,

பெங்களூர் ஸிடி.

'gram : KAPURCHAND. Phone : 2382.

## தரிசிக்கத் தயாராயிருங்கள்!

பக்தி

ரஸம் ததும்பும் உள்ளமுருக்கும் கானங்கள்

கண் கொள்ளாக் காக்ஷி

உங்களூர் வரும் நன்னாளை எதிர்பாருங்கள்.

திருநீலகண்டர் பாட்டுகளை ஓடியன் ரிகார்டுகளில் கேளுங்கள்.

# திருநீலகண்டர்

பாபநாசம் சிவன் பாடல்கள்

இளங்கோவின் வசனங்கள்

டைரக்ஷன் :

**ராஜா சாண்டோ**

M. K. தியாகராஜ பாகவதரின் கானம் உங்களைப் பரவசப் படுத்தும்.

செருகளத்தூர் சாமா,
S. G. செல்லப்பய்யர்,
கொத்தமங்கலம் சுப்பு,
N. S. கிருஷ்ணன்

மிஸ். பேபி,
S. S. ராஜாமணி, பால சரஸ்வதி
சுப்புலக்ஷ்மி, சுசீலா தேவி
T. A. மதுரம் (நடிப்பது)

விவரங்களுக்கு :

## தியாகராஜ் பிலிம்ஸ் லிமிடெட்,

தந்தி : 'தியாகராஜ்'. **திருச்சினாப்பள்ளி.** போன் : 102.

198774



கமெர்சியல் குறுக்கு எண் போட்டி நெ. 8.

**வாழ்வில் பணம் சுருட்ட சுளுவான வழி!**

ஏப்ரல் பரிசு நெ. 8.

**ஏப்ரல் போனஸ் பரிசுகள்**

**ரூ. 24,000**

பிரம்மாண்டமான போனஸ் திட்டம்.

இரண்டு சதுரங்களிலும் சரியான விடை வந்தவருக்கு பரிசு தவிர போனஸ் ரூ. 1000/-மும், ஒரு சதுரம் மட்டும் சரியான விடை போட்டவருக்கு போனஸ் ரூ. 500/-ம் உத்தரவாதமாக அளிக்கப்படும்.

**முடிவு தேதி 11-5-39.** **வெளிவரும் தேதி 16-5-39.**

பிரவேசக்கட்டணம் { இரு சதுரங்களுக்கும் கூபனுக்கு ரூ. 2/-; ஒரு சதுரம் மட்டும் கூபனுக்கு ரூ. 1-8-0.

இதன் சரியான விடை கராச்சியில் பிரபலமான பாங்கில் டிபாசிட் செய்யப்பட்டிருக்கிறது.

**போட்டி விபரம்.**

சதுரம்—A
1—16 மொத்தம் 34

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

சதுரம்—B
1—20 மொத்தம் 50

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

பக்கங்களில் இருக்கும் சதுரங்களில் நேர்வாட்டத்திலோ, பக்கவாட்டத்திலோ, குறுக்கு வாட்டத்திலோ கூட்டினாலும் A-சதுரத்தில் 34 வரும்படி 1 முதல் 16 வரையும், B-சதுரத்தில் 50 வரும்படி 1 முதல் 20 வரையும் உபயோகிக்கவும். ஒருமுறை உபயோகித்த எண்ணையே மீண்டும் உபயோகிக்கக் கூடாது. விடைகளைத் தனிக் காகிதத்திலும் எழுதியனுப்பலாம்.

முடிவு தேதி : உங்கள் கூபன்களையும் அதற்குரிய கட்டணத் தொகையையும் (போஸ்டல் ஆர்டராகவோ, மணியார்டராகவோ) எங்களுக்கு 11-5-39-க்குள் கிடைக்கும்படி அனுப்ப வேண்டியது. வீல் செய்து வைக்கப்பட்டிருக்கும் சரியான விடை 16-5-39 அன்று வெளியிடப்படும். விலாச மெழுதி, ஸ்டாம்பு ஒட்டி அனுப்பினவர்களுக்கு தபால் மூலம் விடைகள் அனுப்பப்படும். எங்களுடைய அடுத்த வேதமதித் திட்டத்துடன் ஷை விடைகள் பிரசுரமாகும். கூபனையும் சேர்த்து கட்டணத்தை மணியார்டரில் அனுப்புவோர் விடைகளுடன் மணியார்டர் கூபனையும் அனுப்பினால் சௌகரியம். பக்கத்திலிருப்பவர்கள் காலை 10 மணியிலிருந்து மாலை 7 மணி வரையில் நேரில் கொண்டு வந்து செலுத்தலாம்.

சரியான விடை அனுப்புகிறவர்கள் ஒவ்வொருவருக்கும் மேலே சொன்ன ரூ. 1000/-, ரூ. 500/- போனஸ் கொடுக்கப்படும். இந்த போனஸில் வீதாசாரமே கிடையாது.

பரிசளிக்கும் விஷயத்தில் போட்டி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

கூபன், கட்டணம் செலுத்தவேண்டிய விலாசம் :

Secretary,

**MODERN COMPETITION,**

**Khatau Market, Bombay Bazaar, Karachi.**

முந்திய விடை. போட்டி நெ. 7.

| | | | | |
|---|---|---|---|---|
| முதல் வரிசை | 6 | 11 | 9 | 16 |
| இரண்டாம் வரிசை | 18 | 7 | 19 | 4 |
| மூன்றாம் வரிசை | 15 | 10 | 5 | 12 |
| நான்காம் வரிசை | 3 | 14 | 8 | 17 |

## யோகேந்திர கவசம்

அபார சக்தியுடையது; பளபளப்பானது. இந்த யந்திரத்தை வைத்துக்கொண்டிருப்பதனால் கிட்டாத பொருள்களும் கிட்டும். எதிலும் பிரயத்தனத்தை எதிர்பாராமல் பலன் கொடுக்கக்கூடியது. இதனால் கிரகசாரதோஷங்கள் நீங்கும்; விரோதிகள் பணிவர். கர்வமும் கல்மனமும் கொண்டவர்களைக்கூட இதன் மகிமையால் வசப்படுத்தலாம். பரீட்சை, வியாஜ்யம், லாட்டரிச் சீட்டு இவைகளில் வெற்றியையும், வாழ்க்கையிலும் தொழிலிலும் முன்னேற்றத்தையும், சந்தான பாக்கியத்தையும் திரண்ட ஐச்வரியத்தையும் அளிக்க வல்லது. உங்களுக்கு அது ஒரு பூலோக காமதேனு. இல்லை என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100/-இனாம்.

| | | | |
|---|---|---|---|
| தாமிரக் கவசம் | ரூ. 2 | 0 | 0 |
| வெள்ளிக் கவசம் | ரூ. 3 | 4 | 0 |
| தங்கக் கவசம் | ரூ. 9 | 0 | 0 |

ஸ்ரீ. மகாசக்தி ஆச்ரம்,
60, பார்வால்பூர் போஸ்ட்,
பாட்னா.

## இனம் ரூ. 500!

எந்த விதமான குஷ்டம் திமிராயிருந்தாலும் உலகக் கியாதி பெற்ற என்னுடைய மருந்தை பதினைந்து நாட்கள் மட்டும் உபயோகித்து வந்தால் இருந்த இடம் தெரியாமல் பறந்து போய்விடும். திரும்ப எட்டியே பார்க்காது. பெரிய டாக்டர்கள், கவி ராஜர்கள் மற்றுமுள்ள மேதாவிகள் கூடக் கண்டுபிடிக்காத அபூர்வமான மருந்து. நூற்றுக்கு நூறு உத்தரவாதமான குணமளிக்கக் கூடியது. குணமில்லை என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 500 இனாம்!

| | | | |
|---|---|---|---|
| 7 நாள் மருந்து | ரூ. 1 | 8 | 0 |
| 15 நாளைக்கு | ரூ. 3 | 0 | 0 |

ஸ்ரீ. பிரேந்திரா பிரசாத்,
நெ. 60, பார்வால்பூர், பாட்னா.

## நீரிழிவுக்கு

ஆயுள் முழுவதும்
அடிமைப்பட்டிருக்க வேண்டாம்

**இந்தக் கைகண்ட மருந்தைப் பரீட்சித்துப் பாருங்கள்.**

இது பிரபல அமெரிக்க ரஸாயன ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்தது, இதுவரை இருந்து வந்த மருந்துகளைக் காட்டிலும் வெகு சீக்கிரத்தில் நிச்சயமாகக் குணப்படுத்தக்கூடியது.

இந்த மாத்திரைகளை நோயாளி தன் வாழ்நாள் முழுவதும் உபயோகிக்க வேண்டிய அவசியமேயில்லை. சில வாரங்கள் உபயோகித்தாலே பூர்ண குணமுண்டாகும். வியாதியைக் குணப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் வயிற்றிலுள்ள வியாதியால் கெட்டுப்போன பாகங்களைச் சீர்ப்படுத்துகிறது. ஜீரணக் கருவிகளைக் கெட்டிப்படுத்துகிறது. ஈரலையும் மற்றக் கருவிகளையும் பூர்வ ஸ்திதிக்குக் கொண்டு வருகிறது. களைப்பைப் போக்கி சாஸ்வதமான ஆரோக்கியத்தைக் கொடுக்கிறது.

**நீரிழிவு மாத்திரை**

இரத்தத்திலுள்ள தித்திப்பு சம்பந்தத்தைக் குறைக்கிறது. குடலை சுத்தம்செய்து புத்துயிர் அளிக்கிறது. சிக்கல்களைப் போக்கி ஜீரணக் குழாய்களைப் பலமடையச் செய்கிறது. சாஸ்வத ஆரோக்கிய மளிக்கிறது.

ஒரு சீசா விலை ரூ. 10-8-0. முழு விபரங்களும் மருந்துடன் கிடைக்கும்.

ஸோல் ஏஜன்ட்ஸ்:—ஸ்டார் ஏஜன்ஸி, 174,
ஹார்ண்பிரோடு, கோட்டை (Fort), பம்பாய்.

கிடைக்குமிடம்:—அப்பா அன் கோ, சைனுபஜார் ரோடு, சென்னை.

## தமிழ் நாட்டவர்க்கோர் நல்விருந்து

❊

சிறந்த நடிகர்கள்

கர்ணாமிர்த கானம்

❊

நடிகர்கள்:

C. V. V. பந்துலு
M.S. முத்துகிருஷ்ணன்
மாஸ்டர்
T. V. நமசிவாயம்
மற்றும் பலர்.

ஸ்டுடியோ:
பிரக்ஜோதி
(அடையாறு)
சென்னை.

அகில இந்திய நாதஸ்வரம் புகழ்
திருவாவடுதுறை
T. N.
ராஜரத்னம்
நடிக்கும்

**கவிகாளமேகம்**

❊

உயர்ந்த ஜோடனைகள்

கண்கவர் காட்சிகள்

❊

நடிகைகள்:

S. P. L. தனலட்சுமி
P. R. மங்களம்
P. S. ஞானம்
பின்னும் அநேகர்

கதை வசனம்,
துணை டைரக்ஷன்:
பண்டித
பி. எஸ். செட்டியார்

விவரங்களுக்கு

## சேலம் மோகினி பிக்சர்ஸ் லிட்,

தந்தி: மோஹினி.

சேலம் ஜங்ஷன்.

# மணிக்கொடி

[இத்துடன் "கார்த்தி" இணைக்கப்பட்டிருக்கிறது]

கொடி 8] [மணி 3.



| | | |
|---|---|---|
| கம்பனும் கம்பன் விழாவும் <br> ப. ரா. | .... | 7 |
| கம்பர் மாண்பு <br> டி. கே. சிதம்பரநாத முதலியார் | .... | 13 |
| இனி எந்த நாட்டைப் பிடிப்பது ? <br> எ. ஜி. வெங்கடாச்சாரி | .... | 19 |
| மருதத்திணை அரசு வீற்றிருத்தல் <br> (முகப்புப் படம்) | .... | 24 |
| பயம் <br> 'வாணிதாஸன்' | .... | 25 |
| ராக்கி நெனப்பு <br> கு. ப. ரா. | .... | 26 |
| 19222 பாலிஸி <br> என். சிதம்பர சுப்ரமண்யன் | .... | 34 |
| திருமங்கையாழ்வாரின் ஆத்ம சோதனை <br> 'சித்ரா' | .... | 38 |
| வயர்லெஸ்-அதன் சரித்திரம் <br> வி. அனந்தகிருஷ்ணன் பி. ஏ. | .... | 41 |
| திவான் மகள் [தொடர்ச்சி] <br> 'குமுதினி' | .... | 44 |
| யூதர்களின் அரசன் <br> 'சஞ்சீவி' | .... | 49 |
| பகாசுரப் பேர்வழிகள் <br> எம். எஸ். சுப்பிரமணிய அய்யர் | .... | 54 |
| யானைப் படை <br> 'சேனாவரையன்' | .... | 58 |
| மாயமாய் மறைந்த கிராமம் <br> 'வில்லன்' | .... | 60 |
| நள்ளிரவிலே <br> 'சொக்கன்' | .... | 68 |
| எதிரொலிகள் <br> ராமாமிருதம் | .... | 74 |



"மணிக்கொடி" கதைகளில் வெளியாகும் பெயர்கள், பாத்திரங்கள் யாவும் கற்பனை. அவை யாரையும் குறிப்பிடுவனவல்ல.



"மணிக்கொடி"

ஆசிரியர்: கே. ஸ்ரீனிவாசன்


# கம்பனும் கம்பன் விழாவும்

(ப. ரா.)

இம்மாதம் 4-ந் தேதி பங்குனி அஸ்தம். அன்றுதான் கம்பன் ராமாயணத்தை அரங்கேற்றியது. அதையொட்டி சென்ற மாதம் இறுதியில் தேரழுந்தூரிலும், இம்மாத ஆரம்பத்தில் மற்றும் சில இடங்களிலும் கம்பன் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. செட்டிமார்நாட்டில், காரைக்குடியில் 2,3-ந் தேதிகளிலும், நாட்டரசன் கோட்டையில் 4-ந் தேதியிலும், கொத்தமங்கலத்தில் 5-ந் தேதியிலும் இவ்விழா கொண்டாடப்பட்டது. இம்மூன்று இடங்களிலும் பலர் கம்பனைப் பற்றியும், பலர் ராமாயணத்தைப் பற்றியும் அரிய சொற்பொழிவுகள் செய்தார்கள். தேரழுந்தூர் விழாவிலும், செட்டிமார் நாட்டு விழாக்களிலும் தலைமை வகித்தவர் ஸ்ரீ. டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள்.

ஸ்ரீ.முதலியார் தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் மிகுந்த புலமை பெற்றவர். பல வருஷங்களாகத் தமிழ் ஆராய்ச்சியில் பண்பட்டவர். தமிழ்க் கவிகளைத் தக்க மனோபாவத்துடன், ரசனையுடன், ஊடுருவிப் பார்த்து, அவற்றின் அமைப்பையும் உட்பொருளையும் அறிந்து, வருஷக்கணக்காக அநுபவித்துக் கொண்டிருப்பவர். இன்றைக்குத் தமிழ் நாட்டில் ஸ்ரீ. முதலியார் அடைந்திருக்கும் பிரசித்திக்கு இவையெல்லாம் காரணமில்லை. கம்பனை அவர் கற்கும் முறையும், ரஸிக்கும் முறையும், உணர்ந்து அநுபவிப்பதை உள்ளபடியே துணிந்து எடுத்துரைக்கும் முறையுமே, தமிழிடம் அன்பு பூண்டவர்களிற் பலரும் அவரிடம் அளவற்ற அன்பு செலுத்தும்படி செய்திருக்கின்றன. எனவே, இவ்வாண்டு அவர் தலைமையில் விழாக்கள் நடைபெற்றது தமிழ் நாட்டின் எதிர்காலத்திற்கு ஒரு சுப சூசகமாகும்.

* * *

ஆயிரம் வருஷ காலமாகத் தமிழ் நாட்டில் கம்பன் தான் அடையவேண்டிய ஸ்தானத்தைப் பெறாமலிருக்கிறான். அவனுடைய காவியம் உலக மகா காவியங்களின் நடுவே ஒரு தனி நாயகமாய் விளங்குகின்றது. பிறபாஷைகளிலுள்ள மகா காவியங்கள் எல்லாவற்றையும் விட கம்பராமாயணமே தலை சிறந்தது என்று பல பாஷைகளில் பாண்டித்யம் பெற்ற ரஸிக சிகாமணி ஸ்ரீ வ. வெ. சு. அய்யர் சொல்லியிருக்கிறார். கம்ப ராமாயணம், உலக இலக்கியக் குன்றுகளிடையே ஒரு ஹிமாலயம்; உலக இலக்கிய மாளிகைகளின் நடுவே ஒரு தாஜ்மஹால். கம்பன், தன் காவியத் தொடக்கத்தில், 'ஓஒஒஒசை' பெற்றுயர் பாற்கடலை ஒரு பூனை முற்றிலும் குடித்துவிட எண்ணிப் புகுந்தது போலத் தான் ராமாயணத்தை 'ஆஅஅஅசை' பற்றி அறையலுற்றதாகச் சொல்லுகிறான். அவனுடைய காவிய சிருஷ்டியைப் பார்க்கும் பொழுது, பூனை பாற்கடல் முழுவதையும் குடித்து ஏப்பமிட்டுவிட்டது என்ற எக்களிப்பில், அவன் இவ்வளவு அடக்கமாகக் கூறியிருப்பதாகத் தோன்றும்.

தொன்று தொட்டே 'கவிச் சக்கரவர்த்தி' என்றும், 'கல்வியிற் பெரியன்' என்றும் புகழப்பட்டு வந்திருப்பினும், கம்பன் சக்கரவர்த்திக்குரிய தன் அரியாசனத்தில் இன்னும் ஏறி அமரவில்லை. அவன் புலவர்களுடைய கும்பலை விட்டு வெளியே அழைத்து வரப்படாமல் இருக்கிறான். தமிழர் கம்பனை இன்னும் நன்கு தெரிந்துகொள்ளவில்லை. அவர்கள் தெரிந்துகொண்ட பின்பே உலகம் அவனைக் காண முடியும். உலகத்து அறிஞரும் ரஸிகரும் கம்பனை ஓரளவாவது காண முடிந்தால், அதன் பிறகு நமக்குக் கவலையே யில்லை. கம்பன் உலக மகா கவியாக விளங்குவான்; அவன் காவியம் சர்வ தேச இலக்கியப் பொக்கிஷமாகிவிடும்.

ஆயிரம் வருஷ காலமாகக் கம்பனின் பிரசித்திக்கு இடையூறு யிருந்தவை எவை? முக்கியமாக ஜாதி சமயக் கொள்கைகள் எனலாம். சில ஜாதியினரும் சில சமயத்தினரும் கம்பராமாயணம் தத்தம் ஜாதி சமயத்திற்கு ஒத்ததில்லையென்று ஒதுக்கி விட்டனர். இன்னும், பண்டிதர்கள், புலவர்களிற் பலரும் ராமாயணத்தை அதற்குரிய ஆனந்த வெறியுடன் ஏற்றுக்கொள்ளா திருந்தனர். பொறுமை ஒரு பக்க மிருப்பினும், இனிய எளிய ராமாயண விருத்தங்களை அவர்கள் புரிந்துகொள்ளவே முடியவில்லை. பறை முழக்கங் கேட்டு ஆடிக்கொண் டிருப்பவர்கள் யாழோசையில் மயங்குவது அபூர்வமல்லவா? அதுபோல், யமகம் திரிபுகளில் மூழ்கியிருந்த பழம் புலவர்கள் பலரும் கம்பனின் உட்பொருளை உணர்ந்து அநுபவிக்க முடியாமற் போய்விட்டது. இது அவர்களுடைய பிழையன்று, கம்பனுடையதே. அவன், இவ்வளவு எளிமையாக, கரையை அடுத்த நீர்போல் தெளிவாகப் பொருள் புலப்படும்படி, ஏன் கவி எழுதினான்? அகராதிகள், நிகண்டுகளையெல்லாம் உபயோகமில்லாமற் செய்யும் ஒரு நூல் காவியமாகுமா? காவியமேயில்லை யென்றால், அதை மகா காவியமென்று எப்படிச் சொல்லலாம்?

எத்தனையோ மட்ட ரகமான கவிகளுக்கெல்லாம் கட்டியம் கூறிக்கொண்டு தற்காலத்திலும் நூற்றுக்கணக்கான பண்டிதர்கள் உலவி வருவதை நாம் காண்கிறோம். புகழ்பெற்ற சங்க இலக்கியங்களையெல்லாம் பற்றி வரிசையாய்ச் சொற்பொழிவுகளும் ஆராய்ச்சிகளும் செய்யப்படுகின்றன. அளவில் சிறியனவாயுள்ள நூல்களெல்லாம் பிரமாதப்படுத்தப்படுகின்றன. காவிய ரஸமும், கற்பனை வளமும், உணர்ச்சியும், பாவமும் இல்லாத காவியங்களெல்லாம், சமய மோகங் காரணமாக, உயர்ந்த பீடங்களில் தூக்கி வைக்கப்படுகின்றன. பெரும்பாலான பண்டிதர்களாலும் தீண்டப்படாத, அவர்களாலும் எளிதில் புரிந்துகொள்ள முடியாத பழைய நூல்களெல்லாம் பெருநூல்களென்று வானளாவப் புகழப்படுகின்றன.

இத்தனை சந்தடிகளுக்கு மிடையே கவியரசன் கம்பன் தலை தூக்குவது எங்ஙனம்? கம்பனை ரசனையுடன் கற்பார் குறைவு; பண்டிதர்கள் அவனைத் தக்கபடி பிரசித்தப்படுத்த வில்லை என்பது ஓர் புறமிருக்கட்டும். கம்பன் தனியே கிடக்கும்படியாவது விடப்பட்டிருக்கிறானா என்றால், அதுவுமில்லை. அவனைப் பற்றிச் செவிகைக்கும்படியான எத்தனை ஆபாசக் கதைகள்? சிந்தையில் விஷமேறும்படி செய்யும் எத்தனை வரலாறுகள்? எங்கேயாவது ஒரு புலவனை ஒரு வேசியுடன் சம்பந்தப்படுத்தி ஒரு கதை சொல்லப்பட்டால் அப் புலவன் கம்பனாய்த்தான் இருக்கவேண்டும் என்று குழந்தைகள் கூட யூகிக்கும்படி அத்தனை ஆபாசக் கதைகள் கட்டிவிடப்பட்டிருக்கின்றன. கம்பன் கால ஆராய்ச்சிக் கலகம் ஒரு புறம். கம்பனின் ஜாதி? அது உயர்வாகக் கருதப்பட்ட ஒரு ஜாதியாக இருக்க முடியுமா? விழித்த கண் இமைக்காமல் கண்டோர் களித்துருகும்படி காவிய மாளிகையை நிறுமித்த கம்பன், அந்தியக் காலத்தில், மனச் சாந்தியுடன் சமாதி அடைந்திருப்பானா? இல்லை—அவன் சதியால் கொலை செய்யப்பட்டான் என்று ஒரு கதை! இவ்வாறாக கம்பன் ஒருவன் இருந்ததேயில்லை என்ற ஒரு விஷயந் தவிர மற்றெல்லா விஷயங்களைப் பற்றியும் கதைகள், கதைகள், கலைக்குதவாத கட்டுக்கதைக் குப்பை கூளங்கள்.

கம்பனுக்கு இன்னொரு பெரிய அபாரதம் செய்யப்பட்டிருக்கிறது. வெவ்வேறு



பொழுது போக்கு. கம்பன் வளரத் தமிழ் வளரும்; தமிழ் வளரத் நாயகம் வளரும்.

* * *

பொதுவாக, கவிதைப் பொக்கிஷங்கள் தினசரி வாழ்க்கைப் போரில் ஈடுபட்டுள்ள கும்பல்களினால் பாதுகாக்கப்படுவதில்லை; பொறுக்கி யெடுக்கப்பட்ட சில ரஸிகர்களே தலைமுறை தோறும் அவற்றைப் பாதுகாக்கிறார்கள் என்று ஆர்னல்டு பென்னெட் என்ற அறிஞர் கூறுவது முற்றிலும் உண்மை. அவ்வாறே, கம்பனின் மேதையை அறிந்து, அவன் காவியச் செல்வத்தைத் தொன்று தொட்டே பாதுகாத்து வந்தவர்கள் சிறு கூட்டத்தாராகவே இருந்திருக்கவேண்டும். இத்தகைய ஒரு சிறுகூட்டம் இக்காலத்திலும்நிலைத்திருக்கிறது என்ற விஷயம் நமக்குப் பெரிய ஆறுதலளிக்கக்கூடியது. இக்கூட்டத்தில், பிரசித்தமாக வெளி வந்து பிரசாரம் செய்பவரில் முன்னணியிலிருப்பவர் மூவர். அவர்கள் ஸ்ரீ. எஸ். வையாபுரிப் பிள்ளை. ஸ்ரீ. பி. ஸ்ரீ. ஆசாரியா, ஸ்ரீ. டி. கே. சிதம்பரநாத முதலியார். பல நெடும் வருஷங்களாக இவர்கள் கம்பனைப் படித்துப் படித்து அநுபவித்திருக்கிறார்கள். போலிப் புகழுக்கும் குரோதங்களுக்குமிடையே மறைந்திருந்த கம்பனை இவர்கள் திரும்பவும் கண்டு பிடித்தார்கள் என்றே சொல்லலாம். கம்பனை எங்கு காண்பது? அவன் பிறந்தது தேரழுந்தூர், சாந்தி யடைந்தது நாட்டரசன்கோட்டை என்ற இரண்டு விஷயங்கள் சந்தேகத்திற்கிடமின்றி நமக்குத் தெரிகின்றன. இவற்றைப் பார்க்கினும் சந்தேகத்திற்கிடமில்லாத இன்னொரு விஷய முண்டு. அதாவது, கம்பன் வாழ்ந்த-வாழும்-இடம். கம்பன் தன் காவியத்திலே தான் வாழ்கிறான். அவனுடைய ராமாயணத்தில்தான் அவன் வாழ்க்கையும், ஜீவனின் துடிப்பும், களங்கமற்ற பெரிய ஆழமான உள்ளமும், கலை நுட்பமும் காணப்படுகின்றன. ஆகவே, ராமாயணத்தைக் கற்றதன் மூலம் மேற்கூறிய அன்பர்கள் உண்மைக் கம்பனைக் கண்டுவிட்டதாக உவகை கொண்டிருக்கிறார்கள். அவனே கவிகளின் தனி நாயகன் என்று பிற்காலத்தில்

ஸ்ரீ வ. வெ. சு. அய்யர் ஒரு பட்டயமும் அளித்துவிட்டார்.

இம் மூவரும் கம்ப ராமாயண ஆராய்ச்சியில் மூன்று திசையை நோக்கிப் போகிறார்கள் என்று சொல்வதைப் பார்க்கினும், மூவரும் மூன்று திசைகளிலிருந்து பார்த்து, ஓரிடத்தில் வந்து சேருகிறார்கள் என்று சொல்வது பொருந்தும். அவர்களுடைய ஆராய்ச்சிகளைப் பற்றி இங்கு குறிப்பிடுவதானால் மிகவும் விரிவாகிவிடும். இங்கு நான் குறிப்பிட வேண்டிய விஷயம் ஒன்றுதான். வையாபுரிப் பிள்ளையவர்களும், ஆசாரியா அவர்களும் கம்பனை எவ்வளவு ரஸித்து அநுபவித்திருப்பவர்களானாலும், கம்பனை நமக்கு எடுத்துக் காண்பிக்கும்பொழுது, தாம் அவனிடமிருந்து சிறிது விலகி நின்று காட்டுவதுபோல் பாவனை செய்துகொள்ள முடிகிறது. ஆனால் டி. கே. சி. அவர்களை இம்மாதிரியாகப் பார்ப்பது அரிது. கம்பனைப் பற்றி அவர் பேசும் பொழுதெல்லாம், காவிய மலரின் தேனில் தோய்ந்த சிறகுகளையும் வாயையும் துடைத்துக் கொள்ளக்கூட நேரமில்லாமல், அப்படியே பறந்து வந்து ரீங்காரம் செய்யும் வண்டுபோல், தோன்றுவார். கம்பன் விழாவில் அவர் பாடிய கவிகளைக் கேட்டுக்கொண்டு என் அருகிலிருந்த நண்பர் ஸ்ரீ. சொ. முருகப்பா அவர்கள், "அவர் பாட்டைப் பாட ஆரம்பிக்கும்பொழுதே எடுக்கிற எடுப்பைப் பார்த்தீர்களா? இந்தப் பாட்டை இத்தனை நாளும் நாம் படித்ததில்லையா? இப்பொழுது அவர் பாடும்பொழுது அது எவ்வளவு உயிர்பெற்று விளங்குகிறது!" என்று அடிக்கடி சொல்வார்கள். டி. கே. சி. பாடும்பொழுது எடுக்கிற எடுப்பையும் பார்த்தேன், நடுவிலும் பார்த்தேன், முடிக்கிற முடிப்பையும் பார்த்தேன். ஒரு பாட்டைத்தான் எத்தனை முறை பாடுவது என்று ஒரு கணக்குக் கிடையாதா? "வாணன் புகழ்பாடா வாயுண்டோ?" என்று அவர் பாட ஆரம்பித்துவிட்டால், நாம் இடையில் வெளியே போய் ஸ்நானபானம், சாப்பாடு முதலியவற்றை முடித்துக்கொண்டு திரும்பி வந்தால், அப்பொழுதும் அவர் வாய், 'புகழ்பாடா வாயுண்டோ?' என்றுதான் பாடிக்கொண்டிருக்கும். இந்தப் பாட்டில் இன்னும் மூன்று விஷயங்களுண்டு. வாணன் பெயர் எழுதா மார்பு, கொடி தாங்கி நில்லாத கொம்பு, அடி தாங்கி நில்லா அரசு ஆகிய மூன்றையும் பற்றிப் பின் மூன்றடிகளில் வருகிறது. முதலடிக்கு இவ்வளவு நேரமானால் பின் மூன்றடிகளுக்கு மிடையே எத்தனை மணிநேரம் 'வாய்தா' போடப்படும் என்பதைக் கணிக்கவே முடியாது என்று சொல்லலாம். இவ்வாறு அழகிய ஒரு கவியை எடுத்துக்கொண்டால், ஸ்ரீ டி. கே. சி., அதை எண்ணிறந்த முறை பாடிப்பாடி, தம் உள்ள நிலையின் உயரத்திற்கு வரும்படி கேட்போரையும் இழுத்துச் செல்லும் ஆற்றல் படைத்திருக்கிறார். இதனால்தான் தேனில் தோய்ந்த வண்டை அவருக்கு ஈடாகக் கூறினேன். வண்டு ஓரளவுக்குக் கட்டுப்பட்டு ரீங்காரம் செய்யும்படி நாம் வற்புறுத்த முடியுமா? மேலும் அது நமக்காகவா முரலுகின்றது? ரீங்காரத்தை ஆரம்பித்தவுடனே அது தன்னை மறந்து ஓர் வெறியில் ஆழ்ந்து விடுகிறதல்லவா? பாடும்பொழுது இத்தகைய ஒரு வெறியை, தன்னை மறந்த ஒரு லயத்தை, நாம் டி. கே. சி. யிடம் பார்க்கிறோம். இந்த வெறிதான் கேட்போரைத் தொத்திக்கொள்ளும் சுபாவமுடையது; வெறுஞ் சொற்களுக்கு இந்தச் சக்தி ஏது? மேலும் டி. கே. சி. யின் உள்ளம் காவிய ரசனையில் ஊறிப்போயிருக்கிறது. கவிகளில் மகா கவியின் உள்ளக் கிடக்கையைக் காண்பதில் அவர் மகா சமர்த்தராய் விளங்குகிறார். வேறோரிடத்தில் அவருடைய பிரசங்கக் குறிப்புக்கள் வெளியிடப் பட்டிருக்கின்றன. அவற்றைப் பார்த்தால் இவ்வுண்மை விளங்கும்.

மேற்கூறிய அன்பர்களின் இடைவிடாத முயற்சியினால் தற்காலம் தமிழ் நாட்டில் கம்பனைப் பற்றி மிகுந்த உற்சாகம் ஏற்பட்டிருக்கிறது. இந்த அறிஞர்களும் மற்ற அறிஞர்களும் சேர்ந்து கம்பனுக்குச் செய்து முடிக்க வேண்டிய பல வேலைகள் காத்து நிற்கின்றன. இப்பொழுது ஏற்பட்டுள்ள உற்சாகம் விழலில் பாய்ந்துவிடாதபடி பாதுகாத்துப் பயன்படுத்திக்கொள்ள வேண்டியதும் நமது



கடமையாகும். இவை சம்பந்தமாக இப்பொழுது அவசரமாக நாம் கவனிக்க வேண்டிய விஷயங்கள் எவை?

1. முதலில் கம்ப ராமாயணத்திற்குப் பிழையில்லாத ஒரு புதிய பதிப்பு அவசியம். இது பல ஏடுகளை ஒப்பிட்டுப் பார்த்து மிகுந்த சிரமத்துடன் செய்து முடிக்கப்பெற வேண்டிய காரியம். இதில், பழங்காலத்துக் கற்றுச் சொல்லிகள் எழுதிவைத்தவைகளை மட்டுமே கவனிக்க வேண்டுமென்பதில்லை. ஏனெனில் எழுத்தாளர் பலரும் காவிய ரசனையுள்ளவர்கள் என்று சொல்லமுடியாது; கைத்தவறுகள் அடிக்கடி நேர்ந்திருக்கலாம்; அவர்களில் அநேகர் கூலிக்கு எழுதியவர்களே தவிரக் கவிவாணரல்லர் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. வீணையின் நயம் தெரியாத ஒருவனுக்கு எந்தத் தந்தி எங்கு அறுந்திருந்தாலென்ன? கவிகளில் ஓரெழுத்தோ, ஒரு சொல்லோ மாறி விழுந்து விட்டால், அது எழுத்தாளரின் மனவீணையில் அபத்தமான, கடூரமான ஒரு ஸ்வரத்தை எழுப்பியிருக்கும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. இக்குறையை நிவர்த்திப்பதற்கு இரண்டு வழிகள்தான் தெரிகின்றன. ஒன்று, பல பாடங்களிலுள்ள ஒரு பிழை வேறு எந்தப் பாடத்திலாவது சரியாகக் கிடைக்கிறதா என்று தேடுவது. மற்றொன்று. கம்பனைக் கற்றுக் கற்றுத் தேர்ந்து பண்பட்ட உள்ளத்திற்கு எப்படியிருந்தால் பொருத்தம் என்று தோன்றுகிறதோ அப்படியே திருத்திப் பல அறிஞரிடமும் ரஸிகரிடமும் திருத்தத்தைக் காட்டி அங்கீகாரம் பெறுவது. இப்படியாவது, எந்த ஏட்டிலும் காணப்படாத ஒரு திருத்தத்தைச் செய்யவேண்டிய அவசியமென்னவென்றால், கவியரசன் கம்பன், எந்த இடத்திலும், எப்பொழுதேனும் அபத்தமாகப் பாடியிருக்க முடியாதென்ற நம்பிக்கையேயாகும். வேறு பல புலவர்கள், தம் வாழ்க்கைக்கும், உள்ள நிலைகளுக்கும் தக்கபடி பலபடப் பாடியிருப்பது உண்மைதான். அவர்களுடைய பாடல்களில் நல்லவையும் மட்டமானவையும் கலந்திருக்கின்றன. ஆனால் நமக்குக் கிடைத்திருக்கும் ராமாயணத்தை வைத்துக்கொண்டே பார்த்தாலும், கைதேர்ந்த கவிச்சிற்பியாகிய கம்பன், எங்கும் வழுக்கி விழுந்திருக்க முடியாது என்றே தோன்றும். ஸ்ரீ டி. கே. சி. கம்பன் தவறாகப் பாடியிருக்கவே முடியாது என்ற சித்தாந்தமுடையவர். காவியத்தில் ஏதாவது ஓரிடத்தில் ஒரு பாத்திரத்தின் குணவருணனை கூறப்படுவதாக வைத்துக் கொள்வோம். அந்த வருணனைச் சித்திரத்திற்கு இடையூறாக, அதை விகாரப்படுத்துவதாக, முன்னும் பின்னுமுள்ள கவிகளோடு இணைந்து பொருந்தாமல், இருக்கும் கவிகளை டி. கே. சி. 'இடைச் செருகல்கள்' என்று சொல்லுவதற்குக் கூசுவதேயில்லை. அவருடைய சொந்தப் புஸ்தகத்தில் அந்தப் பாட்டுக்களை அடித்தும் விடுகிறார். இத்துடன் அவர் வேலை நிற்கிறது. விகாரப் படுத்தும் இப் பாட்டுக்கள் இல்லாத ஏடுகள் எங்காவது இருக்கின்றனவா என்று தேடிப் பார்ப்பது நம் பொறுப்பு. எந்த ஏட்டிலும் அப்படிக் கிடைக்கவில்லையென்றால்—? என்றாலும் திருத்திவிட வேண்டியதுதான் என்பது டி. கே. சி.யின் அபிப்பிராயம். "சாதாரண அறிவுக்குப் பொருத்தமான திருத்தங்களையுமா செய்யக்கூடாது? இத்தனை வருஷங்களாகத் தனித்தும், பல பேர்களைக் கூட்டி வைத்தும், திரும்பத் திரும்பக் கம்பனைப் படித்த நான் அக்கிரமமாக ஏதேனும் திருத்தம் செய்யத் துணிவேனா? நான் இலக்கிய-மனச்சாட்சியே (Literary Conscience) இல்லாதவனா?" என்று டி. கே. சி. ஒரு முறை உள்ளமுடைந்து என்னிடம் கேட்டார். பால காண்டமும், யுத்த காண்டமும் தவிர மற்ற காண்டங்களையெல்லாம் அவர் படித்துப் படித்துப் பார்த்துத் திருத்தி வைத்திருக்கிறார்.

2. கம்பனுடைய விசேஷப் பதப் பிரயோகங்கள் முதலியவற்றை விளக்கத் தனியான ஒரு சிறு 'கம்பன் அகராதி, எழுதப்பட்டால் புதிதாய்க் கம்பனைக் கற்க முற்படும் மாணவருக்கு உற்ற துணையாயிருக்கும்.

3. கம்ப ராமாயணம் பெரிய பாரகாவியமாயிருப்பதால், அதன் அளவே பலரைப் பயமுறுத்தி விடுகிறது. ஆரம்பத்தில் பிரியத்துடன் கம்பனைக் கற்பதற்கு ஒரு

வழிகாட்டியாகக் 'கம்பனிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட காட்சிகள்' (Scenes from Kamban) என்று ஒரு நூல் அவசியம் வெளிவர வேண்டும். அக்காட்சிகளின் மூலத்தை அப்படியே வெளியிடுவதுடன், அவற்றையும் கதைத் தொடர்பையும் விளக்கும் சிறு சிறு முகவுரைகளையும் பதிப்பிக்க வேண்டும்.

4. கம்பனைப் பற்றியும், அவன் காவியத்தின் கட்டுக்கோப்பு, கவிதை ஆகியவற்றைப் பற்றியும் பல ஆராய்ச்சிகள் வெளிவரவேண்டும்.

5. கம்பன் பிறந்த இடமாகிய தேரழுந்தூரும் சமாதியடைந்த இடமாகிய நாட்டரசன்கோட்டையும் மதிப்பிற்குரிய புனித ஸ்தலங்களாகப் பாவிக்கப் படுவதோடு, ஆங்காங்குள்ள ஞாபகச் சின்னங்கள் தமிழ் நாட்டார் அனைவராலும் பாதுகாக்கப்படவேண்டும். மேற்கண்ட இரண்டு இடங்களிலும் என்றும் கம்பனை நினைவுறுத்தும்படியான ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

நாம் செய்யவேண்டிய காரியங்கள் கம்பனிடம் நமக்குள்ள ஆர்வத்தின் அளவைப் பொறுத்தவை. பிற நாடுகளில், நம் நாட்டிலேயே பிற மாகாணங்களில், கவிகள் போற்றப்படும் முறைகளை நன்கறிந்து நாமும் நம் கவிகளைப் போற்றுவோமாக. கவிகளுள் கவியான கம்பனை நாம் மறந்தால் நம்மையே உலகம் மறந்துவிடும் என்று சொல்வது மிகையாகாது. தேடற்கரிய பொக்கிஷம் நம்மைத் தேடி வந்து அடைந்திருக்கிறது. நாம் வேண்டினால், அது என்றும் நம்முடையதாகவே இருக்கும்.

இவ்வாண்டு ஆங்காங்கே கொண்டாடப்பட்ட கம்பன் விழா, வருகிற வருஷங்களில் தமிழ்நாடு முழுவதிலும், தமிழர் உள்ள வெளிநாடுகளிலும், நாடும் நகரும் நன்கறிந்து களிக்கும்படி, கொண்டாடப்படும் என்று நம்புகிறேன். கம்பனுக்கு விழாவெடுப்பது கலைமகளுக்கு விழாவெடுப்பதாகும்.

---


# மணிக்கொடிப் பிரசுரங்கள்

1. **பொம்மையா, மனைவியா ?**
   க. நா. சுப்ரமண்யம் — ரூ. 0 8 0

2. **உலகத்துச் சிறு கதைகள்**
   'புதுமைப்பித்தன்' — ரூ. 1 0 0

**மணிக்கொடி புத்தகசாலை, ஜி. டி., மதராஸ்.**


# கம்பர் மாண்பு *

டி. கே. சிதம்பரநாத முதலியார்

ஆயிரம் வருஷங்களுக் கிடையில் தான் ஒரு கவி அவதரிக்கிறான் என்று சொல்வது உண்மையா யிருக்கிறது. கலைமகள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய், லட்சக்கணக்கான ஆண்டுகளாய்த் தமிழை வளர்த்து, கம்பனையும் நமக்குத் தந்திருக்கிறாள் என்று சொல்லலாம். தமிழ்க் கவிகளுடன் மட்டுமில்லாமல், உலகத்தின் மற்ற கவிகளுடனும் ஒப்பிட்டுப் பார்த்தாலும், கம்பன் மிக உயர்ந்த மகா கவியாக விளங்குகிறான். இது நான் மட்டும் சொல்வதில்லை. எனக்கு இரண்டு பாஷைகள் தான் தெரியும். மேல் நாட்டுப் பாஷைகள் பலவும், வடமொழி போன்ற நம் நாட்டுப் பாஷைகளும் தெரிந்திருந்த காலஞ் சென்ற வ. வெ. சு. அய்யர் சொல்லியிருக்கிறார். அவர்தான் இதைத் தைரியமாய்ச் சொல்ல அருகதை யுடையவர். அவரை நாம் அனைவரும் பாராட்டவேண்டும். இப்போது கம்பர் மகா கவியா அல்லவா என்ற சந்தேகம் எதற்கும் இடமில்லை. அவர் கவிச்சக்ரவர்த்தி. அவர் மேல் நாடுகளில் தோன்றியிருந்தால், தங்கப் பாளங்களிலே அவர் காவியத்தைப் பொறித்துப் போற்றியிருப்பார்கள்.

வால்மீகி ராமாயணத்தை நன்றாக அனுபவித்தறிந்த ஹைகோர்ட் ஜட்ஜ் சேஷகிரி அய்யர் கம்பனுக்குச் சமானமாகக் கதைப் பாங்கு, பாத்திரங்களை அமைக்கும் பாங்கு வேறு எவராலும் செய்ய முடியாது என்று சொல்லியிருக்கிறார்.

பத்து வருஷங்களுக்கு முன்னால், சென்னைச் சர்வகலாசாலை சம்பந்தப்பட்ட 'அகாடமி'யில் கம்பனைப் பற்றி ஒரு முறை பேசினேன். அப்பொழுது தலைமை வகித்த மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ் திரு. வி. வி. ஸ்ரீனிவாசய்யங்கார் அவர்கள் தாம் கம்பனைப் படித்துக் கேட்ட விவரத்தை எடுத்துச் சொன்னார்கள். மூன்று வருஷ காலம், அவர்கள் எந்த ஊருக்கு, எந்தக் கேஸுக்குப் போனாலும், பால சரஸ்வதி கிருஷ்ணமாசாரியார் என்ற தமிழ் வித்வானைக் கூடவே அழைத்துக்கொண்டு போவார்களாம். ரயிலிலும், காரிலும், எங்கும் கம்பனைப் படிக்கச் சொல்லிக் கேட்டுக் கேட்டு அநுபவித்திருக்கிறார்கள். அப்படிக் கேட்டதன் பயனாக அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், "கம்பனின் அற்புதமான தத்துவம் உலகிலேயே இல்லை. இது மிகப்பெரியது" என்பதே.

ஆனால், நமக்கு எதுவும் முதலில் மேல்நாட்டார் கண்டுபிடித்துப் புகழ்ந்த பிறகு தானே தெரிய வரும். நமது சிற்பங்களையும், கலைகளையும் பற்றி மேல்நாட்டாரே புகழ்ந்திருக்கிறார்கள். தென்னாட்டிலுள்ள சிற்பச் செல்வங்களைப்போல், வடநாட்டிலோ, மேல்நாடுகளிலோ, உலகின் வேறு எப்பகுதியிலோ கிடையாது. ஆனால் கம்பனின் காவியத்தை வெளிநாட்டார் கற்று அநுபவிக்க முடியுமா? அது எதிர்பார்க்க முடியாத காரியம். கவியை மொழிபெயர்க்கவும் முடியாது.

* *

## கவி என்பது என்ன ?

எதுகையும் மோனையும் வைத்துப் பள்ளிக்கூடத்து மாணவர்களும் பாட்டுப் பாடலாம். அது கவியாகாது, வெறுஞ்

* இம்மாதம் 2, 3 தேதிகளில் காரைக்குடியிலும், 4-ந்தேதி நாட்டரசன்கோட்டையிலும், 5-ந்தேதி கொத்தமங்கலத்திலும் கம்பர் விழாவின்போது செய்த சொற்பொழிவுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட குறிப்புக்கள்.

செய்யுள்தான். அதில் இசையும் பொருந்தியிருக்கும், படிக்கவும் ரஸிக்கும். ஆயினும் கவியாகாது. ஆன்மாவுக்குள் ஒரு தத்துவம் இருக்கிறது. அது உணர்ச்சியாக வெளிவரும்பொழுது கவியாகிறது. கவி என்பது தாமரை மலரைப் போன்றது. தாமரையின் அழகும், நிறமும், தோற்றமும் எப்படி அமைக்கப்பட்டிருக்கின்றன? இதை யாரால் சொல்ல முடியும்? சிருஷ்டி காலத்திலிருந்து வந்த ஒரு ரகசியமல்லவா அதனுள்ளே அடங்கி யிருக்கிறது!

'காக்கைச் சிறகினிலே—நந்தலாலா
நின்றன் கரிய நிறம்காணுதட ா-நந்தலாலா!'

என்று பாரதியார் பாடியது போல், காக்கைச் சிறகிலே அந்த அற்புதமான கரிய நிறம் எப்படி அமைக்கப்பட்டிருக்கிறது? இது பெரிய ரகசியமல்லவா? இதுபோல் தான் கவியும். கவி, எதுகை, மோனை முதலிய வரம்புகளையுடைய தாயினும், அது அவற்றிற் கெல்லாம் அப்பாற் பட்டது. கவியை அப்படியே முழுமையாக வைத்துப் பார்த்தால் தாமரை மலரைப் போல்தான். அழகுடைய பொருள் எப்பொழுதும் ஆனந்தத்தைக் கொடுப்பது என்று இங்கிலீஷில் சொல்லுவார்கள். அதுபோல் கவி அழகுடையது, இன்பமளிப்பது. நல்ல கவியைத் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டே யிருக்கலாம்; நாவு சலிக்காது.

கவி விஷயமாக மேல் நாட்டாருக்குத் தெளிவான அபிப்பிராயமில்லை. வசனத்திலும் கவி இருப்பதாகச் சொல்கிறார்கள். அது எப்படி இருக்க முடியும்? கவியிலே முதலில் பொருளைப் பார்க்கக்கூடாது. இதன் உருவமே, அமைப்பே நம்மை அப்படியே கவர்ந்துவிடவேண்டும். கவிக்குத் தனிஉருவம் இருக்கிறது. அது அனாதியாக ஏற்பட்டு வந்திருக்கிறது. பல வருஷங்களாகப் பண்பட்டு வந்த ஒரு ரூபத்தில் கவி அமைந்து விடுகிறது. வெண்பா, விருத்தம் ஆகியவை அவற்றிற்குரிய சீர், அசைகளை வைத்து, இயற்றுபவரின் சாமர்த்தியத்தால் ஆக்கப்படுகின்றன. கவிகளுக்கு இம்மாதிரி உருவம், கட்டுக்கோப்பு அமைக்கப்பட்டிருப்பது வெறும் செப்படி வித்தைக்கல்ல. அகராதி பார்த்துக் கவி பாடுவது கவியாகுமா? சாமானிய ஜனங்களுக்கு வியப்பை யுண்டாக்குவதற்காகவா மோனை எதுகைகளெல்லாம் ஏற்பட்டிருக்கின்றன? இல்லை. சீர், தளையெல்லாம் எப்படி ஏற்பட்டன? மறுபடி அந்தத் தாமரை மலரைப் போலவே தான். உலகம் படைக்கப்பட்ட காலத்திலிருந்து ஒவ்வொரு பொருளும் எப்படி அமைக்கப்பட்டு வந்ததோ அப்படித்தான் இவையும். இவ்வாறு கவி தாகூர் சொல்லியிருக்கிறார். ஆங்கிலத்தில் அவர் கூறியிருப்பதாவது:

"There are foolish persons who think metre is a species of verbal gymnastics or legerdemain of which the object is to win the admiration of the crowd. That is not so. Metre is born as all beauty is born the universe through. The current set up within well-defined bounds gives metrical verse power to move the minds of men."

கவியிலிருக்கிற இசைப் பண்புகள் அனாதியானவை. தமிழில் ஒரு கவி வந்ததென்று சொன்னால் அது தமிழ் பாஷை தோன்றிய முதலேயாகும்.

## பிள்ளையே தாய்க்கு ராஜா

தன்னுடைய கவியை ரசிப்பவனே உலகில் சிறந்தவன் என்று கவியை இயற்றுபவன் எண்ணுகிறான். அளவிறந்த மகிழ்ச்சியை அடைகிறான். தான் பெற்றெடுத்த குழந்தையைப் பற்றித் தாயார் என்னென்ன கனவுகள் காண்கிறாள்? அவன் எவ்வளவு உயர்ந்தவனாக வரவேண்டுமென்று எண்ணுகின்றாள்? கவிகளும் தாய்மார்களைப் போன்றுதான். பிள்ளையும் தாயும் எப்படி தேகத்தோடு, உள்ளத்தோடு, உயிரோடு ஒட்டியவர்களோ, அப்படியே கவியும். தன் பிள்ளையைத் தாயார் "ராஜா" என்று அழைக்கிறாள் அன்போடு. இது உண்மை; அரசனது ஆணையைக்கூட மீற எண்ணுவாள்; ஆனால் தன் மைந்தனை 'ராஜ'வின் ஆணையைத் தட்ட மாட்டாள்.



## கவியால் புகழப்படும் ரசிகன்

வாணன் என்ற வள்ளல் கம்பரின் கவியில் ஈடுபட்டவன். வாணன் தம் கவியை அனுபவிக்கிறான் என்பதற்காகக் கம்பர் அவன் மீது கொண்டிருந்த பிரியம் அளவிட முடியாது.

"வாணன் புகழுரையா வாயுண்டோ?
பைந்தமிழ்தேர்
வாணன் பெயரேழுதா மார்புண்டோ?
கோடிதாங்கி நில்லாத [வாணன்
கோம்புண்டோ? உண்டோ
அடி தாங்கிநில்லா அரசு?"

இந்தப் பாட்டில் பாவம் நன்றாக வெளிப்பட்டுத் தெரிகிறது. வாணனுடைய புகழைச் சொல்லாத வாயுண்டோ? எல்லாருடைய வாயும் வாணனுடைய புகழைப் பற்றி உரைத்துக் கொண்டிருக்கின்றது. 'பைந் தமிழ் தேர் வாணன்'—அழகிய செழுமையான தமிழை ஆராய்ந்து எடுத்து அனுபவிக்கின்ற வாணன்—என்று குறிப்பிடப்படுகிறது. அப்படிப்பட்ட வாணனின் பெயரை எழுதிக் கொள்ளாத ஒரு மார்பாவது உண்டோ? மறுபடியும் தனிச் சீரில் 'வாணன்' என்று மூன்றாந்தரம் உரைப்பது கவனிக்கத்தக்கது. 'மரங்களிலுள்ள ஒரு கொம்பாவது அவனுடைய கொடி தாங்காதிருக்கிறதா? அவன் காலின் கீழ்ப் படாத அரசுருமுண்டோ?' என்று மிக அழகாக இந்தப் பாட்டை அவர் பாடியிருக்கிறார்.

கவிகள் கற்பனையில் காணும் உண்மையான விஷயங்களை எழுதுகிறார்கள். நித்திய ஆனந்தத்தைத் தரக்கூடியது கவியின் கற்பனைதான். இதுதான் தமிழ். இதைச் சொல்லிக் கொண்டே இருக்கலாம். சோர்வே ஏற்படாது. எளிமை! எவ்வளவு எளிமை! கவி சிருஷ்டி தத்துவத்தில் முழுதும் நிரம்பிப் பரிணமிக்கிறது. இப்படி ஒரு பாட்டா? பதினாயிரம்! கம்பனைத் தவிர வேறு யாரால் இப்படிப் பாட முடியும்?

## உண்மைப் பூவும் காகிதப் பூவும்

கம்பனுடைய கவி ஒவ்வொன்றிலும் ஒரு தத்துவம் உண்டு. இதை அறிகிற வரையில் கவியை அனுபவித்ததாகச் சொல்ல முடியாது. கம்பனுடைய கவியை அறிகிற வரையில் மற்ற கவிகளையும் கவிகள் என்றேதான் எண்ணுவார்கள். உண்மைத் தாமரைப் பூவைப் பார்க்கிற வரையில் ஜப்பான்காரன் செய்யும் காகிதப் பூவும் பூ தான். தாமரை மலர் மலர்ந்து அதன் அழகை அனுபவிக்க ஆரம்பித்தால், காகிதப் பூவின் தன்மை விளங்கி விடு மல்லவா?

## கவிகள்தான் பாக்கியசாலிகள்

கவியைப் படிக்கும் பொழுது குறைவில்லாத ஆனந்தம் ஏற்படுகிறது. அப்படியானால் இதைப் பெற்றெடுத்த தாய்க்கு எவ்வளவு ஆனந்தம் இருக்கும்? கவிகள் தான் உலகிலேயே பாக்கியசாலிகள், மகிழ்ச்சியாளர்கள். அவர்கள்தான் உலகத்திலெல்லாம் செல்வம் நிறைந்தவர்கள். ஆனந்தத்தில் திளைப்பவர்கள்.

## தமிழின் பாவ உணர்ச்சி

தமிழ்க் கவியிலுள்ள பாவத்தை யறிய தமிழராகப் பிறந்திருக்கவேண்டும். தமிழ் ஆசிரியரிடத்துப் பாடங் கேட்காதிருக்க வேண்டும். பாவமில்லாத பாட்டுக்களைச் சொல்லிக்கொடுத்து ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். பாவம்--அதற்கு எளிமைவேண்டும். கலைமகள் கவியை வளர்த்தாள். கடைசியில் கம்பனையும் அளித்தாள். இதை மறக்க முடியுமா?

## ஆங்கிலேயரும் கவியும்

"ஆங்கிலேயர்கள் கூட்டத்தில் 'வெடிகுண்டு வருகிறது' என்று சொன்னால் கூடப் பயப்படமாட்டார்கள். ஆனால் கவி என்றால் எடுத்து விடுவார்கள் ஓட்டம்" என்று ஒரு ஆங்கிலேயரே எழுதியிருக்கிறார். அப்படியானால் 5000 மைல்களுக்கு அப்பாலுள்ள, அல்லது இப்பாலுள்ள, நமக்கு ஆங்கிலேயக் கவி எப்படி யிருக்கும்? "நம்முடைய தாய்ப்பாஷையிலுள்ள கவிகளை அறிய முயற்சிப்பதை விட்டுப் பிற பாஷைகளிலுள்ளவற்றை மொழி பெயர்த்து அனுபவிக்க எண்ணுவதானது, தன்னுடன் கூடிக்கொண்டிருக்கும் மனைவியிடத்திலிருந்து அன்பைப் பெறுவதற்கு வக்கீலைத் தேடுவதற் கொப்பாகும்" என்று தாகூர் சொன்னார்.

தாகூர் ஆங்கிலத்தில் சொன்னது :

"Trying to understand the soul of poetry through a language which is not your mother-tongue is just like trying to get the smiles of your sweet-heart through your attorney."

நாட்டுக் கலைகள் :

அந்தந்த நாட்டுக் கலைகள் அவரவர்க்கே உரியது. கலைகளை மட்டும் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்குக் கொண்டு போக முடியாது. ஆங்கிலேயர் தமிழ்க் கவியின் பாவங்களை உணர்ந்து அநுபவிக்க முடியாது. இதனால்தான் வருஷக் கணக்காக இங்கிலீஷ் படித்தும், கடைசியில் ஒன்றும் தெரியாதவர்களாக நிற்கிறோம். சொந்தப் பாஷையில்தான் நாம் உணர்ச்சிகளையும் பாவங்களையும் உணர முடியும். மேலும் வருவாய்க்காகவோ, பண லாபத்திற்காகவோ கற்பதிலும் பயனில்லை. அது கல்வி யாகுமா? இரண்டு கண்களுக்கும் முன்னால் இரண்டு முழு ரூபாய்களை வைத்துக்கொண்டு பார்த்தால், நமக்கு என்ன தெரியும்? தமிழின் நயம் நமக்குப் புலப்படுமா?

காதல் கவி :

காதல் கவி தமிழில் இருக்கிறதா என்று ஆங்கிலம் படித்த நண்பர் ஒருவர் கேட்டார். ஆங்கிலத்தில் காதல் கவி யென்றால் அதில் காதலி செத்த பிறகு அல்லது அவள் 'சாகமாட்டேன்!' என்று சாதித்துக்கொண்டிருக்கும்பொழுது "லபோ, லபோ" என்று காதலன் அடித்துக் கொள்வான். அல்லது காதலி வேறு கல்யாணம் செய்த பிறகு அந்த ஏமாற்றத்தோடு பாடியதாக இருக்கும். பெரும்பாலும் இப்படித்தான். கவியில் உண்மையல்லவா வரவேண்டும்? காதல் தத்துவம் நிரம்பிப் புடைத்து வரவேண்டும் அல்லவா?

தமிழில் ஒரு கவியைப் பார்ப்போம். குற்றாலக் குறவஞ்சி 250 வருஷங்கட்கு முன் பாடப்பட்டது. அதில் கவி, கண்டவுடன் காதல் ஏற்பட்ட விதத்தை எவ்விதமாக வர்ணித்திருக்கிறார் என்பதைப் பாருங்கள். வசந்தவல்லி சிறு பெண். பந்து விளையாடிக்கொண் டிருக்கிறாள். அந்த வேளை, குற்றால நாதர் பவனி வந்தார். அவரைப் பார்த்து அவள் இவ்வாறு எண்ணுவதாகக் கவி காட்டுகிறார் :

'முனிபரவும் இனியானோ? வேத
முழுப்பலவின் கனிதானோ?
கனியில் வைத்த செந்தேனோ?
பெண்கள் கருத்துருக்க வந்தானோ?
தினகரன்போல் சிவப்பழகும், அவன்
திருமிடற்றில் கறுப்பழகும்,
பனகமணி இருகாதுங் கண்டால்
பாவையுந்தான் உருகாதோ ?
வாகனைக்கண் டுருகுதையோ—ஒரு
மயக்கமதாய் வருகுதையோ!
மோகமென்ப திதுதானோ?—'.

இவ்வாறு தன்னைத் தானே கேட்டுக் கொள்கிறாள் காதலி.

கம்பன் கவி :

காதலைக் கம்பன் எப்படிச் சித்திரிக்கின்றான் என்பதை அறியவேண்டுமானால் அனுதாபத்தோடு பார்க்கவேண்டும். உள்ளேயிருக்கிற பாவத்தைக் கவனிக்கும்போது வெறும் சொல்லெல்லாம், அசையெல்லாம், தாமாகவே மறைந்து போக வேண்டும். ராமன் சௌந்தர்யத்திலே சூர்ப்பணகை ஈடுபட்டு விட்டாள். சீதையைத் தொலைத்து விட்டால் ராமனை எளிதில் அடைந்து விடலாமென்ற அவளது முயற்சியில் மூக்கு அறுபட்டது. இனி ராவணனைத் தூண்டி, அவனைக்கொண்டு, அதிகாரம் செலுத்தி, ராமனைத் தன் வசப்படுத்திக் கொள்ளலா மென்று கோட்டை கட்டினாள். அவள் ராவணனிடம் சீதையைப்பற்றி வர்ணிக்கிறாள். இந்த இடத்தில் கவி அமைத்துள்ள பாட்டில் காதல் சுவை எப்படிப் புரண்டு உருண்டு ஓடிக் கொண்டிருக்கிறது என்பதைப் பாருங்கள். "உனக்கு இதுவரை யில்லாத ஒரு பாக்கியம் கிடைக்கப் போகின்றது" என்று ஆரம்பிக்கின்றாள். "உனது வீரத்துக்குத் தகுந்த ஒருபெண்ணில்லை. அப்பேர்ப்பட்ட ஒரு பெண் கிடைக்கப் போகிறாள். உலகத்தா ரெல்லாரும் உன்னைப்புகழப் போகிறார்கள்" என்கிறாள்.



'மீன் கொண்டோடும் வேலை
மேகலை உலகம் ஏத்தத்
தேன் கொண்டோடும் கூந்தல்
சிற்றிடைச் சீதையென்னும்
மான் கொண்டோடும் நீயுன்
வாள்வலி உலகங் காண
நான் கொண்டோடும் வண்ணம்
இராமனைத் தருதி யென்பால்"

"உனது வாள்வலியை உலகம் போற்றும்படி ராமனைத் தருதி யென்பால்" என்று கேட்கின்றாள். "நீ என்னிடம் ராமனைச் சேர்த்து விட்டால், உலகத்துக்கு உன் வாள்வலி தெரிந்து விடும்." அவள் சொல்லுகிற சொல்லில் காதல் குலவுவதைக் காண்கின்றோம். அவள் உள்ளத்தில் திமிறிக் கொண்டிருக்கும் காதலுணர்ச்சி கவியில் மீன் மாதிரி புரண்டு உருண்டு வருவதைக் காண்கின்றோம். இந்த மாதிரி ஒரு காதல் கவியைக் காண்பது வெகு அருமை. 'மீன் கொண்டு ஊடாடும் வேலை மேகலை' என்று சூர்ப்பணகை சொல்லும்போதே, கொந்தளித்தெழுகின்ற அலைகளும், அந்த அலைகளோடு கலந்து புரளும் மீன்களும், மனத்தில் எவ்வளவு கோரமான காம உணர்ச்சியை உண்டாக்க அமைந்திருக்கின்றன என்பது புலனாகும்.

சீதையின் காதல் :

சீதை ராமனைப் பார்த்து அவனுடைய சௌந்தர்யத்தில் ஈடுபட்டு விட்டாள்.

"நாணுலாவு வில்லினோடு
பூணுலாவு பாணியும்
தூணுலாவு தோளும் வாளியோ
டுலாவு தூணியும்
வாணிலா விணுவுலாவு
மாலை மார்புமீளவும்
காணலாகு மாகினாவி
காணலாகும் ஆகுமே!

"விண்டலங் கலந்திலங்கு
திங்களோடு மீதுசூழ்
வண்டலம் பலங்கறங்கு
பங்கியோடும் வந்ததண்
கொண்டலொன் றிரண்டு கண்ணின்
மொண்டு கொண்டெனாவியை
உண்டதுண்டெனெஞ் சினின்று
முண்டதென்று முண்டரோ!"



கம்பர் கால ஆராய்ச்சி :

கம்பர் ராமாயணத்தை முடித்து திருவெண்ணெய் நல்லூரில் அரங்கேற்றுதல் நடந்தது. பல புலவர்கள் கூடியிருந்தனர். இது தேரழுந்தூரிலிருந்து 7-வது மைல். ஒரு புலவர் 3 பாடல்கள் செய்தார். மூன்று பாடல்களையும் பார்க்கும் பொழுது ஒரே சமயத்தில் ஒருவரே பாடியவைபோல் தோன்றுவதால் அப்படிக் கூறுகிறேன். அவற்றில் ஒன்றில், கம்பன் 'திருவழுந்தூருள் வாழ்வோன்' என்றும், 'காரணக் கொடையான்' என்றும் கூறப்பட்டிருக்கிறது. அதாவது, கம்பன் தேரழுந்தூரில் வாழ்ந்த ஒரு பெரிய மிராசுதார், பண்ணையார் என்று தெரிகிறது.

பாட்டைப் பாருங்கள் :

'நாரணன் விளையாட்டெல்லா
நாரத முனிவன்கூற
ஆரணக் கவிதை செய்தான்
அறிந்த வான்மீகி யென்பான்
சீரணி சோழநாட்டுத் திருவழுந்
தூருள் வாழ்வோன்
காரணக் கொடையான் கம்பன்
தமிழினாற் கவி செய்தானே.'

பழைய புத்தகங்களில் இப்படித்தானிருக்கிறது. 'வாழ்வோன்' என்பதை உவச்சன் என ஒருவர் திருத்தினர். அரங்கேற்றும்போது ஒருவரை அவருடைய ஜாதியை இப்படிச் சொல்லி இழித்துக் கூறவேண்டிய அவசியமென்ன? இது என்றும் வழக்கமே யில்லை. மேலும்,

'எண்ணிய சகாத்த மெண்ணூற்றேழின்
மேற்சடையன் வாழ்வு
நண்ணிய வெண்ணெய் நல்லூர்
தன்னிலே கம்பநாடன்
பண்ணிய விராமகாதை
பங்குனி யத்தநாளிற்
கண்ணிய வரங்கு முன்னே
கவியரங் கேற்றினானே'

இதில் சகாத்தம் என்பது சாலிவாகன சகாப்தம். சாலிவாகன சகாப்தம் 807 என்றால் கி. பி. 885, அதாவது 9-வது நூற்றாண்டு. ஆனால் யுனிவர்ஸிடிகளும், பல ஆராய்ச்சியாளரும் கம்பரை எப்படியாவது 12-வது நூற்றாண்டுக்கு இழுத்துக்

கொண்டு வந்து விடவேண்டுமென்று பார்க்கிறார்கள். எதற்காகவோ தெரியவில்லை. இன்னும் 20-ம் நூற்றாண்டுக்காரர் என்றாலும் கவலையில்லை. ஏனெனில், இவ்வளவு புதுமையான நாகரிகக் காலத்திற்கும் ஏற்றபடி அந்தப் பழம் புலவர் பாடியிருக்கிறார் என்றால் நல்லதுதானே!

கம்பர் காலம் 12-ம் நூற்றாண்டு என்பதற்கு வேடிக்கையான ஒரு பாட்டு மேற்கோளாகக் காட்டப்படுகிறது. அதைக் கவனியுங்கள் :

'ஆவின் கோடைச்சகரர்
ஆயிரத்து நூறொழித்து
தேவன்றிரு வெழுந்தூர்
நன்னாட்டு மூவலூர்
சீரார் குணதித்தன் சேய்மையாம்
காரார் காகுத்தன் கதை.'

மூவலூரில் ஆதித்தன் என்று ஒருவன் இருந்தான். அவனுடைய மகன் காகுத்தன் கதை எழுதினான். இதில் 'ஆயிரத்து நூறொழித்து' என்பது ஆண்டுக்குப் போக முடியுமா? 1100 சகரர்களை ஒழித்த என்று கொள்ளுவதுதான் பொருத்தம். ஆண்டைக் குறிக்க இடமே யில்லை.

## சடையனும் கம்பனும்

நான் திருவெண்ணெய் நல்லூருக்குப் போயிருந்தபொழுது, ஆங்கிலம் படிக்காத ஒரு படையாச்சி, ராமாயணத்திலிருந்து அந்த ஊரைப் பற்றிய ஒரு பாட்டை ஆனந்தத்தோடு பாடக்கேட்டேன். என்னுடன் வந்த நண்பர்களும் அதைக்கேட்டு ரஸித்தார்கள். கம்பர் எவ்வளவு அழகாக அதை அமைத்திருக்கிறார் என்று பாருங்கள். சடையப்ப வள்ளல் அவருடைய உற்ற தோழர்; அவர் கவிகளைக் கேட்டுக் கேட்டு ரஸித்தவர். அந்த ரஸிக வள்ளலைக் கம்பர், எங்கே வைத்து, எப்படிப் போற்றியிருக்கிறார் என்பது ஆச்சரியமாயிருக்கிறது.

இந்தப் பாட்டு சேதுவில் அணைகட்டுவதை வர்ணிக்கும் பொழுது சொல்லப்படுகிறது. வானரங்களெல்லாம் அணைகட்டக் கற்களையும், குன்றுகளையும் தூக்கிக்கொண்டு வந்து கொடுக்கின்றன. சிற்ப நிபுணனான நளன், உட்கார்ந்து கொண்டு, அவற்றை வாங்கி அடுக்குகிறான். குண்டுக் கற்களினால் சுவர் எழுப்பப்படும் பொழுது பார்த்திருந்தால் வெகு ரஸமாயிருக்கும். மேடும் பள்ளமுமான குண்டுக்கற்களைக் கொற்றன் சிற்றாள்களின் கையிலிருந்து லேசாக வாங்கி அப்படியே லாகவமாக எளிதில் வைத்து விடுவான். அவை உடனே நன்றாக அமைந்து விடும். குண்டும்' குழியும் வெளியே தெரியாது. நல்ல பக்கந்தான் வெளியில் தெரியும். நாலைந்து பேர் சேர்ந்து தூக்கிவரும் ஒரு கல்லை ஒரு கொற்றன் லாகவமாக வாங்கி அமைத்து விடுவான். இதுபோல் சில குரங்குகள் தூக்கி வந்த பெரிய மலைகளையும் நளன் சுலபமாக வாங்கி அடுக்கி வந்தான். ஆனால், ஒரு குரங்கு மிகப் பெரிய ஒரு மலையை அப்படியே தூக்கி நளனிருந்த திசையைப் பார்த்து எறிந்து விட்டது. அந்த மலை மேகங்களோடு அளாவிக்கொண்டு அவ்வளவு உயரமாயிருந்ததாம். தூக்கி யெறிந்த குரங்கு 'மாக் குரங்கு'—பெரிய குரங்கு. அது தேவைக்கதிகமான வேகத்துடன் மலையை எறிந்ததைக் கவி 'எஞ்சுற எறியவே' என்று சொல்லுகிறார். நளன் அதையும் அப்படியே 'விஞ்சையில்'—தந்திரமாக—வாங்கிவைத்து விட்டானாம். இதுதான் விஷயம். இதற்குக் கூறப்பட்டுள்ள உபமானத்தைக் கவனியுங்கள்.

திருவெண்ணெய் நல்லூரில் சடையப்ப வள்ளலிடம் பலர் தஞ்சமென்று வருவார்கள். ஒவ்வொரு நாளும் அவன் அவர்களை ஏற்றுப் பராமரித்து வந்தான். திடீரென்று ஒரு நாள் 300, 400 பேர் வந்து விட்டால் என்ன செய்வான்? எதிர்பாராமல் வந்தவர்களை அவன் புறக்கணித்தானா? அல்லது சளைத்தானா? யாதொரு சிரமுமின்றி மெதுவாக அப்படியே அழைத்துக்கொண்டு போய்த் தாங்கி உபசரித்து விடுவானாம். தஞ்சமென்ற இவர்களைச் சடையன் தாங்கியது போல் நளன் மலையைத் தாங்கினானாம். பாட்டைப் பாருங்கள்.

மஞ்சினில் திகழ்தரு மலையை மாக்குரங்கு
எஞ்சுறக் கடிதெடுத் தெறியவே நளன்
விஞ்சையில் தாங்கினன் சடையன் [வெண்ணெயில்
தஞ்சமென் றோர்களைத் தாங்குந் [தன்மைபோல்

# இனி எந்த நாட்டைப் பிடிப்பது?

ஏ. ஜி. வெங்கடாச்சாரி

ஐரோப்பாவின் படம் நாளுக்கு நாள் மாறி வருகிறது. சர்வாதிகாரிகளின் ஆக்கிரமிப்பு போகும் வேகத்தைக் கண்டு பெரிய வல்லரசுகளும் சிறிய நாடுகளும் அஞ்சுகின்றன. அடுத்தாற்போல் என்ன செய்வார்களோ, எந்த் தேசத்தின் சுதந்தரம் பறிமுதலாகுமோ என்ற நடுக்கமும், அதனால் ஏற்பட்ட திக்பிரமையும் ஐரோப்பா வெங்கும மக்களின் மனோ வேதனையை அதிகப்படுத்தி, அவர்களுடைய தினசரி வாழ்க்கையை நரகலோகமாக்கி விட்டன. இன்றைய நிலைமையை ஊன்றிக் கவனித்தால் உலக யுத்தம் வெகு சீக்கிரம் வந்துவிடு மென்று தான் எல்லோரும் நினைக்கின்றனர். இனி, எந்தப்புறம் விஸ்தரிக்கப் பார்த்தாலும் பிரிட்டன், பிரான்ஸ் அல்லது ரஷ்யாவின் நேரடியான உரிமைகளும் க்ஷேமலாபங்களும் நிச்சயம் பாதிக்கப்படத்தான் செய்யும். எனவே, ஐரோப்பிய சதுரங்கத்தில் இனி நடைபெற விருக்கும் விஷயங்கள் மிகவும் ருசிகரமா யிருப்பதுடன், உலகத்தின் எதிர்காலப் போக்கையே அடிப்படையாக மாற்றக்கூடியவையா யிருக்குமென்று நம்பலாம்.

செகோஸ்லோவேகியா சின்னாபின்னப் பட்டு, ஜெர்மனிக்குச் சொந்தமாய் விட்டதை விடப் பெரிய ஆக்கிரமிப்பு மகா யுத்தத்திற்குப் பிறகு நடைபெறவில்லை. செகோஸ்லோவேகியா சமஷ்டியில் (மூனிச் ஒப்பந்தத்துக்குப் பிறகு) மூன்று சுயாட்சி மாகாணங்கள் இருந்தன (1) பொஹீமியா—மொரேவியா. (2) ஸ்லோவேகியா. (3) ருதேனியா என்று அழைக்கப்பட்டு வந்த கார்பேதோ உக்ரேன். இந்த மூன்றில் முதலிரண்டும் ஜெர்மன் ஆதிபத்தியத்துக்கு உட்பட்ட மாகாணங்களின் அந்தஸ்துக்கு வந்து விட்டன. மூன்றாவதாகிய ருதேனியாவை ஹங்கேரி பிடித்துக்கொண்டு போலந்துக்கும் தனக்குமிடையே ஒரு பொதுவான எல்லையை ஏற்படுத்திக்கொண்டுவிட்டது.

## சேம்பர்லேன் சூழ்ச்சி

மூனிச் உடன்படிக்கை கையெழுத்தான போதே சேம்பர்லேன் செகோஸ்லோவேகியா பூராவையும் ஹிட்லரிடம் காரியாம்சத்தில் ஒப்படைத்து விட்டார். ஜெர்மன் ஜில்லாக்கள் நீங்கலாக இதர பாகங்களின் எல்லையை பிரிட்டனும் பிரான்ஸும் உத்தரவாதம் செய்வதாக ஏற்றுக்கொண்ட தெல்லாம் கண் துடைக்கும் வித்தை யென்பதை உலகமறியும். செகோஸ்லோவேகியா பூராவும் ஹிட்லரின் ஆதிக்கத்தின் கீழ் நாளடைவில் வந்துவிடு மென்றும், அதைப் போர்த்தளமாக உபயோகித்துக் கொண்டு, ரஷ்யாமீது படையெடுத்து, தன் நெடுநாளைய கனவாகிய உக்ரேனை ஹிட்லர் பிடித்துக்கொள்ள முயற்சிப்பா ரென்றும் பிரிட்டன் நினைத்தது. அம்மாதிரி ரஷ்யாவை ஜெர்மனி தாக்குவதற்குப் பக்குவமான சந்தர்ப்பங்களையும் வசதிகளையும் மூனிச் உடன்படிக்கையின் மூலம் தாங்கள் சிருஷ்டித்துக் கொடுத்து விட்டதால், இனி ஹிட்லர் நீண்ட காலம் வரை பிரிட்டனையும் பிரான்ஸையும் முக்கியமாய் பாதிக்கக்கூடிய காலனிக் கோரிக்கைகளை வற்புறுத்தமாட்டார் என்பது சேம்பர்லேனின் துணிபு. ரஷ்யாவுடன் ஜெர்மனி மட்டும் போரில் ஈடுபடுமானால், ஐரோப்பிய நிலைமையும் உலக நிலைமையும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு அனுகூலமா யிருக்கும். ஜெர்மனியின் உதவியின்றி புதிய ஆக்கிரமிப்பில் இறங்க முஸோலினி துணியமாட்டாராகையால், பிரான்ஸும் நிர்ப்பயமாய் இருக்கலாம். மத்தியதரைக் கடலில் பிரிட்டிஷ், பிரெஞ்சு உரிமைகளும் வர்த்தக மார்க்கங்களும் சுமாராக பத்திரமாகவே யிருப்பது சாத்தியமாகும். அத்தகைய யுத்தத்தில் பிரிட்டனும் பிரான்ஸும் நடுநிலைமை வகி

க்குமாகையால், அநாவசியமாய் அவற்றைப் பகைத்துக்கொள்ள ஹிட்லர் விரும்பமாட்டார். ரஷ்யாவும் ஜெர்மனியும் போரிட்டால், அதன் விளைவாக இரண்டு நாடுகளும் பலவீனப்படுவது நிச்சயம். அதன் விளைவாக பிரிட்டிஷ் ஆதிக்கம் இன்னும் கொஞ்ச காலத்துக்காவது மங்காமலிருக்கும். இவ்வாறெல்லாம் நினைத்து சேம்பர்லேன் செக்கோவை பலியிட்டார். ஆனால் அவர் நினைத்தபடியெல்லாம் ஹிட்லர் செய்வதாகக் காணோம். தவிர, முஸோலீனியும் பிரான்ஸை மிரட்டி வருகிறார். எனவே, இப்பொழுது பிரிட்டிஷ் பிரெஞ்சு ஆளும் வர்க்கத்தினருக்குச் சங்கடமேற்பட்டிருக்கிறது. செக்கோவை அடிமைப்படுத்திய ஹிட்லர், அந்நிய ராஜதந்திரிகள் நடுக்கமடைந்து என்ன செய்வது என்பதைப் பற்றி ஆலோசித்துக்கொண்டிருக்கையிலேயே மெமெல் பிரதேசத்தை லிதுவேனியாவிடமிருந்து ஸ்வீகரித்துக் கொண்டார்.

## ருமேனியா என்னவாகும்?

ருமேனியாவையும் இறுதியாகப் பிடித்துக் கொள்வதற்கு அஸ்திவாரமாக, அந்நாட்டின் பொருளாதார வாழ்க்கையை ஜெர்மனியுடன் பிணைத்துவிடும் ஒரு வர்த்தக உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார். ருமேனியா, செகோஸ்லோவேகியாவைப் போலவே, இன்னம் ஐந்தாறு மாதங்களில், பழுத்த பழம் தானாகவே வந்து விழுந்து விடுவதற்கான நிலைமையை ஹிட்லர் சிருஷ்டித்து விட முயற்சிப்பார் என்பதை நிச்சயமாக நம்பலாம். ருமேனியாவின் பொருளாதார அபிவிருத்தியில் ஜெர்மானியர் ஒத்துழைப்பதற்கு இடமளிக்கப்படுகிறது. அதாவது இந்த ஒத்துழைப்பு என்ற போர்வையின் கீழ், நாஜி இயக்கத்தை ருமேனியா வெங்கும் விரிவாகத் தோற்றுவிப்பதற்கு ஜெர்மனிக்கு வசதிகள் கிடைக்கின்றன. ஜெர்மன் யுத்த தளவாடங்கள் ருமேனியாவுக்கும், ருமேனிய பெட்ரோலில் ஒரு பகுதி ஜெர்மனிக்கும் போகுமாம். இதன் அர்த்தமென்ன? ருமேனியாவுக்கு தளவாடங்களை விற்பதாகச் சொல்லி, ஏராளமான ஆயுதங்களை அந்நாட்டில் ஜெர்மனி சேகரித்து வைக்கும். பிறகு, பக்குவமான தருணம் வரும்போது ருமேனிய பெட்ரோலை உபயோகித்து, அங்கே கொண்டு போன ஆயுதங்களைக் கொண்டு அந்நாட்டின் சுதந்தரத்தை அழித்து விடுவதாக மிரட்டலாம். அந்நிலைமையில் ருமேனிய மன்னர் கரோல், எதிர்ப்பின்றி சரணடைந்து விடக்கூடும் என்றே ஹிட்லர் எதிர்பார்க்கிறார். ருமேனியா கிடைத்து விட்ட பிறகு அதிலிருந்தும், வடக்கே லிதுவேனியா மார்க்கமாகவும் ஸோவியத் ரஷ்யாவைத் தாக்கி, உக்ரேனைப் பிடித்துக் கொள்ள முயற்சிப்பதுதான் ஹிட்லரின் 'மெய்ன் காம்ப்' திட்டம்.

## ஹங்கேரியும் போலந்தும்

திட்டம் நிறைவேற வேண்டுமானால், ஹங்கேரியைப் பகைத்துக் கொள்ளாமலிருப்பது அவசியமென்பதை ஹிட்லர் உணர்ந்திருக்கிறார். ஆகையால் தான், ருதேனியாவை ஹங்கேரி பிடித்துக் கொண்டு, போலந்துடன் பொதுவான எல்லையை ஏற்படுத்திக்கொண்டதை அவர் ஆட்சேபிக்கவில்லை. ருமேனியாவுக்கு ஹங்கேரி வெர்ஸேல்ஸ் உடன்படிக்கையின் விளைவாகப் பறிகொடுத்த டிரான்ஸில்வேனியாவை வாங்கித் தருவதாக ஆசைகாட்டி, ஜெர்மன் துருப்புகள் போவதற்கு ஹங்கேரி வழிவிடுவதற்கு இணங்கும்படி ஹிட்லர் செய்யக்கூடும்.

## போலந்து பிழைத்தது

மெமெலை ஜெர்மனி பிடித்துக்கொண்டது இணங்காவிடில் படையெடுப்பதாக மிரட்டும் பழைய உபாயத்தைப் பிரயோகித்துத்தான். மெமெலின் அந்தஸ்தை உத்தரவாதம் செய்திருந்த பிரிட்டனும் பிரான்ஸும் அழுத்தமான ஆட்சேபனைகளுடன் சும்மா விருந்துவிடவே ஹிட்லருக்குத் துணிச்சல் அதிகமாய் விட்டது. போலந்தையும் ருமேனியாவையும் ஏக காலத்தில் மிரட்டிப் பார்த்தார். கிழக்கு பிரஷ்யாவை ஜெர்மனியிலிருந்து பிரித்து வைத்துள்ள கடல் வழியையும் போலிஷ் ஆதிக்கத்தின் கீழிருந்துவரும் டான்ஸிகையும் போலந்திடமிருந்து பலாத்காரமாய் அபகரிக்கும் நோக்கத்துடன் ஜெர்மனி படை திரட்டி, எல்லைப்புறங்களில் சேமித்து வைப்பது தெரியவே பிரிட்டனும் பிரான்ஸும் கலக்கமுற்றன. போலந்துடன் பிரான்ஸுக்கு ராணுவக் கூட்டுறவு உண்டு. அது ஒருபுறமிருக்க போலந்து ஹிட்லர் வசமாகும்படி விட்டுவிட்டால் பால்டிக் நாடுகளும் பால்கன் நாடுகளும் வெகு விரைவில் ஜெர்மன் ஆதிக்கத்தின்கீழ் வந்துவிடும். இறுதியாக பிரிட்டிஷ் பிரெஞ்சு உரிமைகளையும் க்ஷேமலாபங்களையும் ஐரோப்பா வெங்கும் ரோம்-பெர்லின் பறிமுதல் செய்யக்கூடிய நிலைமையில் அது கொண்டுபோய்விடும். எனவே பிரான்ஸும் பிரிட்டனும் ரொம்பவும் கவலையடைந்து ஹிட்லரின் ஆக்கிரமிப்பினின்றும் போலந்தை உடனடியாகக் காப்பாற்றியாக வேண்டுமென்று தெரிந்துகொண்டன. போலந்து ஆக்கிரமிக்கப்பட்டால் அல்லது அதன் சுதந்தரம் பயமுறுத்தப்படுமானால் உடனே பிரிட்டனும் பிரான்ஸும் தம் முழு பலத்தையும் கொடுத்து அந்நாட்டைக் காப்பாற்றுவதாக வாக்களித்தன. ரஷ்யா, ருமேனியா, பால்கன் நாடுகள், அமெரிக்கா முதலியவற்றுடன் அவசரமான சம்பாஷணைகளை பிரிட்டனும் பிரான்ஸும் நடத்தின. செக்கோவை நிர்க்கதியாக்கி வாங்கிக் கொடுத்ததுபோல் போலிஷ் பிரச்னையிலும் சேம்பர்லேனும் பானெட்டும் நடந்துகொள்வார்கள் என்று ஒருக்கால் ஹிட்லர் எதிர்பார்த்திருக்கலாம். அந்த இரண்டு ராஜ தந்திரிகளின் அனுதாபம் எவ்வாறிருந்த போதிலும் தீவிரமாய்க் கொண்டுவந்த பொதுஜன அபிப்பிராயத்துக்கு அவர்கள் செவிசாய்க்கவேண்டியேற்பட்டதால் போலந்தின் சுதந்தரம் தப்பிப் பிழைத்தது. ஹிட்லர் நிரபராதி போல் பேசினார். ஆக்கிரமிக்கும் உத்தேசமே தனக்கு இல்லையென்றும் டான்ஸிக் கடல்வழிப் பிரச்னைகளை சம்பாஷணைகளின் மூலம் தீர்த்துக்கொள்வதே ஜெர்மன் உத்தேசமென்றும் சொல்லிவிட்டார். ஜெர்மன் சர்க்காரும் பத்திரிகைகளும் பிரிட்டனையும் பிரான்ஸையும் கேவலமாய்த் திட்டின; போலந்தை பயமுறுத்தின. ஆனால், சேம்பர்லேன் கோழைத்தனமாய் நடந்து கொள்ளாமல், போலந்துக்கு அளித்த உத்தரவாதத்தை ஒரு பரஸ்பர உதவி உடன்படிக்கையாக மாற்றிவிட்டார். இனி போலந்துக்கு அபாயமில்லையென்று கருதமுடியாது. ஹிட்லர் சற்று பின் வாங்கியிருக்கிறார். பிரிட்டிஷ் உறுதிக்கு உலைவைக்க இடைவிடாமல் முயற்சித்த பிறகு, மறுபடியும் பக்குவமான சந்தர்ப்பத்தில் போலந்தின் மீது பார்வையைச் செலுத்துவார் என்று எதிர்பார்க்கலாம்.

## முஸோலீனிக்கு உதவி

முஸோலீனி ரோம்-பெர்லின் அச்சைத் தளரவிடாமலிருப்பது தன் காரியம் கைகூடுவதற்கு இன்றியமையாதது என்று தெரிந்துகொண்டுள்ள ஹிட்லர் முஸோலீனிக்கு வெற்றி தேடித் தருவதில் முனைந்தார். லிபியாவுக்கு ஜெர்மன் ஸைன்யங்களும் போர்ச் சாதனங்களும் இரகசியமாய்ப் போயின. கோபெல்ஸும் கோயரிங்கும் இத்தாலி சென்றனர். முஸோலீனியும் சூயெஸ், ஜிபூதி, டுனிஸ் மூன்றுந்தான் தன் கோரிக்கைகளில் முக்கியமானவையென்று கர்ஜித்தார். பிரான்ஸ் ஒரு அங்குலமும் விட்டுக்கொடுக்க முடியாதென்று பதிலளித்தது. போலந்து, ருமேனியா, கிரீஸ், யூகோஸ்லேவியா, துருக்கி, பல்கேரியா, ரஷ்யா இவைகளையும் சேர்த்து ஆக்கிரமிப்பையெதிர்க்கும் முன்னணியை ஏற்படுத்த முயலவே, இத்தாலி திகிலடைந்தது.

## அல்பேனியா ஒழிந்தது

அத்தகைய முன்னணி உருவாவதற்கு முன் விரைவில் சாத்தியமான வரை புது இடங்களைப் பிடித்துக்கொள்ள வேண்டுமென்று இத்தாலி கருதியது. ஜெர்மன், இத்தாலிய இரகசிய ஏற்பாட்டின்படி, பால்கன் பிரதேசம் இத்தாலியின் ஆதிக்கத்தின்கீழ் வரவேண்டியதே. எனவே, அதற்கு முதற்படியாக, திடீரெனப் படையெடுத்து அல்பேனியாவை இத்தாலி விழுங்கி விட்டது. இதன் மூலம் ஏட்ரியாடிக் கடல் காரியாம்சத்தில் இத்தாலியின் ஏகபோகமாய் விட்டதென்று சொல்லலாம். யூகோஸ்லேவியா பிரிட்டிஷ், பிரெஞ்சு சொற்படி ஆக்கிரமிப்பையெதிர்க்கும் ஐக்கிய முன்னணியில் சேராதவாறு இனி இத்தாலி பயமுறுத்தும். பல்கேரியாவை ஒரு கருவியாக உபயோகித்துக் கொண்டு இரண்டு சர்வாதிகாரிகளும், பிரிட்டிஷ், பிரெஞ்சு

ராஜதந்திர முயற்சிகளை வேராறுக்கப் பார்க்கின்றனர். எல்லா பால்கன் நாடுகளும் அஞ்சும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பிரிட்டனும் பிரான்ஸூம் விரைவில் பால்கன் நாடுகளின் சுதந்தரத்தை உத்தரவாதம் செய்யலாமென்றும் தெரிகிறது. கிழக்கு மத்தியதரைக்கடல் பிராந்தியம் பிரிட்டனுக்கு ஜீவநாடி போன்ற பிரதேசமாகையால் பிரிட்டிஷ் சர்க்கார் தாமதமின்றி நடவடிக்கை யெடுப்பார்களென்று எதிர்பார்க்கலாம். ஸ்பெயினில் பிராங்கோ பூரண வெற்றி பெற்றும் இத்தாலிய துருப்புகள் இன்னமிருந்து வருவதால், பிரிட்டிஷ் பிரெஞ்சு மத்தியதரைக் கடல் உரிமைகளை மேற்கே ஸ்பெயினிலிருந்து கீழ்க்கோடியில் டொடாகனீஸ் ரோட்ஸ் தீவுகள் வரை மும்முரமாக பயமுறுத்தும் நிலைமைக்கு இத்தாலி வந்துவிட்டது. எனவே, பிரிட்டிஷ் சர்க்கார் பீதியடைந்துள்ளனர். அடுத்த ஆக்கிரமிப்பில் இறங்க முயற்சித்தால் யுத்தம் கிளம்பலாமென்றே தோன்றுகிறது. எல்லாம் பிரிட்டிஷ் சர்க்காரின் போக்கையே பொறுத்திருக்கிறது. செகோஸ்லோவேகியாவின் சுதந்தரத்தை செப்டெம்பரில் பலியிடாமலிருந்திருந்தால், இன்று பிரிட்டனுக்கு இவ்வளவு அபாயம் ஏற்பட்டிருக்காது.

## உண்மையான கூட்டுறவுப் பாதுகாப்பு அவசியம்

அன்று சுயநலத்தை யுத்தேசித்து செக்கோவின் சுதந்தரத்தை உத்தரவாதம் செய்ய மறுத்த பிரிட்டன், இன்று அதே சுயநல ஏகாதிபத்திய அவசியத்திற்காகத்தான் போலந்துக்கும் பால்கன் நாடுகளுக்கும் உத்தரவாத மளிக்கும்படியான நிலைமை ஏற்பட்டு விட்டது. இந்த ஏகாதிபத்திய சுயநலந்தான் சங்கத்தை உடைத்து கூட்டுறவுப் பாதுகாப்பை நிஷ்பய்னுக்குவதற்குக் காரணமாயிருந்தது. எனவே ஏகாதிபத்திய சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டிராமல் சர்வதேச ஒழுக்க முறையை அடிப்படையாகக் கொண்ட ஒரு கூட்டுறவுத் திட்டத்தை அமைத்து, பிரிட்டன் பிரான்ஸ் ரஷ்யா மூன்றும் ஒரு ஆக்கிரமிப்பை யெதிர்க்கும் முன்னணியின் மூலபலமாகாவிடில் ஹிட்லரையும் முஸோலினியையும் தடை செய்யவே முடியாது.

ராணுவக் கூட்டுறவை இப்பொழுதே ஏற்படுத்திக் கொள்வதன் மூலந்தான் இனி ஆக்கிரமிப்பு நேரிடாமல் தடுக்கலாமென்று ரஷ்யா கருதுகிறது. பிரிட்டன் அதற்குத் தயாராயில்லை. வெறும் வாய்ச்சொல் வீரத்தில் காலங் கழிக்காமல், நிதர்சனமாகக் காரியத்தில் இறங்கவேண்டுமென்பது ரஷ்யாவின் விருப்பம். பிரான்ஸூம் பிரிட்டனும் நிச்சயமாக ராணுவக் கூட்டுறவில் கலந்து கொள்ளுமென்று தெரிந்தாலொழிய, ருமேனியாவின் சார்பாகவோ, அல்லது போலந்தின் சார்பாகவோ முன் கூட்டியே ஜெர்மனியை எச்சரித்து வம்புச் சண்டைக்கு அழைக்க ரஷ்யா தயாராயில்லை. கிழக்கு ஐரோப்பாவில் புதிய ஆக்கிரமிப்புகளில் ஜெர்மனி இறங்குமானல், அதைத் தடை செய்யும் முழுப் பொறுப்பும் தன் தலை மீது விழுந்துவிடாமலிருக்கவேண்டுமென்று ஸ்டாலின் விரும்புவதில் ஆச்சரியமில்லை. தாங்கள் மட்டும் ஒதுங்கி நின்று ரஷ்யாவும் ஜெர்மனியும் போரிட வேண்டுமென்பது பிரிட்டிஷ், பிரெஞ்சு கருத்தாகையால், அதற்காக பிரிட்டன் தயாரிக்கக் கூடிய வலைக் கண்ணிகளில் சிக்க ரஷ்யா தயாராயில்லை.

## ரஷ்யாவை இப்பொழுது ஹிட்லர் எதிர்க்கமாட்டார்

இந்த நிலையில் ஹிட்லர் என்ன செய்வார்? போரில் இறங்காமலேயே எல்லைப் புறங்களில் திடீரென படைகளைக் கொண்டுவந்து வைத்துக்கொண்டு, பயமுறுத்தி இதுவரை ஹிட்லர் வெற்றி பெற்று வந்திருக்கிறார். ஆனால், ரஷ்யாவின் வாலை மிதித்தால் உடனே அது கடிக்கும் என்பது ஹிட்லருக்குத் தெரியும். ரஷ்யாவுடன் இப்பொழுது யுத்தத்தில் ஈடுபட்டு, தோல்வியைச் சம்பாதிக்க அவர் விரும்பவில்லை. எனவே, போலந்திடமிருந்து டான்ஸீகைப் பெறுவதிலும் ருமேனியாவைக் கூடவிருந்து குழிபறிக்கும் வேலையிலும் சுறுசுறுப்பாயிருக்கையிலேயே, சுலபமான வேறு வெற்றிகளைப் பெறவும், காலனிகள் வாபஸாக வேண்டுமென்ற இயக்கத்தைப் பலப்படுத்தவும்



ஹிட்லர் முயற்சிப்பது திண்ணம். டென்மார்க்குக்குப் பறிகொடுத்த ஷ்லஸ்விக்-ஹோல்ஸ்டீன் மாகாணத்தின் பகுதியைச் சுலபமாக மீண்டும் பெற்று விடலாம்.

## இத்தாலிக்கு ஆதரவு

எல்லாவற்றிற்கும் மேலாக, இத்தாலி, ரோம்-பெர்லின் அச்சிலிருந்து விலகாமலிருப்பதற்காக, அடுத்த சில மாதங்களில், பிரான்ஸிடம் இத்தாலி கோருபவைகளையெல்லாம் முழு ஜபர்தஸ்துடன் (பலாத்காரத்துடன்) ஹிட்லர் ஆதரிக்கக்கூடும். தன் கோரிக்கைகளைப் பெற இத்தாலி ஆயுத பலத்தையே நம்பியிருப்பதாக முஸோலினி கூறியிருப்பதையும், ஜெர்மனி தோளோடு தோள் கொடுத்து, இத்தாலியின் கோரிக்கைகளை ஆதரிக்கும் என்பதையும் சேர்த்துப் பார்த்தால், இனி, 'மேற்கு ஐரோப்பாமீது—முக்கியமாக பிரான்ஸ்மீது—ரோம்-பெர்லின் அச்சின் கவனம் திரும்பக்கூடும் என்று எதிர்பார்க்கலாம். அல்பேனிய ஆக்கிரமிப்பு இதற்கு முதற்படி தான்.


**வளையல் வாங்கலியோ வளையல்!**

மதராஸ் டி. சி. என். கோல்டன் மெடல் ஜ்வெல்லரி மார்ட்

பலவித அழகிய வளையல்கள்

அசல் தங்க வளையல்களைவிடப் பிரகாசத்திலும் நிறத்திலும் குறைந்ததல்ல.



கறுக்காது

2 வருஷம் உத்தரவாதம்—மிகவும் அழகாக இருக்கும்

| | | |
|---|---|---|
| பெரிய சைஸ் 2" அகலமும் அதற்கு மேற்பட்டதும் ஜதை | | ரூ. 3–0–0 |
| மத்திய சைஸ் $1\frac{3}{4}$" முதல் 2"க்குள் ஜதை | ... | ரூ. 2–8–0 |
| குழந்தை சைஸ் $1\frac{3}{4}$"க்கு உட்பட்டது ஜதை | ... | ரூ. 2–0–0 |

வி. பி. செலவு 1 ஜதை முதல் 6 ஜதை வரை அணா 8

அணிந்திருக்கும் வளையலின் சுற்றளவை இங்கியால் ஒரு காகிதத்தில் குறித்து அனுப்பவும்

குறிப்பு:—'மணிக்கொடி" பெயரைக் குறிப்பிட்டு எழுதுகிறவர்களுக்கு மாத்திரம், விலையில் ரூபாய்க்கு ஒரு அணா வீதம் கமிஷன் கொடுக்கப்படும்.

2 அணா பெறுமானமுள்ளதும், பல அழகிய படங்களுள்ளதுமான எமது கேட்லாக் இனும்

குறிப்பு:—ஸிலோன், பர்மாவுக்கு வி. பி. சார்ஜ் அணா 12.

F. M. S.க்கு ரூ. 2. ஆர்டருடன் முன்பணம் அனுப்பவும்.

**டி. சி. நாகலிங்கப்பா அண் கோ,**

280, வால்டாக்ஸ் ரோடு, :: பார்க் டவுன், மதராஸ்.

முகப்புப் படம்:

## மருதத்திணை அரசு வீற்றிருத்தல்

கோசல நாட்டிலே ஒரு ராஜ மண்டபத்திலே நடந்த நடனக் கச்சேரியைப் பற்றி கம்பர் வர்ணித்துள்ளார். அந் நாட்டின் சோலையே அரசிருக்கை மண்டபம். அதில் நடனம் செய்யும் மாதர்கள் மயில்கள்; தாமரைகள் தீபங்களாக விளங்குகின்றன; மேகங்கள் மத்தளகாரர்களாக மத்தள முழக்கம் செய்கின்றன; தடாகங்கள் அலைகளாகிய நாடகத் திரைகளை இடுகின்றன; வண்டுகள் யாழோசைபோல் ரீங்காரம் செய்கின்றன; இத்தனையையும் தன் குவளைக் கண்களை விழித்துப் பார்த்துக்கொண்டு கொலுவீற்றிருக்கிறது மருதத்திணை அரசு. இந்தக் கொலுவீற்றிருக்கும் முறையைக் கம்பர் பின்வருமாறு பாடியிருக்கிறார்:

தண்டலை மயில்க ளாடத்
தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கள் முழவி னேங்கக்
குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை எழினி காட்டத்
தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட
மருதம்வீற் றிருக்கு மாதோ.

— ரா.



# ப ய ம்

பொழுது சாயும் வேளை. சேவல் வெளியே போயிருந்தது. பெட்டைக் கோழி கொஞ்ச தூரத்தில் மேய்ந்து வந்தது. குஞ்சுகளெல்லாம் குப்பையைக் கிளறிக் கொண்டு சலசலத்தன. அப்பொழுது வெருகு ஒன்று அந்த இடத்திற்கு வந்தது. உடனே குஞ்சுகள் கலவரமடைந்து ஓட ஆரம்பித்தன. இதைக் கண்ட பெட்டைக் கோழி சிறகை விரித்துக்கொண்டு குஞ்சுகளை நோக்கி விரைந்தது. அதற்குள் வெருகைப் பார்த்துவிட்டது. அடுத்த க்ஷணம் ஒரு மேட்டில் ஏறிக்கொண்டது. வெருகும் அதே பக்கம் போகவே, பெட்டைக் கோழி பறந்து தாவி ஒரு கூரையின்மேல் நின்றது. கீழேயிருந்த வெருகின் இறுத்த பார்வை அதன்மேல் விழுந்தது. சற்று நேரம் கோழியும் வெருகையே குறிப்பாய்ப் பார்த்தது. பார்த்ததும் அதன் கண்கள் நிலைக்குத்திவிட்டன. மூச்சு விடுவது கூடத் தெரியவில்லை. தலை தொங்க ஆரம்பித்தது. உடனே.................... பெட்டைக் கோழி வெருகின் காலடியில் கிடந்தது.

# “ராக்கி நெனப்பு”

குட்டி அவ என்ன சோக்கு
    என்ன ‘சோரு’ தெரியுமா?
தீண்டாத சாதியவ
    கலியன் சாம்பான் பொண்ணுடா!
பட்டிக்குச்சு மோட்டுமேலே
    பூத்த பறங்கிபேலே
ஏண்டா அங்’ஙெ போயிபொறந்தா
    கட்டுக்கொண்டெக்காரி?
மட்டசாதி ஈனசாதி
    எண்ணு ஆர்ரா சொன்னவென்?
அவனெக்கொண்டு அவமுன்னெ
    நிறுத்தி யல்ல பாக்கணும்!
கெட்ட பய மவடாஅவ
    என்ன மயக்கு மயக்கரா!
மவராசி பேலேஅவ
    மவ்ா ராங்கிக்காரி!
ஓடக்கரெ மரத்துங்கீளெ
    உருமத்து நேரம்
மாட்டை ஓட்டி மேயவுட்டு
    படுத்திருக்கையிலே
கோடெவெயிலு காலுங்கீளெ
    கொளுத்திச் சுட்டுப் பொசுக்க
பாட்டை வளியெபோன ராக்கி
    அங்கே வந்து ஒதுங்ண!

வேத்துக் கொட்டி வெள்ளெச்சேலே
    மேலே ஒட்டிப்போயி
அள்ளிச்சொருவி யிருந்த மயிரு
    அவுந்து மேலே கொட்டி—
நேத்து தாண்டா அவளெ கிட்டெ
    பாத்து சொக்கிப் போனேன்!
கள்ளிப்பசப்பிப் பேரைக்கேட்டா
    குனிஞ்சுநின்னு சிரிச்சா!
அடபோடா—நீயென்ன
    கண்டெ அந்த அளவெ?
பொளுதெ மறந்தேன் போக்கெ மறந்தேன்
    பெறப்பெக்கூட மறந்தேன்!
மொடவென்பேலே மரத்துங்கீளெ
    பாவிமவ மாயம்
உளந்து கெடந்தேன், பொச்சாய
    ஆத்தாவந்து பாத்தா!
ராக்கி நெனப்பு, ராக்கி சிரிப்பு—
    அது என்ன போடா—
ராப்பவலா எந்நேரம்
    வேறெநெனப்பு இல்லெ!
பாக்கி நாளு என்னா செய்வேன்
    சொல்லுபாப்பம் சொக்கா!
சப்புன்னு இருக்கு சீவன்
    செத்துப்போனாத் தேவலாம்!

—கு. ப. ரா

‘ ராதா கிருஷ்ணு ’வில்



லக்ஷ்மி தேவி

‘ ராதா கிருஷ்ணு ’வில்



ஸ்தானம் நரசிம்மராவ் (நாரதர்) வேடத்தில்.

'பக்த குமண' னில்



ஓர் சிருங்காரக் காட்சி.

'திருநீலகண்ட'ரில்



ஒரு காட்சி.



ஸ்ரீமதி S.P.L. தனலட்சுமி

சேலம் மோடர்ன் பிக்சர்ஸின் 'காளமேக'த்தில் கதாநாயகியாக நடிக்கும்


# திட ஆரோக்கியத்திற்கு

போர்ன் - வீடா அவசியமானது. ஆரோக்கியத்துடன் வாழ போர்ன் - வீடாவின் இணையற்ற ஒத்தாசை உங்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கும். அது ஜீர்ண சக்தியைப் பலப்படுத்துகிறது; உணவை வீர்யமாக மாற்றி நல்ல தேகக்கட்டையும் அளிக்கிறது. வாழ்க்கை இன்பத்தை நுகருவதற்கு பலம்தானே பிரதானம். போர்ன் - வீடாவை ஒழுங்காகச் சாப்பிட்டு வாருங்கள். அப்புறம் சொல்வீர்கள்.



"என்னுடைய சொந்த அனுபவத்தில் போர்ன்வீடா கிரிக்கெட்காரர்களுக்கு இணையற்ற உணவுப் பானம் என்று கருதுகிறேன். பிரமிக்கத் தக்க விதத்தில் பலமும் ஆண்மையும் கொடுக்கும் சிறந்த உணவு அது."

அகில இந்திய கிரிக்கெட்காரர்.— முஷ்டாக் அலி.

B:V. 16



இனம் :—14,000 டாக்டர்களின் ஏகோபித்த புகழ் பெற்ற போர்ன்-வீடா முழு டின்னைப் பெறுங்கள்.

விவரங்களுக்கு : டி. டி. கிருஷ்ணமாச்சாரி 11-14 அரண்மனைக்காரன் தெரு, சென்னை.

Cadbury's BOURN-VITA

அனைவருக்கும் ஏற்ற உணவுப் பானம்



# 19222 பாலிஸி

என். சிதம்பர சுப்ரமண்யன்.

[பாரதமாதா இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியின் கணக்குகளை நான் ஆடிட் செய்து கொண்டிருந்தபோது, 19222-வது நம்பர் பாலிஸி 'பைல்' என் பார்வைக்கு வந்தது. அதிலிருந்த கடிதப் போக்கு வரத்து பின்வருமாறு.]

32, கமல விலாஸம்,
நாகநாதபுரம்,
காரைக்குடி, 2—3—'38.

மானேஜர்,
பாரதமாதா இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,
அரண்மனைக்காரன் தெரு,
சென்னை.

ஐயா,

(பாலிஸி 19222—சம்பந்தமாக)

நான் 19222 நம்பரிட்ட பாலிஸி ஒன்று, ரூ. 5000/-க்கு தங்கள் கம்பெனியில் எடுத்துக்கொண் டிருக்கிறேன். அந்தப் பாலிஸியை ரூ. 8000/-ஆக்க உத்தேசம். அதற்கு நான் கட்டவேண்டிய பிரிமியம் (கட்டணம்) எவ்வளவு என்பதற்குப் பதில் எழுதவும்.

சுந்தரமூர்த்தி.

**2**

பாரதமாதா இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி,
118, அரண்மனைக்காரன் தெரு,
சென்னை, 8-3-'38.

சுந்தரமூர்த்தி,
32, கமல விலாஸம்,
நாகநாதபுரம்,
காரைக்குடி.

ஐயா,

(பாலிஸி 19222 சம்பந்தம்)

2-3-'38 தேதியிட்ட கடிதத்தின் பிரகாரம் பாலிஸி தொகையை ரூ. 8000/-ஆக்
குவதில் எங்களுக்கு மிகவும் திருப்திகரமாகவே யிருக்கு மென்பதைத் தெரிவித்துக்
கொள்கிறோம். தாங்கள் வருஷத்திற்கு நாலு தடவையாகக் கட்டிக்கொண்டு வரும் பிரி
மியக் கட்டணத் தொகை ரூ. 62-7-0, அடுத்த தவணையிலிருந்து ரூ. 109-9-0 ஆக
மாறும். அடுத்த கட்டணத்தொகை ரூ. 109-9-0, ஏப்ரல்மீ 12உ கொடுபடவேண்டும்.
இவ்விதம், பாலிஸி தொகையை 8000/-ஆக மாற்றி எழுதுவதற்கு பாலிஸியை அனுப்பி
வைக்கவும்.

மானேஜர்.



**3**

பாரதமாதா இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி
118, அரண்மனைக்காரன் தெரு,
சென்னை, 17-3-'38

சுந்தரமூர்த்தி,
32, கமல விலாஸம்,
நாகநாதபுரம்,
காரைக்குடி.

ஐயா,

(பாலிஸி 19222 சம்பந்தம்)

தங்கள் வேண்டுகோள்படி, பாலிஸித் தொகை ரூ.5000/-த்தை ரூ.8000/-மாக மாற்றி, பாலிஸியில், (Endorse) அமைத்தாய் விட்டது. இனிமேல், தாங்கள் ஏப்ரல் மாதத்திலிருந்து கட்டவேண்டிய கட்டணம் ரூ. 109-9-0. மாற்றப்பட்ட பாலிஸியை, இத்துடன் அனுப்புகிறோம்.

மானேஜர்.

**4**

பாரதமாதா இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி,
118, அரண்மனைக்காரன் தெரு,
சென்னை, 2-9-'38.

சுந்தரமூர்த்தி
32, கமல விலாஸம்,
நாகநாதபுரம்,
காரைக்குடி.

ஐயா,

(பாலிஸி 19222 சம்பந்தம்)

இது வரையில், அநேக தடவைகள் தங்களுக்கு ஞாபகப் படுத்தியும், தங்கள் கவனத்திற்கு வாரததுபற்றி வருந்துகிறோம். ஆகஸ்டுமீ கட்டவேண்டிய ரூ. 109-9-0 இன்னும் வந்து சேராததாலும் கட்டவேண்டிய காலம் மீறிவிட்டதாலும், பாலிஸி (lapse) செல்லாததாகி விட்டது. அக்டோபர்மீ 11-ம் தேதிக்குள், கட்டணம், ரூ. 109-9-0 யும், அதிகப்படி கட்டணம் ரூ. 2-8-0 யும் சேர்த்து அனுப்பினுல், பாலிஸியை உயிர்ப்பிக்கலாம்.

மானேஜர்.

**5**

காரைக்குடி. 9-11-'38

மானேஜர்,
பாரதமாதா இன்ஷ்யூரன்ஸ் கம்பெ...
118' அரண்மனைக்காரன் தெரு,
சென்னை.

ஐயா,

என் புருஷனும், தங்கள் கம்பெனியின் பாலிஸிதாரருமான சுந்தரமூர்த்தி

5-11-'38 காலே காலமானார். அவருக்கு வாரிசுதாரியும், மனைவியுமான நான், தங்கள் கம்பெனிக்கு, கையெழுத்திட்டு அனுப்பவேண்டிய பத்திரங்களை அனுப்பக் கேட்டுக் கொள்கிறேன்.

சிவகாமி அம்மாள்.

## 6

98, முத்துப்பட்டணம்,
காரைக்குடி, 12-11-'38.

மானேஜர்,
பாரதமாதா இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி,
118, அரண்மனைக்காரன் தெரு,
சென்னை.

ஐயா,

தங்கள் கம்பெனியின் பாலிஸிதாரரான சுந்தரமூர்த்தி என் தமையனார். அவர் 5-11-38-ல் காலமானார். அவருக்குக் குழந்தைகள் இல்லை. அவர் மனைவி, சிவகாமி அம்மாள், அவருடைய சொத்துக்கு ஒருவிதத்திலும் பாத்தியப்பட்டவளல்ல. அவருடைய தம்பியான நான்தான் அவருக்கு வாரிசு. ஆகவே, அந்த பாலிஸித் தொகையை சிவகாமி அம்மாளிடம் கொடுத்து விடாமல் நிறுத்தி வைக்கவும். தேவகோட்டை கோர்ட்டில், மனுப்போட்டிருக்கிறது. வாரிசு பாத்தியதை யாருக்கென்று சரியாகத் தெரிந்து கொண்டு, அதற்குமேல் பணத்தைக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

சித்சபேசன்.

## 7

கே. எஸ். ராமஸ்வாமி அய்யர்,
குக நிலயம்,
ராம் நகர்,
தேவகோட்டை, 14—11—'38.

மானேஜர்,
பாரதமாதா இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி,
118, அரண்மனைக்காரன் தெரு,
சென்னை.

ஐயா,

என் கக்ஷிக்காரரான, சிவகாமி அம்மாள் சார்பாக, சில முக்கிய விஷயங்களைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுகிறேன். தங்கள் பாலிஸிதாரரான, சுந்தரமூர்த்தி என்பவருக்கு, அவர் மனைவி சிவகாமி அம்மாள்தான் வாரிசு. அவருக்கு வேறு குழந்தைகள் இல்லை. அவருக்கு ஒரு தம்பி உண்டு. தம்பிக்கும் தமையனுக்கும், பாகப் பிரிவினையாகி அநேக வருஷங்கள் ஆகிவிட்டன. இந்தப் பாலிஸி சுந்தரமூர்த்தியின் சொந்த சம்பாத்தியத்திலிருந்து எடுத்துக்கொண்டது. ஆகவே, அவர் தம்பி, சித்சபேசன், எவ்விதத்திலும், அத்தொகைக்கு பாத்தியதை கொண்டாட முடியாது அவர்,



தங்களுக்கு, ஒரு லெட்டர் எழுதி யிருப்பதாக அறிகிறோம். தேவகோட்டை கோர்ட்டில் வாரிசு பாத்தியதையைப் பற்றி பிராது போட்டிருக்கிறது. வாரிசுப் பத்திரம் கிடைக்கும் வரையில், பணத்தை ஒருவரிடமும் கொடுக்காமல், தாங்களே, பத்திரமாக வைத்துக்கொண்டிருக்கவும்.

கே. எஸ். ராமஸ்வாமி அய்யர்.

## 8

பாரதமாதா இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி,
அரண்மனைக்காரன் தெரு,
சென்னை. 16-11-'38.

சிவகாமி அம்மாள்
32, கமல விலாஸம்,
நாகநாதபுரம்,
காரைக்குடி.

அம்மணி,

(பாலிஸி 19222 சம்பந்தம்)

பாலிஸிதாரரான சுந்தரமூர்த்தி, காலமானது பற்றி வருந்துகிறோம். அவர் ஆகஸ்டு மாதம் சட்டவேண்டிய சட்டணம் ரூ. 109-9-0 சட்டவில்லை. அதிகமாகக் கொடுத்த தவணையிலும் அவர் சட்டவில்லையாதலால், அந்தப் பாலிஸி செல்லாததாகி விட்டது. செல்லாத பாலிஸிக்கு நாங்கள் ஒன்றும் கொடுக்கக் கடமைப்பட்டவர்களல்ல. ஆகையால், இம்மாதிரி நேர்ந்தது பற்றி மிகவும் வருந்துகிறோம். பாலிஸி 'செத்து'ப் போய் விட்டதால், இதுபற்றி கடிதப் போக்குவரத்து செய்வதில் ஒன்றும் பிரயோசனமில்லை யென்பதை மிகவும் வருத்தத்துடன் மறுபடியும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மானேஜர்.

இக் கடிதத்தின் நகல்,

(1) சித்சபேசன், 98, முத்துப்பட்டணம், காரைக்குடி.
(2) கே. எஸ். ராமஸ்வாமி அய்யர், பி.ஏ., பி.எல்.,
குகநிலயம், ராம்நகர், தேவகோட்டை.


ஜோதிஷம்

உங்களது எதிர்கால பலன்களை மாதவாரி விவரமாக ஒரு வருஷத்திற்கு எழுத ரூ. 3. வாராந்திர பலனுக எழுத ரூ. 10. எதிர்கால சந்தேகங்களைத் தெரிந்து கொள்ள 5 கேள்விகளுக்கு பதில் எழுத ரூ. 1. கிரஹசார தோஷங்கள் நீங்கி எல்லாக் காரியங்களிலும் ஜெயமடைய ஜய வசீகரணி கவசம் ரூ. 2-8. வி. பி. செலவு 0-5-0. ஜனனகால விவரம், ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், கடிதம் எழுதும் போதுள்ள நேரம், சுமார் வயது, தொழில் இவைகளைக் குறிப்பிட்டு எழுதவும்.



சென்னை சுதேசமித்திரன் எழுதுவதின் சாராம்சமாவது : "........தனி நபர்களுக்குப் பலன்கள் கூறுவதில் ஏற்கனவே புகழுடன் விளங்கும் ஸ்ரீ ஆச்சாரியார் இப்போது உலகப் பிரச்னைகளிலும் தமது ஞானத்தை ஈடுபடுத்தி வெற்றியைக் கண்டு வருவது குறிப்பிடத் தக்கதாகும்."

வி. கே. சடகோபாச்சாரியார்,
ஹநுமான் ஆச்ரமம், திருத்தணி S. I.

# திருமங்கையாழ்வாரின் ஆத்ம சோதனை

இந்திரிய மின்மினி யொளியில் மயங்கி ஆத்மாவின் சொற்கடந்த சோபையை இழந்தவன், உண்மை நிலையை உணர்ந்தவுடன் புலம்பாமலிருக்க மாட்டான். கைவிளக்கை நம்பிக் கதிரவன் ஒளியைக் கனவிலுங் கருதாத மாந்தரின் கதி விசனிக்கத் தகுந்தது.

'ஆத்மாவைக் கொன்றவன் கன அந்தகாரத்தில் பிரவேசிக்கிறான்' என்று ஓர் உபநிஷத்துக் கூறுகிறது. கண்ணொளி போனால், உலகக்காட்சியின் இன்பத்தில் களிக்க முடியாது; ஆனால் ஆத்மாவில் என்றும் வற்றாத ஓர் இன்ப ஊற்றிருக்கிறது; அதில் நம்முடைய தாபங்களைத் தீர்த்துக் கொள்ளலாமென்ற ஆறுதல் நமக்கேற்படலாம். உட்கண்ணும் அவிந்து, ஆத்மாவின் மீது ஓர் இரவின் இருட்டும் படர்ந்துவிட்டால், அதைவிட நரக வேதனையில்லை. அகத்திலும் இருள்; புறத்திலும் இருள்; என்றும் நீங்காத நீண்ட இரவில் மனிதன் உழல வேண்டியதுதான்.

இருட்டுக் குகையில் அடைபட்டுப் புழுங்குகிற பொழுது, இந்த இருட்டில் வரும்படியான எந்தத் தீச் செயல்களைச் செய்தேனோ என்று ஏங்குகிறோம். கழிவிரங்கல் கடைத்தேறுவதற்கு முதல் படி. பாவ காரியங்களுக்குப் பரிதபிக்க வேண்டியதுதான். சுடச்சுட வெழுகிற கண்ணீரில் மாசுகள் அலசப்பட வேண்டும்; அதுதான் உண்மையான ஞானஸ்நானம்.

"காராண்ட மழைபோலக் கண்ணீர் சோரக்
கன்மனமே
நன்மனமாக் கரையப் பெற்றோம்."

என்று உள்கசிந்து பாடுகிறார் அப்பரும்.

திருமங்கை யாழ்வார் தம் தீனநிலையை முதலில் உணர்கிறார். ஆத்ம லாபத்தை இழந்து அடிமையாய்த் தொண்டு செய்து ஊமனார் கண்ட கனவிலும் பழுதாய்க் கழித்தேனே காலத்தை யென்று கரைகிறார்:

"கொன்றேன் பல்லுயிரைக் குறிக்கோளொன்
றிலாமையால்
என்றேனும் இரந்தார்க்(கு) இனிதாக
உரைத்தறியேன்
......................................"
தெரியேன் பாலகனாய்ப் பலதீமைகள்
செய்துமிட்டேன்
பெரியே னாயினபின் பிறர்க்கே யுழைத்(து)
ஏழையானேன்
......................................"

என்ற ஓலங்கள் அவர் இயற்றிய நூல்களில் கேட்கின்றன.

தூய்மையில்லாத நான் பகவானைத் தொழவுங் கூடுமோ என்று அஞ்சுகிறார். அப்படி அஞ்சி நிற்கும் நிலையில் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும் நாம் அடையாவண்ணம் அநேக அவதாரங்களை யெடுத்த எம்பெருமான், உள்ளத்தின் இருட்டறையில் யாவரும் அறியாதபடி யெழுந்தருளி, 'அஞ்சல்' என்று அபயம் அளிக்கிறார்.

'ஆவியை அரங்கமாலை அழுக்குடம்
பெச்சில் வாயரல்
தூய்மையில் தொண்டனேன் நான்
சொல்லினேன் தொல்லைநாமம்
பாவியேன் பிழைத்தவாறென்(று)
அஞ்சினேற்கு அஞ்சலென்று
காவிபோல் வண்ணர் வந்(து)என் கண்ணுளே
தோன்றினாரே.

கழிந்ததற்குப் புலம்பிக்கொண்டு இடைவிடாது வீசும் துன்ப அலைகளைப் பார்த்துக் கைமறித்து ஆவி சோர்ந்து நிற்பது அறிவுள்ளவர்கட்கு அழகில்லை. இடர்க் கடலைக் கடப்பதற்குத் தோணியுண்டா என்று ஆராய வேண்டும்.



அமர வாழ்வு அடைவதற்கு உடல் நிலையாமையும், மரண பயமும் நமக்கேற்பட வேண்டும். நம்மாழ்வார் இக்கருத்தை மனத்தில் வைத்தே பாடுகிறார்:

'மின்னின் நிலையில
மன்னுயி ராக்கைகள்
என்னுமிடத்து இறை
உன்னுமின் நீரே.'

திருமங்கை யாழ்வார் நிலையற்ற தேக நிலையைக் குறித்து 'காற்றில் அகப்பட்ட மரக்கலத்துள்ளார் மனம்போலக் கலங்குகின்றேன்,' 'ஆற்றங்கரைவாழ் மரம்போல அஞ்சுகின்றேன்.' என்று பேசுகிறார்.

ஆகையால் நிரந்தர வாழ்வடைய அவர் மனம் நாடுகிறது. எல்லாவிதப் பற்றும் விட்டால் தான் பேரின்ப வீட்டை யடையலாம் என்ற உண்மை எல்லா ஞானிகளுக்கும் பொதுவே.

"எல்லாவற்றையும் விட்டு என்னையே தஞ்சமாகப் புகு. பாபங்களிலிருந்து உன்னை விடுவிக்கிறேன்" என்று கண்ணன் கீதையில் உபதேசிக்கிறான் 'தாய்தந்தையர்களைவிட்டென்னைத் தொடர்ந்து வா." என்கிறார் ஏசுநாதர்.

ஒருவிதப் பற்றிருந்தாலும் ஈசனை அடைய முடியாது. அந்தப் பற்றின் மேக நிழல் விழுந்து உண்மையை மறைத்துவிடும். தாம் உயிரைக் கொடுத்துப் பயின்ற கலைகளிலிருந்து வழியும் இன்பத்தைக் கூடத் தியாகஞ் செய்யவேண்டும். இக்கருத்தை யொட்டியே சதா புத்தகக் காட்டிலேயே திரியும் ஆல்டோஸ் ஹக்ஸிலியும் (Aldous Huxley.) தம்முடைய "முடிவும் மார்க்கமும்" "Ends and Means" என்ற புத்தகத்தில் கலைகளிலிருந்தும் விரக்தி வேண்டுமென்கிறார். இது ஒரு நூதனக் கருத்தில்லை. சில நூற்றாண்டுகளுக்கு முந்தியே மாணிக்கவாசகர் இந்த உண்மையை உலகத்திற்கு வெளியிட்டிருக்கிறார்:

"உற்றாரை யான்வேண்டே னூர்வேண்டேன்
பேர் வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன் கற்பனவு
மினியமையுங்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாவுன்
குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக
வேண்டுவனே."

இன்னுஞ் சிலர் ஒரு படி அதிகங்கூடப் போயிருக்கிறார்கள். ஈசனிடத்தில் கூட ஆசை வைக்காதீர்கள். அந்த ஆசைக் கதவு திறந்த மூலம் மனத்திலுள்ள அநேக கள்ளக் காமங்கள் மாயமாய் நுழைந்து விடலாம். ஆசையென்றால் அவ்வளவு பயம் நம் பெரியோர்களுக்கு. அதனால்தான் 'ஈசனோடாயினும் ஆசை அறுமின்' என்று எச்சரிக்கை செய்கிறார்கள். தன்னிலை உணர்ந்து, பந்தத்தையறுத்தால் மட்டும் போதாது. இது காட்டைத் திருத்தி, நிலமாக்கி, சும்மா விட்ட கதையாகும். அந்நிலத்தைத் தளிர்ப்பிக்க வேண்டும்.

இந்திரியங்களை வசப்படுத்தியவன் அடிகளின்கீழ் உலகம் பணிந்து நிற்குமென்பதில் சந்தேகமில்லை. இந்திரிய வெற்றிக்காகப் பாடுபட வேண்டும். அவைகளை அழிப்பது முடியாத காரியம். உணர்ச்சிகளை வேறு துறைகளில் ஓட விடவேண்டும். ஒரு கணப் பொழுதேனும் அவைகள் சும்மா இரா. கோபமெழுந்தால், அதை நம் குற்றங்களைக் கண்டிக்க உபயோகித்துக் கொள்ளவேண்டும்; காதலெழுந்தால் பேரின்ப வீட்டின் மார்க்கத்தில் திருப்பவேண்டும். உணர்ச்சிகளை உத்தமன்பால் செல்ல விடுதல்தான் சாமர்த்தியம். அதுதான் யோகங்கூட. உள்ளத்தை அவனைச் சதா சிந்திப்பதற்கும், உரையை அவனைப் புகழ்வதற்கும், செய்கையை அவனை வணங்குவதற்கும், உபயோகிக்க வேண்டும். நம்மாழ்வார் இந்த அபிப்பிராயத்தை வெகு அழகாய் வெளியிட்டிருக்கிறார்:

"உள்ளம் உரைசெயல்
உள்ள இம் மூன்றையும்
உள்ளிக் கெடுத்து இறை
யுள்ளி லொடுங்கே."

அப்பர் ஒவ்வொரு அவயவத்தையும் பகவானுடைய கைங்கரியத்தைப் புரிய ஏவுகிறார்;

“ தலையே நீ வணங்காய்—தலை மாலை தலைக்
கணிந்து
தலையாலே பலி தேருந் தலைவனைத் தலையே
நீ வணங்காய்
கண்காள் காண்மின்களோ—கடல் நஞ்சுண்ட
கண்டன் றன்னை
எண்டோள் வீசி நின்றாடும் பிரான்தன்னைக்
கண்காள் காண்மின்களோ.”

திருமங்கை யாழ்வார் எல்லாவற்றையும் உதறித் தள்ளிவிட்டு, பகவானையே தனக்குச் சரணாகக் கொண்டு விட்டார். தாயைக் காட்டிலும், ஆயின செய்யும் என்ற திட நம்பிக்கை அவருக்குண்டு.

“ தாயே தந்தையென்றும் தாரமே கிளை
மக்களென்றும்
நோயே பட்டொழிந்தேன் நின்னைக்
காண்பதோ ராசையினால்
வேயேய் பூம்பொழில்சூழ் விரையார்
திருவேங்கடவா
நாயேன் வந்(து) அடைந்தேன் நல்கி
ஆளென்னைக் கொண்டருளே.”

நமக்கு நல்லது கெட்டது ஒன்றுந் தெரியாது. நம்முடைய பாரத்தை முழுவதும் அவன்மீது வைத்து அவனைச் சதா புலம்பிக்கொண் டிருப்போம். இந்தத் துரும்பை எங்கே வேணுமென்றாலும் அவனுடைய அருட்காற்று அடித்துக்கொண்டு போகட்டும்” என்று சிலர் சும்மாயிருப்பர். சில பேர்கள் தங்களுடைய ஞான வாளை வீசி படைபோலெழும் இந்திரியங்களை அடக்குகிறார்கள். திருமங்கை மன்னனுக்குக் காயக் கிலேசம் செய்வதில் நோக்கமில்லை. காந்தியடிகளுக்கு இராம நாமம் போல, இவருக்கு நாராயணா என்னும் நாமம் ஒரு என்றும் அழியாக் கவசம்.

“உள்ளெலா முருகிக் குரல்தழுத் தொழிந்தேன்
உடம்பெலாம் கண்ணநீர் சோர
நள்ளிரு ளளவும் நானழைப்பன்
நாராயணா வென்னும் நாமம்.”

அவன் நாமஸ்மரணை இடைவிடாது ஓடுகிற அருவிபோலிருக்க வேண்டும். இரத்தத்தோடு அந் நாமம் கலந்தோட வேண்டும். உடம்பின் ஒவ்வொரு மயிர்காலும் அந்நாமத்தின் தெதிரொலி தர வேண்டும். இப்படி தியானத்தால் உள்ளத்தின் கோது நீங்கிவிடும். இதை விட்டு சரீரத்தை வாட்டுவானேன்?

“ஊன் வாட உண்ணாது உயிர் காவலிட்டு
உடல் பிரியாப் புலனைந்தும் நொந்து
தாம் வாட வாடத் தவம் செய்யவேண்டா.”
* * *

“காயோடு நீடுகனியுண்டு, வீசு
கடுங்கால் நுகர்ந்து, நெடுங்காலம் ஐந்து
தீயோடு நின்று தவம் செய்ய வேண்டா.”

அப்பரும் இந்த அபிப்பிராயமே கொண்டிருக்கிறார் :

“கூடவேடத்தராகிக் குழுவிலென்
வாடி யூனை வருத்தித் திரிவிலென்
அடல் வேடத்தன் அம்பலக் கூத்தனைப்
பாடலாளர்க்கல்லாற் பயனில்லையே.”

உலகத்திலுள்ள பொருளெல்லாம் அவனுருவம் என்று மதித்து அனுபவிக்கலாம். அப்பொழுது ஆசைத்தளை யேற்படாது. “ துறவில் இல்லை, என் விடுதலை. என்னுடைய இந்திரியக் கதவுகளை நான் அடைக்கிறதில்லை. ஆயிரங் களிப்புத் தளைகளில், மோக்ஷத்தை அணைந்து இன்புறுகிறேன்; காட்சி யின்பமும், ஒலி யின்பமும் அவனுடைய இன்பத்திலிருந்து சிதறினவல்லவோ ” என்று கீதாஞ்சலியில் டாகூரும் (Tagore) கூறுகிறார். திருமங்கை யாழ்வார் பகவானைத் தேடித் தேடி பகவத் தரிசனங் கிடைக்காது ஓலமிட்டு இறந்தவரல்ல. நெஞ்சமென்னும் அன்பினால் ஞான நீர் கொண்டு ஆட்டி அவனை அடைந்தார். அடைந்த வெற்றிக் கோஷம் அவர் பாட்டில் கேட்கிறது. “ சிக்கெனத் திருவருள் பெற்றேன் ” என்று பேசுகிறார். “ அவனுடைய அருளைப் பருகிக் களிக்கின்றேன். பகவானுக்கு முன் தெய்வங்களோடு எனக்கு ஒரு விருந்து நடக்கிறது. அந்த அருள் விருந்தை நாம் மட்டும் புசிக்கவோ, தொண்டீரெல்லிரும் வாரீர்! கண்டவா தொண்டரைப் பாடும் சொற் பொருளாளீர்! நற்பொருள் காண்மின், பாடி நீருய்மின்: அது எல்லாம் தந்திடும்” என்று உலகமறியப் பறை சாற்றுகிறார்.

“குலம் தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுய ராயின வெல்லாம்
நிலந்தரஞ்செய்யும் நீள் விசும் பருளும்
அருளொடு பெரு நிலமளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்றதாயினும்
ஆயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான் கண்டுகொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்.”



# வயர்லெஸ் - அதன் சரித்திரம்.

[வி. அனந்தகிருஷ்ணன், பி. ஏ.]

வயர்லெஸ் அல்லது ரேடியோவை முதன் முதலில் கண்டு பிடிப்பதற்குக் காரணமாக இருந்தவர் கிளார்க் மாக்ஸ்வெல் என்னும் விஞ்ஞானி. அவர் ஒருநாள் ஏதோ கணக்குப் போட்டுக்கொண் டிருக்கையில், திடீரென்று இந்த எண்ணம் தோன்றிற்று. அதாவது மின்சார அலைகளையும் ஈதர் என்னும் வஸ்து மூலமாக வெளிச்சத்தின் அலைகள் போல அனுப்ப முடியும் என்று அவருக்குத் தோன்றியது. 1873-ம் வருஷத்தில் இந்த அபிப்பிராயத்தை நன்கு சோதித்த பிறகு அவர் வெளியிட்டார். ஐந்து வருஷங்களுக்குப் பிறகு ஹெர்ட்ஸ் என்ற மற்றொரு விஞ்ஞான சாஸ்திரி இந்த அபிப்பிராயத்தைப் பரிசோதனைகளின் மூலம் பிரத்தியக்ஷமாக உண்மையென்று நிரூபித்தார். வயர்லெஸ் அலைகள் எப்படி உற்பத்தியாகின்றனவென்றும், அவைகளை எப்படிப் பிடிப்பது என்பதையும் பரிசோதனையின் மூலம் காண்பித்தார்.



ஹெர்ட்ஸுடன் அவருக்கு உதவியாக இருந்து பரிசோதனை நடத்தியவர்கள் ஸர் ஆலிவர் லாட்ஜ், ப்ராலி என்ற இருவர்களாகும். இவர்கள் சில நாட்கள் கழித்து வயர்லெஸ் அலைகளைப் பிடிப்பதற்கும் புது மாதிரியாக ஒரு சாதனத்தைக் கண்டு பிடித்தனர். இதற்கு கோஹிரர் என்று பெயர். இதற்குப் பிறகு இத்தாலிய விஞ்ஞானியாகிய மார்க்கோனி, இன்னும் கொஞ்சம் நன்றாக வேலை செய்யும் முறையில் மற்றொரு சாதனத்தைக் (detector) கண்டு பிடித்தார். கடைசியாகத்தான் ‘கிரிஸ்டல் டிடெக்டர்கள்’ கண்டுபிடிக்கப் பட்டது.

வயர்லெஸ் அலைகள் எப்படி உற்பத்தியாகின்றன; அவை எப்படி தற்காலம் பல ஸ்டேஷன்களிலும் உபயோகப்படுத்தப்

படுகின்றன; அந்த அலைகளை ரிஸீவிங் செட்டுகள் எப்படிப் பிடிக்கின்றன என்ற விஷயங்களைத் தமிழில் விஸ்தரிப்பது மிகவும் கடினமான காரியம். ஏனென்றால், பல ஆங்கில விஞ்ஞான சாஸ்திரச் சொற்களைத் தமிழில் மொழிபெயர்ப்பது கடினம். இருப்பினும் அவைகளைக் கூடிய வரையில், விஞ்ஞான சாஸ்திரச் சொற்களின் உதவியில்லாமலேயே விளக்க முயலுகிறேன்.

ஒரு கழியை எடுத்து நிச்சலனமாயிருக்கும் தண்ணீரில் சடக்கென்று முக்கி மேலும் கீழுமாகக் கையை அசைத்தால் தண்ணீர் எவ்விதம் அசையும் என்பதைக் கவனித்திருக்கிறீர்களா? கழியைச் சுற்றி வட்ட வட்டமாக அலைகள் புறப்பட்டு அகன்றுகொண்டே போகுமல்லவா? இன்னும் கழியை மேலும் கீழும் அசைத்தால் அப்பொழுது புதிய அலைகள் ஏற்பட்டு பழைய அலைகளின்மீது மோதி அகன்று மறையும். இப்படி ஏற்படும் அலைகளுக்கு இடையிலுள்ள தூரம் இரண்டு விஷயங்களைப் பொறுத்திருக்கிறது. அவைமுறையே (1) அலைகள் விரிந்து படரும் வேகம், (2) கழி அசையும் வேகம். இந்த இரண்டையுமே அந்தத் தூரம் சார்ந்திருக்கிறது. இந்தத் தூரத்தை விஞ்ஞான சாஸ்திர பரிபாஷையில் அலையளவுகள் என்று சொல்லுவார்கள்.

இந்த அலைகளின் மீது ஒரு கார்க்கை மிதக்க விடுவதாக வைத்துக் கொள்வோம். கழியை மேலும் கீழுமாக அசைக்கும்போது, கார்க்கு, கூத்தாடுமல்லவா? இந்தக் கார்க்கு கூத்தாடும் வேகம் பின்வரும் மூன்று அம்சங்களைப் பொறுத்திருக்கிறது. (1) கழி அசையும் வேகம் (2) அலையளவு (3) அலையின் பிரமாணம். (குறிப்பு:—அலையளவு என்பது இரண்டு சேர்ந்தாற்போலுள்ள அலைகளுக்கு இடையில் உள்ள தூரத்தையே குறிக்கிறது) இதே தத்துவம்தான் ரேடியோ அல்லது வயர்லெஸ்ஸின் தத்துவமும் கூட. ஆனால் அங்கே கழிக்குப் பதிலாக, ஏரியலுக்கும் பூமிக்குமாக மின்சார சக்தி ஓடிக்கொண்டிருக்கிறது. கார்க்குக்குப் பதிலாக சப்த அலைகள் உபயோகப்படுகின்றன; தண்ணீருக்குப் பதில் ஆகாயத்தில் சதா இருந்துகொண்டிருக்கும் ஈதர் என்ற ஒரு வஸ்து உபயோகப்படுகிறது. (இந்த ஈதர் மூலமாகத்தான் சூரிய வெளிச்சம் பிரயாணம் செய்கின்றது.)

மேற் சொன்ன உதாரணத்தை மீண்டும் எடுத்துக்கொள்வோம். ஒரு பெரிய தண்ணீர்த் தடாகத்தில் 100 பவுண்டு நிறையுள்ள ஒரு கல்லை 'தொப்' பென்று போட்டால் ஏற்படும் அலைகள் மிகவும் பெரியதாயிருக்குமல்லவா? இந்த அலைகள் தடாகத்தின் கரையில் வந்துகூட மோதும். இதேபோல, வயர்லெஸ் அலைகள் வெகுதூரம்—பல்லாயிரக் கணக்கான மைல்கள் பிரயாணம் செய்ய வேண்டுமானால், மின்சார அலைகள் மிகவும் பலம் பொருந்தியவைகளாக இருக்க வேண்டிய தவசியம். ஆகையால், ஏரியல் வழியாகச் சென்றுகொண்டிருக்கும் மின்சார சக்தி வெகுவேகமாக(high frequency) ஓடிக்கொண்டிருக்கவேண்டுமென்பது ஏற்படுகிறது. வயர்லெஸ் அலைகள் ஒரு செகண்டுக்கு 186,000 மைல்கள்—அதாவது வெளிச்சம் பரவும் வேகம்—செல்கின்றன என்பதை இங்கே கவனிக்கவேண்டும்.

தண்ணீர் அலைகளைப் போலல்லாமல் வயர்லெஸ் அலைகள் எல்லாத் திசைகளிலும் செல்லக்கூடியவை. ஆகாயம் முழுவதுமே ஈதர் பரவிக் கிடக்கிறதல்லவா?

ஆகவே ரேடியோச் செய்திகள் எப்படி அனுப்பப்படுகின்றன என்று இனி கவனிப்போம். செய்தி யனுப்பும் இயந்திரத்திலிருந்து சப்தம் மின்சார அலைகளாக மாறி செகண்டுக்கு 186,000 மைல் வேகத்தில் நாலா திசைகளையும் நோக்கிப் பாய்கின்றது. ஆனால் நமது ஆகாயத்தின் அமைப்பு விசித்திரமானது. அதாவது ஒரு குறிப்பிட்ட உயரத்திற்கு மேல் இந்த அலைகள் செல்ல முடியாது. அங்கே ஒரு சுவர் இருப்பதாகப் பாவித்துக் கொள்ளலாம். அந்தச் சுவரின் மீது மோதி, இந்த அலைகள் திரும்பவும் கீட்டுப் போக்கில் பிரயாணம் செய்கின்றன. இப்படியே மோதி மோதி உலகத்தைப் பல சுற்றுகள் சுற்றி விடுகின்றன. ஆகையினால்தான் ஒரு குறிப்பிட்ட இடத்தில் பேசினாலும் அதை உலகம் முழுவதிலும் கேட்க முடி



கிறது. நான் மேலே குறிப்பிட்டமான ஸீகச் சுவர் சூரிய உஷ்ணம், புயல், மழை காலம் இவைகளைப் பொறுத்து மாறும். அதாவது பூமியிலிருந்து அதன் உயரம் அடிக்கடி மாறிக்கொண்டிருக்கும். அதனால்தான் ஒரு நாள் ரேடியோ கணீரென்று கேட்கிறது; மற்றொரு நாள் 'கர புர' வென்று ஓலமிடுகிறது.

## சப்தம் செல்வதெப்படி?

ட்ரான்ஸ்மிட்டர் அல்லது செய்தியனுப்பும் இயந்திரத்தின் முன் ஒருவர் பேசினால் அல்லது பாடினால் என்ன நடைபெறுகிற தென்பதைக் கவனிப்போம். இயந்திரத்தில் மைக்ராபோன் என்று ஒரு பாகம் இருக்கிறது. அதன் முன்புதான் பேசவோ அல்லது பாடவோ செய்ய வேண்டும். மைக்ராபோன், மின்சாரம் உற்பத்தி செய்யும் பாட்டரியுடன் இணைக்கப்பட்டிருக்கும். ஆகவே சப்த அலைகள் மைக்ராபோனின்மீது மோதும்பொழுது, அதன் வழியாகப் பாயும் மின்சார சக்தி ஏறியும் இறங்கியும் பாய்ந்துகொண்டிருக்கும். அதாவது, சப்தத்தின் மின்சாரக் காப்பி இந்தக் 'கரண்டில்' அமைந்து விடுகிறது. இதை வேறுவிதமாகக் கூறினால், சப்தம் மின்சாரமாக மாறுகிறது என்று சொல்லலாம்.

இப்படி ஏற்படும் மின்சார சக்தி மிகவும் குறைந்த சக்தி வாய்ந்தது. ஆகவே உலகம் முழுவதும் சென்று வருவதற்கு வேண்டிய சக்தியை அதற்கு ஊட்ட வேண்டும். தெர்மியானிக் வால்வ் என்ற ஒரு சாதனத்தாலும் வேறு சில சாதனங்களாலும் வேகம் அதிகரிக்கப்படுகிறது. கடைசியாக இவ்விதம் பலம் ஊட்டப்பட்ட மின்சாரம் ஏரியலுக்குப் போய்ச் சேருகிறது. ஏரியலிலிருந்து ஆகாயத்தில் பாய்ந்து உலக யாத்திரை செய்கிறது.

இதற்கு நேர் மாறுவிதத்தில் ரிஸீவிங் ஸ்டேஷன்களோ, 'செட்'டுகளோ அமைக்கப்பட்டிருப்பதால், வயர்லெஸ் அலைகள் அங்கே முதலில் ஏரியல் வழியாக உள்ளே புகுந்து, மின்சார சக்தி குறைவடைந்து கடைசியாக லௌட் ஸ்பீக்கர் வழியாக நமக்குச் செய்தியாகவோ, பாட்டாகவோ கேட்கிறது. இங்கே நடைபெறும் வேலை, நேரே தலைகீழ்; அவ்வளவுதான்.

ரேடியோ அல்லது வயர்லெஸ் அலைகளில் நான்கு விதம் இருக்கின்றன. அவை (1) நீள அலைகள் (2) மத்திய அலைகள் (3) நடுத்தர அலைகள் (4) குறுகிய அலைகள். கடைசியாகக் கூறப்பட்ட குறுகிய அலைகள்தான் வெகுதூரம் கேட்பதற்கு மிகவும் உபயோகப்படுகின்றன. அது சமீபத்தில்தான் கண்டுபிடிக்கப்பட்டது.



நமது தொடர் கதை :

## திவான் மகள்

**பூர்வ கதை :**

திவான் ராமய்யரின் புத்திரி ஜானகியையும் அவள் தோழி பாமாவையும் முதன் முதல் குற்றாலத்தில் வைத்துச் சந்தித்தேன். ஆரம்பம் முதல் நான் ஜானகியிடம் கொண்டிருந்த பிரேமையை வளர்த்து வந்தவள் பாமாதான். அவளே எனக்கும் திவான் மகளுக்கும் விவாகத்திற்கு வேண்டிய கோரிக்கைகள் சமர்ப்பித்து, முகூர்த்த நாளும் நிச்சயித்தாள்.

என்னுடைய எல்லையற்ற ஆசையில் விவாகத்திற்கு ஒரு பெரிய மகோற்சவ ஏற்பாட்டைச் செய்து முடித்தேன். ஆனால் எதிர்பாராத விதமாக மணையில் பாமாவே வந்து உட்கார்ந்து கொண்டாள். திவான் மகள் வரவில்லை. என் மனம் தத்தளித்தது. ஆனால் கலியாணத்தை நிறுத்த வகை காணாமல் வேண்டா வெறுப்புடன் "பின்னிட்டு விலக்கி வைப்பேன்; பழி வாங்குவேன்" என்று உருவேற்றிக்கொண்டே அவள் கழுத்தில் தாலியைக் கட்டினேன். அன்று மாலை கிருகப் பிரவேசத்திற்கு முன் அவளை விட்டிருந்த ஜாகை சென்று இந்த மோசடியின் காரணத்தை வினவினேன். என்னைக் கஷ்டத்திலிருந்து காக்கவே என்னை மணந்ததாக அவள் சொன்னதும் எனக்குச் சிரிப்பு வந்தது. அவளும் சேர்ந்து சிரித்தாள். அந்தச் சிரிப்பு என்னை வெற்றிகொண்டது. ஆமாம், ஓர் புன்சிரிப்புக்கு நான் அடிமையாகி விட்டேன்.

என்னுடைய விவாகத்திற்குப் பிறகு அவளுடைய தெய்வீக இனிமையில் ஈடுபட்டு அவளிடம் தலைகால் தெரியாமல் அன்பு கொண்டு விட்டேன். சிற்சில சமயம் ஜானகியின்பேரில் ஆசை வைத்ததற்காக என்னிடமே எனக்கு வெறுப்பு உண்டாயிற்று. பாமாவின் பாதங்களை முத்தமிடக்கூடிய ஸ்திதிக்குக்கூடத் திரும்பிவிட்டேன்.

எனக்கு ஒவ்வொரு சமயங்களில் இவளுடைய சூழ்ச்சி வெறுப்பைக் கொடுத்தாலும் என்னையே பரமென்று நம்பிவந்த இந்த ஏழைப் பெண்ணைக் கைவிடக்கூடாது என்று தோன்றிற்று. மறுதினம் அவள் பேருக்கு ஒரு உயில் எழுதி விடுவதென்று தீர்மானித்தேன்.

மறுநாள் பாமாவுக்கு ஒரு கடிதம் வந்திருந்தது. அவள் அதை எடுத்துக்கொண்டு உள்ளே சென்று விட்டாள். எனக்கு என் தமக்கையிடமிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. அதில் பாமாவின் குலம் கோத்திரங்களை விசாரித்து, ஊரலரைப் பற்றியும் குறிப்பிட்டு எழுதியிருந்தாள். நான் பாமாவைக் கூப்பிட்டு என் தமக்கையின் கடிதத்தை வாசிக்கச் சொன்னேன். அவள் சொன்ன பதில் என் உள்ளத்தில் பெரிய குழப்பத்தை உண்டாக்கி விட்டது. அவள் சொன்னது உண்மைதான்; ஆனாலும் அவள் அதை எடுத்துப் பிரசங்கம் செய்தது என் கோபத்தை ஜ்வாலை செய்தது. அந்த ஆவேசத்தில் "நீ சதி செய்து என்னைக் கலியாணம் செய்து கொண்டதை நான் நிராகரிக்கக்கூடும். நம்மிருவருக்கும் நடந்த விவாகத்தை இல்லை என்றால் என்ன செய்வாய்?" என்று கர்ஜித்தேன்.

பாமாவுக்கு இடி விழுந்தது போலிருந்திருக்கவேணும். பகவத் சந்நிதானத்தில் மணந்து கொண்டதை முறையிட்டு "இதுதான் உங்களுடைய நேர்மையோ!" என்று சொல்லிச் சட்டென்று திரும்பி அறையை விட்டுச் சென்றாள்.

**இனி மேலே படியுங்கள் :**




### அத்தியாயம் 12

"குமுதினி" எழுதியது

பாமாவின் குரலிலிருந்த இகழ்ச்சி என்னை ஒரு ஈட்டி போல் குத்திற்று. அவள் என்னுடைய காலில் விழுந்து கெஞ்சினால் தவிர இனி அவளை மன்னிப்பதில்லை என்று தீர்மானித்தேன். "வீட்டில் யார் எஜமானன் என்பதை அவளுக்கு நன்றாகக் கற்பிக்கவேண்டும். தனிமையில் கிடந்து அவள் எனக்குச் செய்த தீங்கையெல்லாம் நினைத்து நினைத்து வருந்தட்டும். அவளுடைய துணிச்சல்—அவளுடைய சூழ்ச்சி—ஒரு நன்றிகெட்ட பதர்—"

என்னுடைய கோபத்திலேயே காரியஸ்தனைக் கூப்பிட்டு நான் திருநெல்வேலி போகப் போகிறதாகவும் வருவதற்கு ஒரு வாரம் செல்லுமென்றும் சொல்லிவிட்டு மோட்டாரைக் கொண்டு வரச் சொல்லி அதில் ஏறிச் சென்றேன். பாமாவிற்கு ஒரு செய்தியும் சொல்லியனுப்பவில்லை.

மோட்டாரில் தனிமையில் சென்று கொண்டிருந்த நான் என்னுடைய துன்பத்தையெல்லாம் எண்ணியெண்ணி, என்னுடைய கோபத்தைத் தணியவிடாமல் வளர்த்துக்கொண்டேன். நான் அவள் பேரில் என்னுடைய சொத்தையெல்லாம் எழுதி வைக்கப்போகும் இத்தருணத்தில் என்னை இவ்விதம் அநியாயமாய் இகழ்ந்தாளே என்ற இக்கடைசிக் குற்றமே எனக்கு மிகப் பெரிதாக இருந்தது. அவளுக்கு என் பேரில் அன்பே கிடையாது, ஒருநாளும் கிடையாது என்று திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டு நான் துடித்தேன். அவள் விவாகத்தைப் பற்றின எல்லாச் சூழ்ச்சியும் தன்னுடையதே என்று ஒத்துக்கொண்டது பற்றி ஏது காரணமோ எனக்குச் சிறிதும் கோபமுண்டாகவில்லை.

அவள் என்னைப் பற்றி இச்சமயம் இவ்வளவு கேவலமாக எண்ணி உரைத்தாளே என்ற குற்றமே பெரிய மலைபோலிருந்தது. அவள் என்னைப்பற்றித் தன்னுடைய மனசிற்குள் சிரித்துக்கொண்டிருப்பாள் என்று நான் சொல்லிக்கொண்டேன். அவளிடம் மோகம்கொண்ட மடையன் சீக்கிரமே திரும்பிவந்து கெஞ்சுவான் என்று நினைக்கிறாள் போலும். இருக்கட்டும். ஒரு ஆண் பிள்ளையை மணந்திருக்கிறோமென்று அவள் உணர வேண்டும். அவள் என்னுடைய காலடியில் விழுந்த பிறகே நான் அவளை எடுத்துத் தழுவுவேன்.

இரவு திருநெல்வேலி போய்ச் சேர்ந்தேன். அங்கு முசாபரி பங்களாவில் படுத்திருந்தேன். காலையில் எழுந்ததும் அங்கே தாம்பிரபரணி

நதிக்கரையிலிருக்கும் சிறிய கிராமம் ஒன்றைப் பார்வையிடச் சென்றேன். அதனுடைய சொந்தக்காரர் அதை வாங்குமாறு என்னை வெகு நாளாக வற்புறுத்தினார். என்னுடைய விவாகத்திற்குப் பின் நிலம் வாங்குவதிலும் சொத்துச் சேர்ப்பதிலும் எனக்கு ஆவல் உண்டாகி யிருந்தது. ஆகையால் அந்நிலத்தைப் பார்வையிட வருவதாகக் கூறி யிருந்தேன். அன்று பாமாவின் பேரிலிருந்த கோபத்தினால் எனக்கு எல்லாம் வெறுப்பாக இருந்தபோதிலும் எவ்விதமாகிலும் பொழுதைக் கழித்தாக வேண்டுமே என்ற எண்ணத்துடன் அதைப் பார்க்கச் சென்றேன். அன்று முழுவதும் மழையிலும் சேற்றிலும் அடிபட்டுச் சுற்றித் திரிந்து தேகம் முழுவதும் களைப்புற்றவனாய் இரவு படுக்க வந்தேன். ஆனால் என்னுடைய மனப்பான்மை காலையிலிருந்த மாதிரி இல்லாமல் மாறிவிட்டது. என்னுடைய கோபம் அகங்காரம் தீர்மானம், சபதம் எல்லாம் கரைந்துவிட்டது. நான் சக்தியே யில்லாதவனானேன். என்னுடைய அருமைக் காதலியை, நான் மணந்த மனைவியை இவ்விதம் தள்ளி வைக்கிறேன் என்று சொன்னேனே என்ற எண்ணம் என்னை வருத்த ஆரம்பித்தது. ஈசா, ஏனிவ்விதம் செய்தேன்! அவளைத் தாழ்த்த எண்ணி என்னையே யல்லவோ தாழ்த்திக்கொண்டேன்! "இது தான் உங்களுடைய நேர்மையோ!" என்ற அவளுடைய வார்த்தை என்னுடைய காதில் ஒலித்துக்கொண்டே இருந்தது. அவளுடைய முகத்துச் சிரிப்பு மறைந்து, முகம் சுண்டினதும், உதடுகள் ஓர் குழந்தையின் உதடுகள் போல வெளித் தேங்கினதும், பிறகு கடைசியில் கோபத்தினால் அவளுடைய முகம் சிவந்து, இகழ்ச்சியில் துடித்ததும் எனக்குத் தோன்றி என்னைப் பித்துப் பிடித்தவன் போலாக்கின.

இரவு போஜன மருந்த எனக்குச் சிறிதும் பிடிக்கவேயில்லை. மழையும் காற்றும் அதிகரித்தது. அவளைப் பார்த்து உடனே அவளுடைய மன்னிப்பைக் கேட்கவேண்டுமென்ற ஆவல் எனக்குத் தாங்கொணாமல் உண்டாயிற்று. என்னால் பொறுத்திருக்க முடியவில்லை.

என்னுடைய மோட்டாரைக் கொண்டு வரச் சொன்னேன். இருட்டில் இந்தக் காற்றிலும் மழையிலும் போவது கஷ்டமென்று சிலர் வற்புறுத்தினதைக் காதில் போட்டுக் கொள்ளவேயில்லை. அன்றிரவே திரும்பி ஆற்றுமலைக்கு வந்தேன். வழியில் மோட்டார் கவிழ்ந்து போகாமலும், நான் இறக்காமலும் எவ்விதம் தப்பினேன் என்பது எனக்கே தெரியாது.

நான் ஆற்றுமலைக்கு வந்த சமயம் இரவு சுமார் இரண்டு மணி இருக்கும். என்னுடைய ஆடைகள் முழுவதும் சொட்டச் சொட்ட நனைந்திருந்தன. வண்டியிலிருந்து இறங்கினதும், வாசற் கதவு திறக்கப்பட்டதும் உள்ளே சென்று மாடியில் எங்களுடைய படுக்கையறைக்கு ஓடினேன். ஆனால் அறையின் வாயிலில் தயங்கி நின்றேன். அவளுடைய தூக்கத்தைக் கெடுப்பதா என்ற எண்ணமுண்டாயிற்று.

வீட்டு வேலைக்காரி ஒருத்தி இரவில் இங்கேயே படுப்பது வழக்கம். அவள் நான் வந்ததை அறிந்து எழுந்து வந்தவள் என்னைக் கண்டு விட்டு ஏதோ உளறி, ஓவென்று அழ ஆரம்பித்தாள். எனக்கு அவள் சொன்னது புரியவில்லை. என்னுடைய நெஞ்சு அப்படியே சுருங்கி விட்ட மாதிரி இருந்தது. அத்தருணத்தில்தான் எவ்விதம் என்னுடைய மனைவி பேரில் என் உயிரையே வைத்திருக்கிறேன் என்பதை நான் உணர்ந்தேன். கதவைப் படீரென்று திறந்தேன்.

உள்ளே இருட்டாக இருந்தது. அங்கே ஒருவரும் இல்லை. விளக்கைக்கொண்டு வரச் சொன்னேன். அவளை எங்கும் காணோம். நான் வெறிகொண்டவன் மாதிரி வீட்டிலுள்ள மற்ற அறைகளிலெல்லாம் நுழைந்து அவளுடைய பெயரைச் சொல்லிக் கூப்பிட்டேன். என்னுடைய கௌரவம், மானம் எல்லாம் மறந்தேன். கடைசியில் காரியஸ்தன் தயக்கத்துடன் என்னுடைய எதிரில் வந்து, "எஜமானி அம்மாளும் அவங்களுடைய வேலைக்காரியும் எங்கேயோ புறப்பட்டுப் போய் விட்டார்கள்." என்றான்.



அதற்குமேல் அன்றிரவு நான் அனுபவித்ததெல்லாம் எழுதுவதற்கு அவசியமென்ன? நான் புறப்பட்டுச் சென்ற ஒரு மணி நேரத்திற்கெல்லாம் பாமாவும் நாச்சியாரும்கால்நடையாகவே ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று ரயிலேறிச் சென்றனராம். எந்த ஊருக்கென்பது காரியஸ்தனுக்குத் தெரியாதாம். நான் அவளுக்குக் கொடுத்த பட்டாடைகள் நகைகள் எல்லாம் அடுக்கி பீரோவில் வைக்கப்பட்டிருந்தன. அவள் தன்னுடன் கொண்டு வந்ததை மாத்திரமே திருப்பி எடுத்துச் சென்றிருந்தாள்.

அன்று அடிக்க ஆரம்பித்த பெரும் புயல் இன்று மூன்று தினமாகியும் இன்னும் ஓயவில்லை. ரயில் பாதைகள் முறிந்து விட்டனவாம். நானோ இந்த வீட்டை விட்டு வெளிச்சென்று அவளைத் தேட இயலாதவனாய் அடைபட்டிருக்கிறேன். ஈசனே! ஈசனே!

## அத்தியாயம் 13

புயலடித்துக்கொண்டிருந்த மூன்றாவது தினம் என்னுடைய கதையைத் தொடங்கினேன். அதற்கு மேல் இருபத்தி நான்கு மணி நேரம் கொட்டினபின்பே மழை நின்றது. இவ்விதப் புயலையும் மழையையும் நூறு வருஷத்திற்கொரு முறையே காணலாமென்று எல்லாரும் சொன்னார்கள். அது என்னுடைய காரியத்தைக் கெடுக்க இச்சமயம் வந்தது. காட்டாறுகளெல்லாம் உடைப்பெடுத்தன. தாம்பிரபரணி கரைபுரண்டு கிராமங்களை நாசம் செய்தது. நான் பாமாவைத் தேடுவதற்காக ஒவ்வொரு விநாடியும் துடித்த போதிலும் என்னுடைய கிராமத்தை விட்டு வெளிச் செல்ல முடியவில்லை.

என்னுடைய கிராமத்திற்குச் சமீபத்திலுள்ள ரயில்வே ஸ்டேஷனில் பாமாவும் நாச்சியாரும் ரெயிலேறிச் சென்றார்கள் என்றேனல்லவா! மழை சற்று நின்றதும் அங்கே சென்று ஸ்டேஷன் மாஸ்டரை விசாரித்ததில் அவர்கள் செங்கோட்டைக்கு டிக்கட் வாங்கிக்கொண்டார்களென்று தெரிந்தது.

நான் திருநெல்வேலியிலிருந்து திரும்பி வந்து எட்டு தினங்களான பின்பே செங்கோட்டைக்குச் செல்ல முடிந்தது. ஒருக்கால் திவான் மகள் இவ்வளவு நாட்களும் குற்றாலத்திலேயே தங்கியிருந்திருக்கலாம், பாமாவும் அவளிடம் போயிருக்கலாம் என்ற எண்ணத்துடன் மிக ஆவலாய் முன்பு அவர்கள் தங்கியிருந்த மைசூர் ராஜாவின் பங்களாவிற்குச் சென்றேன். அங்கே விசாரித்ததில் பத்து தினங்களுக்கு முன்பே, புயல் ஆரம்பிக்கு முன்பே அவர்கள் எல்லாரும் புறப்பட்டுச் சென்றதாகத் தெரிந்தது.

நான் அந்த பங்களாவின் தோட்டக்காரனை நன்கு விசாரித்தேன். நான் தெரிந்து கொண்ட விவரம் இவ்விதமானது. ஆனி மாதம், நான் குற்றாலம் விட்டுச் சென்ற மறுதினமே அந்தச் சின்னப் பெண்கள் இருவரில் ஒருத்தியும் ஒரு வேலைக்காரியும் செங்கோட்டைக்குச் சென்று விட்டார்களாம். (இது என்னுடைய மனைவி என்னிடம் வந்ததாக இருக்கும்.) மற்றொரு பெண்ணும், கனகப் பாட்டியுமாக அந்த பங்களாவிலேயே அடக்கமாக இருந்து வந்தனராம். சுமார் பன்னிரண்டு தினங்களுக்கு முன்பு கனகப்பாட்டி திடீரென்று நோய்கண்டு இறந்துவிட்டாளாம். இந்தச் செய்தியைக் குவாலியருக்கு திவானுக்குத் தந்தி கொடுக்கவே, அவர் தம்முடைய மகளை உடனே திரும்பிப் புறப்பட்டு வருமாறும், துணையில்லாமல் தனிமையில் இருக்க வேண்டாமென்றும் தந்தி அடித்தாராம்.

மறுதினம் முன்பு எங்கேயோ சென்ற மற்றொரு பெண்ணும் வேலைக்காரியும் திரும்பி வரவே எல்லாருமாக அவசரமாக சாமான்களைக் கட்டிக்கொண்டு, அன்று பகல் வண்டியிலேயே சென்னைக்குப் புறப்பட்டுச் சென்றனராம். அவர்கள் சென்னையில் தங்கப் போகிறதில்லை, நேரே "வாலிய"ருக்குப் போவார்கள் என்று தோட்டக்காரன் தன்னுடைய அபிப்பிராயத்தைக் கூட்டிச் சொன்னான்.

நான் அடுத்தபடியாக என்ன செய்வதென்று யோசித்தேன். என்னுடைய

[illegible] உடைய பிறந்த வீட்டாரைப் [illegible] செய்தி [illegible] எனக்குத் [illegible] இல்லை. அவர்கள் யார், எங்கிருக் [illegible] என்பது எனக்குத் தெரியாது. [illegible] கேட்கவா [illegible] என [illegible] இல்லை. பாமா சொன்னதிலி [illegible] திவான் சாம்பார் இந்த விவாகத் [illegible] பற்றி மிகவும் கோபிப்பாரென்றும் [illegible] விவாகம் நடந்திருக்கிறதென்று [illegible] டனே பாமாவை மாத்திர [illegible] அவளுடைய [illegible] எல்லாரை [illegible] இனிமேல் உதவி செய்வதை [illegible] விடுவாரென்றும் அறிந்திருந் [illegible] திவானின் தயவினால்தான் அந்தக் [illegible] பிழைத்து வருகிறதென்றும் [illegible] திருந்தேன். ஆனால் அவர்களுக்கு [illegible] தொந்தரவு கொடுப்பதற்காகிலும் [illegible] விவாகத்தைப் பற்றி வெளியில் பகி [illegible] படுத்தி நான் [illegible] அவர்களை ஏள [illegible] செய்ய இடம் கொடுப்பதற்காகிலும் [illegible] சிறிதும் [illegible] மேயில்லை. ஆகை [illegible] என்னுடைய மனைவிக்குத் குவாலிய [illegible] கடிதம் எழுதி, அவள் சம்மதித் [illegible] நான் அங்கு [illegible] அவளை அழை [illegible] வருவதாகவும், அவளுடைய பதிலை [illegible] பார்த்து சென்னையில் காத்திருப்ப [illegible] எழுதுவதென்று தீர்மானித்து [illegible] க்குத் திரும்பி வந்தேன்.

மறுதினமே என்னால் சேகரிக்கக்கூடிய பணத்தை எடுத்துக்கொண்டு சென்னைக்கு ரயிலேறினேன். ரயில் பாதைகள் முழுவதும் இன்னும் சீர்திருத்தப் படவில்லையாகையால் நான் சென்னைக்கு வந்து சேர மூன்று தினங்களாயின.

வழி முழுவதும் பாமாவின் மன்னிப்பைக் கோரி எவ்வளவு கடிதங்கள் எழுதி எழுதிக் கிழித்தேன் என்பதை ஈசனே அறிவார். கடைசியில் என்னுடைய மனசில் இருப்பதை அப்படியே கொட்டி ஒருவாறு எழுதி சென்னையில் என்னுடைய நண்பன் சுந்தரம் என்பவனின் விலாசத்திற்குத் தந்தி அடிக்குமாறு கேட்டிருந்தேன். இக்கடிதத்திற்கு விலாசம் 'திவான் வீட்டில் ஸ்ரீமதி ஜானகியம்மாள் பார்த்து ஸ்ரீமதி சத்யபாமாவிற்குக் கொடுப்பது' என்று எழுதினேன்.

இக்கடிதம் போய்ச் சேர நான்கு தினங்கள் பிடிக்கும். நான் கேட்டிருந்த விதம் பாமா தன்னுடைய விடையைத் தந்தியாக அடித்தாலும் அது எனக்குக் கிடைக்க ஐந்து தினமாகும். இந்த ஐந்து தினங்களையும் முன்பு சென்னையில் நான் காலேஜில் படிக்கையில் எனக்கு நெருங்கிய நண்பனான சுந்தரத்தின் வீட்டிலேயே கழிக்கத் தீர்மானித்தேன்.

(தொடரும்)

---

அப்டோன், லைன், கலர் பிளாக்குகள் டிராயிங், சினிமா ஸ்லைட்

## ரவி பிரதர்ஸ்

தபால் பெட்டி நெ. 248, மதராஸ்

[illegible] அரக்கு சீல், ஆபீஸ் பெயர் போர்டு முதலியவை தக்க வேலைப்பாட்டுடன் [illegible] காலத்தில் குறைந்த சார்ஜுக்கு வேலைசெய்து கொடுக்கப்படும்.

கேட்லாக் இனம்.

எல்லா ஊர்களுக்கும் ஏஜண்டுகள் தேவை.

---

[illegible]க் ஹாரிஸ் எழுதிய

# யூதர்களின் அரசன்

“சஞ்சீவி” மொழிபெயர்ப்பு.

பாத்திரங்கள்.

ஹாஷிம் :—பென்ஜமின் வம்சத்துப் பெண்; ஸைமனின் மனைவி; அலெக்ஸாண்டர், ரூபஸ் என்ற அவளுடைய இரு பிள்ளைகளுக்கும் தாய்.

ஸைமன்:—ஸிரீன் நகரத்தான்; பெத்தெலுக்குப் போகும் வழியில், ஜெருஸலத்திற்கு வெளியேயுள்ள பிரதேசத்தில் அவனுக்கு நிலம் உண்டு.

இடம் : ஜெருஸலம்.

காலம் : அன்றைய நடவடிக்கைகளின் ஆரம்பம்.

ஹாஷிம் : என்ன செய்யவேண்டுமென்று இப்பொழுது உனக்குப் புரிகிறதா? இரண்டு மணிக்கு நீ மடத்திற்குப் போய், ஜோடுக்காகக் காத்திரு. அவன் வந்ததும், நேராக மதகுருவிடம் உன்னை அழைத்துக்கொண்டுபோவான். உனக்குத்தான் ஜோடைத் தெரியுமே, ஒரு சாமியாரைப் போல உடுத்திக் கொண்டிருப்பான். அவனைப் போல அழகனைப் பார்த்ததேயில்லையென்று அவனிடம் சொல்லு; உனக்குத் தெரியுமே, அந்தக் குள்ளனுக்கு முகஸ்துதியில் பிரியம் அதிகம். குருவிடம், அவருடைய தரும குணத்தையும் நெறி தவறாத தன்மையைப் பற்றியும் ஸ்லாகித்துப் பேசு; உலகத்திலேயே அப்படி இருப்பது ரொம்ப, ரொம்ப அபூர்வமானது என்று சொல்லு; உன் இஷ்டப்படி எதை வேண்டுமானாலும் அளந்து விடு...மட்டுக்கு மீறிப் புகழுவதற்குப் பயப்படாதே; மனிதர்கள் புகழ்ச்சியை விரும்புகிறார்கள்.

ஸைமன்: (தன் தலையை ஆட்டுகிறான்) என்னால் முடிந்தமட்டும் பார்க்கிறேன்.

ஹாஷிம் : நாலு மணிக்குள் எனக்கு விபரம் தெரியாவிட்டால், மிகவும் கவலையாயிருக்கும். முடிவைத் தெரிந்து கொண்டு வருவதற்கு அலெக்ஸாண்டரை உன்னிடம் அனுப்புவேன். அவன் சூக்ஷ்ம புத்தியுடையவன். எப்படியும் அறிந்து கொண்டு வந்து விடுவான். முகஸ்துதி பண்ணத் தயங்காதே. மடத்தில் வாசற்காப்போனாக நீ ஆகவேணும். புகழ்ச்சி தேன் மாதிரி; புகழ்ச்சிக்கு ஒருவன் எவ்வளவுக்கெவ்வளவு பாத்திரவானில்லையோ அவ்வளவுக் கவ்வளவு அவன் புகழ்ச்சியை விரும்புகிறான்.

ஸைமன் : (போய்க் கொண்டே) நீ சொன்னபடியே செய்கிறேன், ஹாஷிம்.

அன்று பதினோரு மணி சுமாருக்கு

ஹாஷிம் :—சரி, உனக்கு வேலை கிடைத்ததா? எப்படியும் உனக்கு அது கிடைத்திருக்கணும். நீ இப்போ மடத்தின் வாசற்காப்போன்தானே? அங்கே ஜாகை யெல்லாம் ஏற்பாடாகிவிட்டதா?

ஸைமன் : (தன்னுடைய நெற்றியைப் பிடித்து விட்டுக் கொண்டே) எனக்குத் தெரியாது.

ஹாஷிம் : தெரியாதா? உனக்குத் தெரிந்திருக்க வேண்டுமே. ஜோடு அங்கே இருந்தானா, இல்லையா? உனக்குச் சிபார்சு செய்வதாக என்னிடம் உறுதி கூறியிருந்தானே. நீ அவனைப் பார்த்தாயா?

ஸைமன் : நான் அவனைப் பார்க்கவில்லை. (ஆயாசத்தோடு உட்கார்ந்துகொள்கிறான்)

ஹாஷிம் : பார்க்கலை! அவன் அங்கே வரவில்லையா? அந்தப் பொய் சொல்லி— எனக்கு உறவுங்கூடத்தான்-சத்தியமாகச் சொன்னானே! நீ அங்கே என்ன செய்தாய்?

ஸைமன் : நான் ஒன்றும் செய்யவில்லை. எனக்குக் களைப்பாயிருக்கிறது, ஹாஷிம்.

ஹாஷிம் : களைப்பா? என்ன நடந்தது? ஏன் பேசாமலிருக்கிறாய்? உனக்கு என்ன வந்தது? நீ ஊமையா? உடம்புக்கு என்ன அப்படி அசௌக்கியம்?

ஸைமன் : ஆயாசமாயிருக்கிறது; அவ்வளவுதான்.

ஹாஷிம் : மரக்கட்டை மாதிரி, உனக்கு ஆயாசம் வேறேயா? இவ்வளவு நேரம் எங்கே இருந்தாய்? என்ன செய்துகொண்டிருந்தாய்? உனக்கு என்ன நேர்ந்தது? உன்னால் பேச முடியாதா?

ஸைமன் : உனக்கு மாத்திரம் அது தெரிந்திருந்தால்—

ஹாஷிம் : என்ன தெரிந்திருந்தால்? ஐயோ, என்னைப் பயித்தியமாயடிக்கிறாயே! (அவள் அவன் தோளைப் பிடித்துக் குலுக்குகிறாள்) என்ன விஷயம்? என்ன நடந்தது? அட, மிருகமே, பேசேன்.

ஸைமன் : அடி, நீ கோபப்படுவதற்கு ஒரு காரணமுமில்லை.

ஹாஷிம் : காரணமில்லையா! உனக்கு அந்த ஸ்தானம் கிடைத்து விட்டதா? மதகுரு என்ன சொன்னார்? அதைத்தான் சொல்லித் தொலையேன்.

ஸைமன் : எனக்குத் தெரியாது.

ஹாஷிம்: உனக்குத் தெரியாதா? உனக்குப் பித்துப் பிடித்திருக்கு. இப்படி ஒரு அன்னியனை, ஒரு மிருகத்தை, ஒரு மூடத்தை நான் கட்டிக்கொண்டு என்ன செய்கிறது? அப்பவே அவர்களெல்லாம் எவ்வளவோ சொன்னார்கள். பாவிக்கு ஒன்றும் காதிலே ஏறவில்லை. ஐயோ ஓ!

ஸைமன் : அழாதே அழாதே, ஹாஷிம். எல்லா விபரத்தையும் உனக்குச் சொல்லுகிறேன். சாவதானமாகக் கேள்.

ஹாஷிம் : (தன் கண்களைத் துடைத்துக் கொண்டே) வாசல்காப்பதற்கு உன்னைப் போட்டார்களா? எனக்கு அதுதான் தெரியவேண்டும். சொல்லேன். சீக்கிரம் சொல்லு. இரண்டு மணிக்கு மடத்திலிருப்பேன் என்று சொன்னாயே; இப்போ பதினொரு மணியாகிவிட்டதே. பகல் பூராவும் எங்கே அலைந்தாய்?

ஸைமன்: பெண்ணே, எனக்கு வருத்தமாயிருக்கிறது; எனக்கு ஞாபகமில்லை.

ஹாஷிம் : ஞாபக மறதி, வருத்தம்! என்ன நினைப்போடு சொல்லுகிறாய்? மத குருவுக்கு உன்னைப் பிடித்து விட்டால் ஜோடு உனக்கு அந்த வேலையை நிச்சயம் வாங்கித் தருவதாகச் சொன்னான். உனக்கு அது கிடைத்ததா? அவர்கள் என்ன சொன்னார்கள்? அட, மூடமே! சொல்லித் தொலையேன்.

ஸைமன் : எனக்கு அதை நினைத்தால் துக்கம் துக்கமாக வருகிறது; அதைப் பற்றின ஞாபகமே எனக்கு இல்லை. நான் மடத்துக்கே போகவில்லை.

ஹாஷிம் : நீ மடத்துக்குப் போகவில்லையா? ஏன்? பின் நீ எங்கேதான் போயிருந்தாய்? எலிக்கு அந்த வேலை கிடைத்ததென்று மாத்திரம் என்னிடம் சொல்லாதே. சொன்னால் அடிதான் விழும்.

ஸைமன் : என் மனம் ரொம்பக் கஷ்டப்படுகிறது. எனக்கு ஞாபகமில்லை. அது யாருக்குக் கிடைத்ததென்று எனக்குத் தெரியாது. நான் அங்கே போகவில்லை.

ஹாஷிம் : (உட்கார்ந்துகொண்டு) ஓ! ஓ! ஓ! அவன் அங்கே போகவில்லையாம்! ஓ! ஓ! ஓ! இவ்வளவு நாழிகை எங்கேதான் இருந்தாய்? என்ன செய்துகொண்டிருந்தாய்? எங்கே சாப்பிட்டாய்?

ஸைமன் : சாப்பிடவில்லை—

ஹாஷிம்: சாப்பிடவில்லையா! ஏன் சாப்பிடவில்லை? என்ன கொள்ளை வந்தது உனக்கு! பேசு, ஒன்று விடாமல் எனக்குச் சொல்லு!

ஸைமன் : உனக்கு எல்லா விஷயத்தையும் சொல்லுகிறேன்; ஆனால் மிகவும் களைப்பா யிருக்கிறதே.

ஹாஷிம் : முதலில் அந்த வேலை யாருக்குக் கிடைத்ததென்று சொல்லு. நீ அதைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கவாவது வேண்டுமே.

M211, N32MK



ஸைமன் : எனக்குத் தெரியாது. நான் கேள்விப்படவுமில்லை.

ஹாஷிம் : உன்னைத் தேர்ந்தெடுத்தாரா வென்று பார்த்து வரும்படி அலெக்சாண்டரை மடத்துக்கு அனுப்பினேன். ரொம்ப இருட்டினதற்கு அப்புறம் ரூபஸை நாத்தனார் ஹோஷேட் வீட்டிற்கு அனுப்பினேன். இந்த சசேமிராவை என்னால் தாங்கமுடியவில்லை. அவர்கள் இரண்டு பேரும் ஒரு தகவலு மில்லாமல் திரும்பி வந்தார்கள். யாருக்கு அந்த வேலை கிடைத்ததென்பது உனக்கு நிச்சயமாகத் தெரிந்திருக்கவேண்டுமே!

ஸைமன் : இல்லை, உண்மையாக எனக்குத் தெரியாது. நான் அதைப்பற்றி விசாரிக்கவுமில்லை. ஆனால்—

ஹாஷிம் : (அவனுக்கு ஒயினைக் கொடுத்துக் கொண்டே) இந்தா! இப்போ எல்லாவற்றையும் சொல்லு. வயலுக்குப் போனாய். அப்புறம்?

ஸைமன் : (ஒயினைக் குடித்துக்கொண்டே தலையை அசைக்கிறான்) நான் வயலுக்குப் போனேன். இரண்டு மணிவரை அங்கே வேலை செய்துகொண்டிருந்தேன். பிறகு பட்டணத்துக்கு வந்தேன். மடத்திலிருந்து கோல்கோத்தாவிற்குப் போகும் தெருவை அடைந்தேன். தெருவைக் கடந்து என்னால் போக முடியவில்லை, அவ்வளவு கும்பல். யாரோ சில கைதிகளைச் சிலுவையில் [illegible]பதற்கு அந்த வழியாகக் கொண்டு [illegible]பாகிறார்களென்று ஜனங்கள் ஓரே [illegible]மாக வந்திருந்தார்கள்.

[illegible]ஹாஷிம்: ஆனால் நீ அவர்களை விலக்[illegible]கொண்டு போகிறதற்கு என்ன?

ஸைமன் : நான் முதல் வரிசையை [illegible]லக்கிக் கொண்டுதான் போனேன். [illegible]னால் உள்ளே சிப்பாய்கள் வழியை மறித்துக்கொண்டிருந்தார்கள். நான் [illegible]தாமதிக்க வேண்டியதாயிற்று. ஒரு ஆளுக்குக்கூட அவர்கள் வழி விடவில்லை. அந்த வழியாக மூன்று துரோகிகள் வருவதாக அவர்கள் என்னிடம் சொன்னார்கள். ஜனங்கள் அவர்களைப் பற்றியேதான் பேசிக்கொண்டிருந்தார்கள். இரண்டு பேர் திருடர்களாம். இன்னொருவன் வடக்கேயிருந்து வந்த கலகக்காரனாம். தன்னை அரசனாக்கிக் கொள்ள அவன் பிரயத்தனப்பட்டானாம். அவனைப் பார்ப்பதற்காகத்தான் ஜனங்கள் திரள் திரளாக வந்து அப்படிக் குழுமி யிருந்தார்கள். அவன் ஒரு தீர்க்கதரிசி யென்றுகூடச் சிலர் சொல்லிக்கொண்டார்கள்.

கொஞ்ச நேரம் கழிந்ததும், அந்த மூன்று கைதிகளும் வந்தார்கள். முதலில் இரண்டு திருடர்கள் வந்தார்கள். பின்னால் மெதுவாக நடந்துகொண்டு சிலர் சொன்னபடி அந்த ‘தீர்க்கதரிசி’ வந்தான். அவன் முகம் வெளிறிப் போயிருந்தது. (அதிக நேரம் மௌனத்திற்குப்பின்) முள் வைத்துப் பின்னின ஒரு குல்லாயை அவன் தலையில் அவர்கள் அடித்திருந்தார்கள்; முட்கள் சதையைக் கிழித்ததால் ரத்தம் முகத்தின் வழியாக வழிந்துகொண்டிருந்தது. அவன் எனக்கு எதிரில் வந்ததும், ‘தொபுகடீ’ரென்று கீழே விழுந்து விட்டான்; செத்தவன் போல அசைவற்றுக் கிடந்தான்; அந்தச் சிலுவை மிகப் பளுவாயிருந்தது. பட்டாளத்தலைவன் அவனிடமிருந்து சிலுவையை எடுக்கும்படி உத்தரவிட்டதும், அவன் எழுந்திருந்தான்; அவனால் நிற்கக்கூட முடியவில்லை, அவ்வளவு பலஹீனமாயிருந்தான். கும்பலோடுகும்பலாக நின்றுகொண்டிருந்த என்னை அந்தத்தலைவன் பிடித்து இழுத்து அந்தச் சிலுவையை [illegible] தோளில் தூக்[illegible]கொண்டு வரும்படி சொன்னான்.

19770

ஹாஷிம் : ஆ[illegible]ல் நீ எதற்காகத் தூக்கவேண்டு[illegible]

ஸைமன் : நீ[illegible] [illegible]னுக்குத் தோன்றினே[illegible]!

ஹாஷிம் : நீ மடத்திற்குப் போக வேண்டுமென்று அவனிடம் சொன்னாயா?

ஸைமன் : சொல்லாமலா? சொன்னேன். ஆனால் அவன் என்னை முன்னால் கெட்டித் தள்ளி, தான் சொன்னபடி செய்யாவிட்டால் இரண்டு கால்களுமில்லாமல்தான் மடத்துக்கு நான் போக முடியுமென்று என்னைப் பயமுறுத்தினான்.

ஹாஷிம்: ஓ! என்ன துரதிர்ஷ்டம்! உன்னைப் போலத் துர்ப்பாக்கியசாலி ஒருவனுமில்லை, ஒருவனுமே இல்லை. நீ ஏன் அந்த இடத்தை விட்டு ஓடியிருக்கக் கூடாது?

ஸைமன்: அந்த யோசனை எனக்கு அப்பொழுது தோன்றவில்லையே.

ஹாஷிம்: சரி, நீ சிலுவையைச் சுமந்துகொண்டாய்; அப்புறம்—

ஸைமன்: நான் சிலுவையைத் தூக்குவதற்குப் போனேன்; அந்த மனிதனைத் தண்டிப்பதில் நானும் உதவி செய்வதாக எனக்குப் பட்டது. நான் கொஞ்சம் திகைத்துக் கொண்டிருந்த பொழுது அவன் என்னைப் பார்த்தான். ஹாஷிம், அப்படிப்பட்ட கண்ணையோ, பார்வையையோ நான் கண்டதேயில்லை. எப்படியோ நான் அதைச் செய்ய வேண்டுமென்று அவன் விரும்புவதாக எனக்குத் தோன்றிற்று. அந்தச் சிலுவையைத் தோளில் தூக்கி வைத்துக் கொண்டு நான் நடந்தேன். அவனுடைய பார்வையையே எண்ணிக் கொண்டுபோனதால் அதனுடைய கனம் எனக்கு அவ்வளவாகத் தெரியவில்லை. நாங்கள் கூட்டத்தின் மத்தியில் கோல்கொத்தாவைத் தாண்டி ஒரு குன்றை அடைந்தோம். அதன் உச்சிக்குப் போனதும் நான் சிலுவையைக் கீழே வைத்துவிட்டேன்.

ஹாஷிம். அது எப்பொழுது? மூன்று மணி தானே ஆகியிருக்கும்? அப்புறம் நீ மடத்துக்குப் போகிறதற்கென்ன? எல்லாம் உன்னுடைய தவறுதான் என்று தெரிகிறதா? எனக்குத்தான் தெரியுமே! சரி, சொல்லு, சொல்லு.

ஸைமன்: மடத்தைப் பற்றிய ஞாபகமே எனக்கு அப்பொழுது கிடையாது. அந்த மனிதனைத் தவிர வேறொன்றையும் என்னால் நினைக்க முடியவில்லை. ஜனங்களும் சாமியார்களும் அவனைக் கேலி பண்ணினார்கள். அவன் சாந்தமூர்த்தியாகவே நின்றுகொண்டிருந்தான்........ மற்றவர்களைத் தொங்கவிட்ட பொழுது அவர்களிட்ட பெருங் கூக்குரலும் அழுகையும், சாபமும்! அப்பப்ப! என்ன பயங்கரம்! இப்பொழுதுகூடப் புல்லரிக்கிறது.

அவனைச் சிலுவையில் வைத்து ஆணி அறைவதற்கு அவர்கள் ஆயத்தம் பண்ணிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது நான் அவன் சமீபத்தில் நெருங்கி, "ஓ மகாத்மாவே!" என்று அழைத்தேபா அவன் என் பக்கமாகத் திரும்பிப் பாக தான். "என்னை மன்னியுங்கள்! தங்க விரோதிகள் விரும்பினதைச் செய்ததற்கு என்னை மன்னிக்கவேண்டும்." என்று பிரார்த்தித்தேன். அவன் என்னை மறுபடியும் பார்த்தான்; என் இருதயம் தண்ணீராய் உருகிவிட்டது; கண்களிலிருந்து அருவிபோல நீர் கொட்டிற்று. ஏனென்று எனக்கே தெரியவில்லை............அவன் என் தோள்களில் கையை வைத்துச் சொன்னான், "நண்பா, நண்பா, உன்னை மன்னிப்பதற்கு நீ ஒரு தவறும் செய்து விடவில்லையே!" (கையில் தலையை வைத்துக்கொண்டு அழுகிறான்.)

ஹாஷிம்: அழாதே, ஸைமன். அவன் ஒரு மகானாய்த்தான் இருக்கவேண்டும்.

ஸைமன்: நீ அவனைப் பார்த்திருந்தால், தீக்ஷண்யமான அவன் கண்களைக் கண்டால்.......................

ஹாஷிம்: (உரக்கச் சொல்கிறாள்) எனக்குத் தெரியும். இன்னும் அவன் என்ன சொன்னான்?

ஸைமன்: எனக்கு வந்தனமளித்தான். முன் பின் பழக்கமில்லாத அன்னியனாயிருந்தும் முரடனாகத் தோன்றினபோதிலும் என்னை அணைத்து முத்தமிட்டான்............அந்த அணைப்பில் என்னை ஆட்கொண்டு விட்டான்.

அவன் விசித்திரமானவன். அ சிலுவையில் அறைந்தபொழுது, சத்தமே போடவில்லை; பெருமூச்சுக் விடவில்லை.

சிலுவையை மேலே தூக்கினபொழு அவன் முகம் வெளிறி, வெளிறி ஒ வெளுப்பாகி விட்டது. சாமியார்களும் ஜனங்களும் பிறரைக் காப்பாற்றக் கூடியவன் தன்னையேன் காப்பாற்றிக் கொள்ள முடியவில்லையென்று அவனைப் பார்த்துக்கேட்டார்கள். ஆனால் அவன் ஒரு வார்த்தை கூடப் பதில் சொல்லவில்லை... ...அவர்களை—அந்த மிருகங்களை நான்



கொன்றிருப்பேன். அவர்களை மன்னிக்கும்படி கடவுளிடம் அந்த மகாத்மா வேண்டினான். தாங்கமுடியாத வேதனையால் அலறின திருடன் ஒருவனுக்கு ஆறுதல் கூறினான்.

அடாடா, அவன் மிகவும் ஆச்சரியமானவன். தன்னைச் சித்திரவதை செய்யும் சமயத்திலும் பிறரைப் பற்றிய சிந்தனைதான்—ஆயினும் எல்லோரையும்விட அவன் மிகவும் பலஹீனன்!

என் மனம் திடுக்குற்றது. நான் இருட்டில் மணிக் கணக்காக நின்றுகொண்டிருந்தேன். அவனுடைய சொந்த ஜனங்கள் அந்தச் சிலுவையைச் சுற்றி வந்தார்கள். அவனைக் கீழே யிறக்கி, நான் அழைத்தபடியே "மகாத்மா," "மகாத்மா" வென்று கொண்டாடினார்கள். அவர்கள் அவனிடத்தில் மிகுந்த அன்புள்ளவர்கள். அவ்னிடம் அன்பு கொள்ளாமல் யாரும் இருக்க முடியாது, எவனாலும் முடியாது...

அவன் தலைக்கு மேலே அந்தச் சிலுவையில் "யூதர்களின் அரசன்" என்று எழுதி யிருந்தார்கள். யூதர்களுக்கு அரசனில்லை யென்று அவனைப் பரிகசிக்கவே அப்படி யெழுதி யிருந்தார்கள். ஆனால் அவன் ஒரு அரசன்தான், மனித இருதயங்களின் அரசன்.

ஹாஷிம்: எது எப்படி யிருந்து என்ன செய்ய? இடம் போய்விட்டதே! அவனுடைய பெயரென்ன?

ஸைமன். நாசரத்து ஏசு.

ஹாஷிம்: உன்னிடம் என்ன சொன்னான்? திரும்பச் சொல்லு. மறந்துபோய் விட்டது. ஹோஷேட்டிடம் ஞாபகமாய்ச் சொல்லவேணும்.

ஸைமன்: முன்பின் தெரியாத அவனுக்கு நான் ஒருவனே உலகத்தில் அவன் சுமையைத் தாங்கி உதவி செய்ததனால் "ஆசீர்வாதம் பெற்றவன்" என்று அவன் என்னை அழைத்தான்.

---


## மூன்று கேள்விகள்!

தமிழர் யார்? திரு. நாரண—துரைக்கண்ணன் எழுதியது. விலை அணா 4

திரிபுரம் வழிகாட்டுமா? திரு. கே. ராமநாதன் எழுதியது. விலை அணா 4

ஹிந்தி அவசியமா? சுவாமி சுத்தானந்த பாரதியார் எழுதியது. விலை அணா 4

[தபாற் செலவு தனி.]

## சந்தனக்காவடி

### முதலிய கதைகள்

[எழுதியவர்: தி. ஜ. ர.]

" இந்த நூலில் ஒவ்வொரு கதையும் ஓரோர் அம்சத்தில் தலைசிறந்து விளங்குகிறது. ஆசிரியரின் தமிழ் நடை, அழகான தங்கக் கம்பியைப் போல் இழுத்த இழுப்புக்கு வரக்கூடிய நடை. அதில் பொதிந்து கிடக்கும் சுவையை வண்டிக்கணக்கில் ஏற்றலாம். இந்தக் கதைகள் தமிழில் சிரஞ்சீவித் தன்மை பெறக் கூடியவை......................."

—வ. ரா.

விலை அணா 8.

மணிக்கொடி புத்தகசாலை, ஜி. டி. மதராஸ்.

# பகாசுரப் பேர்வழிகள்

எம். எஸ். சுப்பிரமணிய அய்யர்.

தரை முதல் தளம் வரையில் வெடி மருந்துகள் நிறைந்த மாளிகை. அதில், தீப்பொறி பட்டால் என்னாகும்? பிரளய காலம்போல், எங்கும் கொடுங்கனல் பரவும் அல்லவா? 1757-ஆம் ஆண்டு முதல், 1856-ஆம் ஆண்டு வரையில் பாரத பூமி பிரமாதமான வெடிமருந்துச் சாலையாகவே விளங்கியது. 1857-ஆம் ஆண்டிலே அச் சாலையில் தீ பரவியது. அதனையே "சிப்பாய்க் கலகம்" என்பர் பலரும்.

அன்று, டில்லியிலே பாதுஷாவாக இருந்தவன் பகதூர் ஷா. அரசும் பவிஷும் இழந்து கிடந்தான் அம்மன்னன். ஆயினும் ஆண்மையை மட்டும் இழக்கவில்லை. பரம்பரைப் பெருமைக்கு அடையாளமாக ராஜதானி ஒன்றுதான் அவனுக்கு மிச்சம். இருக்கும் இடத்திலிருந்தும் அவனை விரட்டிவிட ஆங்கிலேயர் எண்ணினர்; அவன் மகனுடன் சேர்ந்து, மறைவாகச் சதியும் செய்தனர். சுதந்திரத் தீ பகதூர் ஷாவைச் சூழ்ந்துகொண்டது. அப்போது அப்பெருமான் விடுத்த விளம்பரம் இது:-

"தற்சமயம் நம் தேச நிலைமை யாது? ஹிந்து - முகம்மதிய மக்களின் நிலைதான் என்ன? எல்லாம் ஒரே பாழ்தான், இன்றேல் அழிவுதான். இதற்குக் காரணம் யாது? அன்னிய ஆங்கிலேயரின் துரோகமும் கொடுமையுமேயாம். ஆகவே, செல்வச் சீமான்களின் கடமை என்ன? மகா ஜனங்கள் சுகமே வாழ்வதற்காக, அச் சீமான்கள் தங்கள் சொத்தைக் கொடுக்க வேண்டும்; உயிரையும் வழங்க வேண்டும். இரண்டையும் வழங்கினலன்றி நம் தேசத்துக்குக் கதிமோட்சம் ஏது?

"நமது தேசத்தின் கதிமோட்சத்தைக் கருத்தில் கொண்டே, நமது குடும்பத்தைச் சேர்ந்த இளங்குமரர் பலர் இந்தியாவின் நாலு பாகங்களுக்கும் சென்றனர்; துருக்கிஸ்தானம், ஆப்கானிஸ்தானம், பாரசீகம் முதலிய தேசங்களுக்கும் போயுளர். ஆங்காங்குள்ள அனைவருக்கும் உண்மையை உரைத்து ஆதரவு தேடுவதே அவர்கள் நோக்கம். தேச கதிமோட்சம் தர்ம கார்யம். ஒரு குமரன் ஆப்கானிஸ்தானத்திலிருந்து, படையுடன் கிளம்பியுள்ளான் நமக்குப் பக்கபலம் தர.

"அரசனாக அமர்ந்திருப்போன் தர்மஸ்தாபனம் செய்தல் வேண்டும். ஆதலின், ஆண்டவன் அல்லாவின் அருளை முன்னிட்டு, டில்லியிலே பிறைக்கொடி தூக்கியுள்ளோம்; ஆங்கில ஆட்சி இங்கே அழிய வேண்டுமானால், இந்து மதத்தாரின் உதவி அவசியம். ஆதலால், மகாவீரக் கொடி தூக்கும் வண்ணம் இந்து மத துரந்தரரையும் வேண்டிக் கொண்டுள்ளோம். மதத்தைக் காக்கவேண்டி அரசையும் துறந்து, ஆங்கிலேயரை வேரறுக்க வெளிப்பட்டுள்ள இந்து-முகம்மதிய மன்னரில் பலர் டில்லிக்கு வந்துளர். மேலைத் தேசங்களிலிருந்தும் விரைவில் பக்க பலம் கிட்டுமென எதிர்பார்க்கின்றோம்.

"உள்ள நிலையை அனைவரும் அறிய வேண்டியே இவ் விளம்பரம் விடுக்கின்றோம். தேச சேவையில் ஈடுபடப் பலருக்கும் ஆவல் இருக்கலாம். ஆயினும் சௌகரியங்கள் இரா. அன்னாருக்கு நமது அரண்மனையிலிருந்து அன்றாட வாழ்வினுக்குரிய வகை கிடைக்கும். வேத சாஸ்திர விற்பன்னரும் சரி, தீர்க்கதரிசிகளும் சரி, நாளும் கோளும் பார்த்துச் சொல்லும் சோதிடரும் சரி, இந்தியாவிலே ஆங்கிலேயருக்கு அழிவுகாலம் கிட்டியுளதெனவே ஒரு முகமாக உரைக்கின்றனர்.

"எனவே, இனியும் ஆங்கிலேயர் இங்கிருப்பாரென எவரும் மனப்பால் குடிக்க வேண்டாம்; அனைவரும் நம்முடன் தர்ம யுத்தத்தில் சேர்தல் வேண்டும். நல்ல சமயம் இது. இச்சமயம் தவறினால், வேறு சமயம் வாய்ப்பது அருமை. ஆங்கிலேயருக்கு இச்சகம் பேசித் திரிவோர் நமக்குள் இருக்கலாம். யுத்தமென்றால், எவ்வளவோ கஷ்ட நஷ்டங்கள் நேரும், ஏன் இத்தொல்லை என்று அன்னவர் போதித்துப் பேதிக்க முயலுவர். அம் மோச வார்த்தையில் விவேகிகள் ஈடுபடக் கூடாது.

"யுத்தக் கொந்தளிப்பிலே சில பேருக்கு ஆஸ்தி பாஸ்தி கை தவறலாம்; யுத்த வீரரில் சிலர் நெறி தவறி மதிகெட்டுக் கொள்ளை நடத்தலாம்; எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபமெனச் சிலர் கொள்ளையும் புரியலாம். அவ்விதம் கஷ்ட நஷ்டத்துக்கு ஆளாவோர் அதனை விவரமாக நமக்கு அறிவித்தால், டில்லி கஜானாவிலிருந்து அன்னாருக்கு ஈடு செய்யப்படும். இது சத்தியம். யுத்த காலத்திலே சில்லறை அசௌகரியங்களும் அனர்த்தங்களும் நேருதல் இயற்கைதான். எல்லாம் கொஞ்ச நாளைக்குத்தான்.

"ஜமீன்தார்களே! உங்கள் நிலை என்ன? உங்கள் இனத்தாரின் நிலைமை யாது? சாசுவத நிலத் தீர்வை விதித்துளர் ஆங்கிலேயர். அத்தீர்வை மிகவும் அதிகம். அதனைச் செலுத்த உங்களில் பலருக்கும் வகை கிடையாது. அதனால் பல ஜமீன்தார்கள் அழிந்தே போய்விட்டனர்; பல ஜமீன்கள் ஏலத்தில் போய்விட்டன. அற்பனொருவன் அபாண்டமான வழக்குத் தொடுப்பின், ஜமீன்தார்களாகிய நீங்கள் கோர்ட்டேறி அவமானப்பட நேருகிறது.

"ஜமீன்களைப் பற்றி தாவாக்கள் ஏற்பட்டால், அப்பப்பா, ஸ்டாம்பு செலவு எவ்வளவு? கோர்ட்டு செலவு எவ்வளவு? தாவா நீடிக்கும் காலம் எவ்வளவு? தாவா தீர்வதற்குள் வழக்காளி பரம தரித்திரனாகி விடுகிறான். இனி, அதற்குப் பணம், இதற்குப் பணம் என்று உங்களிடமிருந்து ஏராளமான பணம் வாங்குகின்றனர் ஆங்கிலேயர். பாதுஷாவின் ஆட்சியிலே அத்தகைய பணப்பறி இராது; ஜமீன்தார்களின் கௌரவமும் குறையாது; வழக்குகள் உடனுக்குடனே பைசல் ஆகும்.

"சுதந்திர தர்ம யுத்தத்திலே பணமும் படையும் கொடுத்து உதவும் ஜமீன்தார்களுக்கு சாசுவதமாகப் பாதித் தீர்வை வஜா செய்யப்படும். பணம் மட்டும் கொடுத்து உதவும் ஜமீன்தார்களுக்குக் கால்வாசித் தீர்வை வஜா ஆகும். ஆங்கில ஆட்சியின் விளைவாக ஜமீனை இழந்த ஜமீன்தார் இந்த யுத்தத்தில் சேர்ந்து ஊழியம் புரியின், இழந்த ஜமீன் அன்னாருக்கு அளிக்கப்படும்; ஓரளவு வரி வஜாவும் கிட்டும்.

"வியாபாரிகளே! அவுரி, பருத்தி முதலிய லாபகரமான வாணிபத்தை யெல்லாம் ஆங்கிலேயரே ஏகபோகமாக அனுபவித்து வருகின்றனர். சில்லறை வியாபாரந்தான் உங்களுக்கு மிச்சம். இதிலும் ஆங்கிலேயர் உங்களிடம் பங்குக்கு வருகின்றனர். உதாரணமாக, சுங்க வரியாம்; ஸ்டாம்பு வரியாம் பாருங்கள். மேலும், கிடைக்கும் கொஞ்ச லாபத்திலும் பங்கு பெற அன்னார் பலவகை வரி போட்டுளர். இவ்வளவுதானா? கீழ்மகனொருவன் பிராது கொடுத்தால், உங்களைச் சிறையிலும் போட்டு வைக்கின்றனர்.

"பாதுஷாவின் ஆட்சி ஏற்பட்டால், அந்த மோச வரிகளும் நாச வரிகளும் இரா. உள்நாட்டு வியாபாரமும் சரி, வெளிநாட்டு வியாபாரமும் சரி, உங்களுக்கே கிடைக்கும். அன்னியரின் ஏகபோகம் பறந்துபோம். உங்கள் சாமான்களைக் கடலிலோ நதியிலோ சுமந்து செல்ல அரசாங்கத்தின் கப்பல்கள் இனாமாகக் கிடைக்கும். முதல் இல்லாத வர்த்தகர்களுக்கு முதல் கொடுத்து உதவவும் வகை செய்யப்படும். ஆதலால் வர்த்தகர் அனைவரும் சமய சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு, அந்தரங்கமாகவோ பகிரங்கமாகவோ சுதந்திரப் போருக்கு உதவி புரிதல் வேண்டும்.

"உத்தியோகஸ்தர்களே! ஆங்கில ஆட்சியிலே உங்களுக்கு உயர்ந்த உத்தியோகங்கள் ஏது? சில்லறை உத்தியோகங்கள் தான் உங்களுக்குப் பிராப்தி. உங்களுக்கு கௌரவமாவது மரியாதையாவது உண்டா? செல்வாக்கு உண்டா? இல்லை. பெரிய பெரிய உத்தியோகங்களெல்லாம் ஆங்கிலேயருக்கு; கொழுத்த சம்பளமும் அவர்களுக்கு; அந்தஸ்தும் செல்வாக்கும் அவர்களுக்கு!

"சேனையிலே நீங்கள் ஆயுள் அளவும் சேவகம் புரிந்தாலும் சுபேதார் பதவிக்கு மேல் எட்டிப் பார்க்க முடியாது; சம்பளமோ அறுபது அல்லது எழுபது ரூபா தான். ஸிவில் இலாகாவிலே பெரிய வேலை பார்த்தாலும், ஐந்நூறு ரூபா சம்பளம் கிடைப்பதும் அருமை. முடிவிலே ஜாகிராவது இனமாவது உண்டா? கிடையாது. மதிப்பாவது உண்டா? கிடையாது. பாதுஷாவின் ஆட்சியிலோ சேனாதிபதி பதவி வரையில் நீங்கள் உயரலாம்; ஸிவில் இலாகாவிலே கலெக்டர். ஜட்ஜி பதவிகளும் கிட்டும். சம்பளமும் கை நிரம்பக் கிடைக்கும். ஜாகீரும் இனமும் பெறலாம்.

"தேசமக்கள், ஹிந்துக்களாயினும் சரி, முகம்மதியராயினும் சரி, சுதந்திர யுத்தத்தில் சேர்ந்து உயிர் துறந்தால், வீர சுவர்க்கம் பெறலாம். ஆங்கிலேயரின் பக்கம் சேர்ந்துகொண்டு, தேசத்துக்கு விரோதமாக யாரேனும் போர் புரிந்தால் கட்டாயம் நரகமே கிட்டும். ஆதலின், ஆங்கில ஆட்சியிலே வேலை பார்க்கும் அனைவரும் தங்கள் தேச நலத்தை மதிக்க வேண்டும்; சமய உயர்வை எண்ண வேண்டும்; ஆங்கிலேயரிடம் விசுவாசம் வைத்தல் முட்டாள்தனம், பாவமும் ஆகும். பாதுஷாவுடன் சேர்ந்துகொண்டால், உலகம் போற்றும், உயர்வு கிடைக்கும், ஆத்ம திருப்தி உண்டாகும்.

"வெள்ளைக்காரரிடம் வேலை பார்ப்போர் நேர்முகமாக இச்சுதந்திர யுத்தத்தில் கலந்துகொள்ள முடியாதிருக்கலாம். அன்னார் எப்பக்கமும் சேராமல் இருக்கலாம். அத்துடன் வெள்ளைக்காரர் அபஜயம் அடையவேண்டுமென்று ஆண்டவனை வேண்டிக்கொள்ள வேண்டும். மேலும், மறைமுகமாக பாதுஷாவுக்கு உதவி புரியக்கூடும்.

"தேசமும் மதமும் பெரிதென மதித்து, வெள்ளைக்காரரைக் கொன்று போட்டு, தலைமறைவாக இருக்கும் சிப்பாய்கள் அனைவரும் உடனே பாதுஷாவின் சமூகம் வந்து சேரவேண்டும். தற்சமயம் காலாட்களுக்குத் தினம் நாலணா சம்பளம் கிட்டும்; குதிரை வீரருக்கோ முக்கால் ரூபா கிடைக்கும். அப்பால், அவர்கள் அனைவருக்கும் ஆங்கிலேயர் கொடுத்ததைவிட இரட்டிப்புச் சம்பளம் தரப்படும். ஆங்கிலேயரிடம் சேவகம் புரியாமல், ஆங்கிலேயருக்கு விரோதமாகப் போரிடும் எல்லா வீரருக்கும் தற்சமயம் சாப்பாட்டுச் செலவுக்குப் பணம் கிடைக்கும். அதன் பின்போ, காலாளருக்குப் பதினைந்து ரூபா; குதிரை வீரருக்கு முப்பது ரூபா, இப்படிக் கிடைக்கும். யுத்தம் முடிந்தபின், ஜாகீர் கிடைக்கும்; சம்மானமும் கிட்டும்.

"சிற்பிகளே! தொழிலாளரே! ஆங்கிலேயர் தங்கள் சரக்குகளை இங்கே கொண்டு வந்து குவித்து, நெசவுகாரர், பஞ்சடிப்போர், தச்சர், கொல்லர், கருமார் பலருக்கும் பிழைப்பில்லாது பண்ணிவிட்டனர். கைத்தொழில்களோ அநேகமாக அழிந்துபோய்விட்டன. ஆதலின் தொழிலாளர் பலரும் பிச்சை யெடுத்துப் புசிக்க வேண்டி யிருக்கிறது. பாதுஷாவின் ஆட்சியிலோ கைத்தொழிலாளர் அனைவருக்கும் வேலை கிடைக்கும், பிழைப்பும் கிட்டும், வாழ்வில்லாச் சங்கடம் நீங்கும். ஆதலின் கைத்தொழிலாளர் யாரும் ஆங்கிலேயரிடம் வேலை பார்க்கவே கூடாது. மதப் பிரசங்கிகளுடன் சேர்ந்து, தர்ம யுத்தத்தைப் பிரபலஞ் செய்ய வேண்டும்.

"பண்டிதர்களே! பக்கிரிகளே! இந்து முகம்மதிய மத தூக்தார்கள் பண்டிதர்களும் பக்கிரிகளுமே யாவர். ஆங்கிலேயரோ நமது மத விரோதிகள். ஆங்கிலேயருடன் போர் புரிகிறோம். பண்டிதரும் பக்கிரிமாரும் உடனே பாதுஷாவைக் கண்டு, தர்ம யுத்தத்தில் பங்கெடுத்துக்



கொள்ளவேண்டும். இல்லையானால், அவர்கள் தங்கள் கடமையால் தவறியவர்கள் ஆவர். இச்சமயம் உதவி புரிந்தால், முடிவில் மானியம் கிடைக்கும்.

"கடைசியாக ஒரு வார்த்தை. இந்த நமது ராஜவிளம்பரத்தைக் கண்டபின்பும், யாரேனும் ஆங்கிலேயருக்கு உதவி புரிந்தால், அன்னாரின் சொத்து பறிமுதலாகும்; அவர்களின் வீடு வாசல் கொள்ளையிடப்படும். அவர்களும் அவர்கள் குடும்பத்தாரும் சிறை செய்யப்படுவர். முடிவிலே அவசியமானால், மரண தண்டனைக்கும் ஆளாவர்!"

---


இந்தியாவுக்குச் சந்தா குறைக்கப்பட்டிருக்கிறது.

# "ஜோதி"

ஒரு உயர்தர மாதப் பத்திரிகை.

**இரங்கோன் ஜோதி பப்ளிஷிங் கம்பெனி லிமிடெட் வெளியிடுவது**

நமது அரசியல் டைரி: உலகத்து நிகழ்ச்சிகளுள் முக்கியமானவற்றைத் தேதிவாரியாகத் தொகுத்துக் காட்டும் ஒரு பகுதி இது.

விஞ்ஞான ஆராய்ச்சி: தற்போதைய விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் புதிது புதிதாகக் கண்டுபிடிக்கும் நூதனங்களை விளக்கமாய்க் கூறும் பகுதி.

அறிஞர்கள் கட்டுரை: உலக இயல், பொருளாதார இயல், அரசியல் முதலிய எல்லாத் துறைகளிலும், தெளிவுடனும், சீர்தூக்குந் தன்மையுடனும் யாவரும் எளிதில் உணரும்படியாக உள்ள ஒரு பகுதி இது. **இன்னும் பல பகுதிகள்.**

ஒவ்வொரு இங்கிலீஷ் மாத முதல் வாரத்திலும் வெளிவரும்.

| | வருடச் சந்தா | தனிப் பிரதி |
|---|---|---|
| பர்மாவுக்கு | ரூ 4—0—0 | 0—6—0 |
| இந்தியா, சிலோனுக்கு | ரூ 4—8—0 | |
| மலேயா முதலிய வெளி நாடுகளுக்கு | ரூ. 6—0—0 | 0—8—0 |

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி லிமிடெட்,

47, 31-வது வீதி, இரங்கோன்.

# யானைப் படை

‘சேனாவரையன்’

“யானை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன்” என்பது பழமொழி. ஆனால் இப்போதோ யானைக்கு அவ்வளவு உயர்ந்த விலை மதிப்பு இருப்பதாகக் காணவில்லை—ஏன்?

இதற்கு முக்கிய காரணம் பிற்காலத்தில் வாழ்க்கையில் ஏற்பட்ட மாறுதலே யாகும். இப்பொழுது அரசர்களும், மடாதிபதிகளும், கோயில் அதிகாரிகளும் யானையை ஒரு விருதாகக் கருதி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ராஜாக்களும், மடத்துத் தலைவர்களும், கோயிலில் எழுந்தருளியிருக்கும் தெய்வ மூர்த்தங்களும், பவனி வரும் பொழுது யானை அலங்காரமாக முன்னே செல்லுகின்றது. இது ஒன்றைத் தவிர யானையை அவர்கள் வேறு விதமாக உபயோகிப்பதில்லை. மலையாளம், மைசூர் முதலிய தேசங்களில் மட்டில், யானையைக் காடுகளில் வெட்டிப் போட்ட பெரிய மரத் துண்டுகளை இழுப்பது போன்ற வேலைகளைச் செய்து முடிக்க உபயோகிக்கிறார்கள்.

முற்காலத்திலோ அவ்விதம் இல்லை. அரசர்கள் யானைகளைக் கொண்ட படைகளை வைத்திருந்தார்கள். இப்பொழுது குதிரைப் படை, பீரங்கிப் படை என்ற படைகள் இருப்பது போல அக்காலத்தில் யானைப்படை என்று தனியாக இருந்தது. இது ‘குஞ்சரமல்லர்,’ ‘ஆனையாட்கள்’ என்று கல் வெட்டுக்களில் காணப்படும் பெயர்களால் தெரியவரும்.

பழைய நாள் போர் முறையில் யானை மிகவும் அவசியமாக இருந்தது. மதங்கொண்ட யானை போர்க்களத்தில் புகுந்து விட்டால், அதன் முன்னர் யார்தான் நிற்க முடியும்? அரண்களை முற்றுகையிடும் காலங்களில் இரும்புக் கவசம் பூண்ட கோட்டைக்கதவுகளை மத்தகத்தால் முட்டி இடித்துத் தள்ள யானையை யன்றி வேறெந்தப் பிராணியால் முடியும்? இப்படிப்பட்ட கொலைக் களிறின் படையை ஒவ்வொரு அரசனும் வைத்திருந்தான். சோழ அரசர்கள் தமிழ் நாட்டை ஆண்டு வந்த காலத்தில் அவர்கள் அறுபதினாயிரம் போர் யானைகளை வைத்திருந்தார்கள் என்று சௌஜா குவா என்னும் சீன தேசத்துப் புத்தகத்தில் காணப்படுகின்றது.

இவ்விதம் பழைய நாளில் ஒவ்வொரு அரசனும் யானைப்படை வைத்திருந்ததால் யானைகளுக்குக் ‘கிராக்கி’ அதிகமாக ஏற்பட்டு விட்டது. நம் நாட்டிலே கிடைக்கும் யானைகள் போதவில்லை. வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவேண்டியதாயிற்று. வெளிநாடுகளில் இலங்கையும், பர்மா ராமஞ்ஞ தேசம் எனப்படும் பெகுப் பிரதேசமும் முக்கியமானவைகளாக இருந்தன. நம் நாட்டில் இறக்குமதி செய்யப்பட்ட யானைகள் இவ்விரு பிரதேசங்களிலிருந்தே வந்தவைகளாகும்.

மிகப் பழங்காலத்தி லிருந்தே இலங்கை யானைகள் பெயர் வாய்ந்தவை. அவற்றைப் பிடித்து வியாபாரம் செய்யும் உரிமையை இலங்கை அரசனே பெற்றிருந்தான். அவற்றைக் காட்டிலிருந்து ஆசை காட்டிப் பிடித்துப் பழக்கி விற்பதால் ஏராளமான பணத்தைப்பெற்றுவந்தான். அந்த யானைகளை வாங்குவதற்கென்று தென்னிந்திய அரசாங்கங்கள் பலவற்றிலிருந்தும் வியாபாரிகள் இலங்கைக்குச் செல்வார்கள். யானைகளை இறக்குமதி செய்து வியாபாரம்



செய்வதை மட்டிலுமே பல பெரிய வியாபாரிகள் நடத்தி வந்தார்கள்.

தமிழ் நாட்டு மன்னர்கள் இலங்கை யானைகளையே பெரிதும் விரும்புவார்களாம். அவை நன்கு பழக்கப்பட்டுள்ளவை. குழந்தைகளும் விளையாடக் கூடிய தன்மை வாய்ந்தவை. அவற்றுள் பல யானைகள் மனிதர்களைப் போன்ற அறிவு படைத்திருந்தன. பெகு தேசத்திலிருந்து வந்த யானைகளும் நன்கு பழக்கப்பட்டனவே. அவர்கள் தினம் ஒவ்வொன்றாக வெளியில் ஓட்டிச் சென்று பழக்குவார்களாம்.

யானை வியாபாரத்தில் விலை மதிப்பிடுவதை இரண்டு விதமாகச் செய்வார்கள். ஒன்று யானையின் உயரம். மற்றொன்று அது பழக்கப்பட்டிருக்கும் அளவு. இலங்கையினின்றும் வந்த யானைகள் பத்து அல்லது பதினொரு முழம் உயரம்’ இருக்குமாம். யானை எவ்வளவுக் கெவ்வளவு உயரமாக இருக்குமோ அவ்வளவுக் கவ்வளவு அதிக விலையுடையது. அரசன் ஏறிச் செல்லும் யானை மற்ற எல்லாவற்றையும் விட உயரமானதாக இருக்கும்.

இங்ஙனம் தமிழ் நாட்டு மன்னர்கள் இறக்குமதி செய்ததால் வெளிநாடுகளுக்குச் சென்ற செல்வம் கொஞ்சமானதல்ல. யானைகளை உயர்ந்த விலைக்கே வாங்கி வந்தார்கள். விஜயநகர சாம்ராஜ்யத்தை ஆண்டுவந்த மன்னர்கள் இந்த யானைகளை ‘ஒவ்வொன்றுக்கும் ஆயிரம் முதல் ஆயிரத்தைந்நூறு க்ருஸாடோ கொடுத்து’ வாங்கி வந்தார்கள் என்று போர்ச்சுகீசிய யாத்திரீகரான பர்போஸா எழுதியிருக்கிறார். ஒரு க்ருஸாடோ 9 ஷில்லிங் 9 பென்ஸ் வீதம் கணக்கிட்டால், அந்த யானைகள் ஐந்நூறு முதல் எழுநூற்று முப்பது பவுன்கள் வரை விற்று வந்தன என்பது தெரியவரும்.

தமிழ் நாட்டு மன்னர்கள் யானையை நன்கு போஷித்துப் பாதுகாத்து வந்தார்கள். பல்லவ அரசர்களான ராஜஸிம்ஹன், நந்திவர்ம பல்லவமல்லன் போன்றவர்கள் கஜ சாஸ்திரத்தில் வல்லவர்கள் என்று சாஸனங்களில் காணப்படுகின்றது. அன்றி, ‘கஜ மதம்’ அறிந்த பண்டிதர்கள் பலர் இருந்தனர். யானை வைத்தியம் செய்வதையே தொழிலாகக் கொண்ட வைத்தியர்களும் பலர் இருந்தனர்.

பழைய நாள் யானை வியாபாரத்தில் முக்கியமான அம்சம் ஒன்று உண்டு. அந்தக் காலத்துக் குதிரை வியாபாரத்தைக் காணும்பொழுது வெளி நாட்டு யாத்ரீகர்கள் நம் நாட்டு மன்னர்கள் குதிரைகளைச் சரியாகப் போஷித்து வாராமையால் அவை அடிக்கடி இறந்துவிட்டன என்று குறை கூறுகிறார்கள். ஆனால் அவ்விதம் யானை வியாபாரத்தைப் பற்றிக் கூறவில்லை. இதனால் தமிழ் மன்னர்கள் யானைகளை நன்கு கவனித்து வந்தார்கள் என்றே கூறவேண்டும்.

# மாயமாய் மறைந்த கிராமம்

'வில்லன்' மொழிபெயர்ப்பு.

ஒரு வாலிப சைத்திரிகன் தோளின் மீது ஒரு பையும் கையில் ஒரு தடியுமாக மேரி பீல்டிலிருந்து விட்டலோசனுக்குச் செல்லும் சாலையில்மெல்ல நடந்து சென்று கொண்டிருந்தான். மேரி பீல்டிலிருந்து சுமார் ஒரு மைல் தூரம்தான் சென்றிருப்பான். கிராமக் கோயிலின் கோபுரமணியின் கணீரென்ற ஒலி காற்றில் தவழ்ந்து வந்தது அவன் காதுக்கு இனிமையாயிருந்தது.

மணியோசை நின்றது. ஆயினும் பின்புறமாகத் திரும்பி மலைச்சாரலைப் பார்த்துக்கொண்டே சிறிது நேரம் கனவு உலகில் மூழ்கினான். அவனது உள்ளம், வீடு, சுற்றம், கிராமம், தாயார், சகோதரிகளின் மீது சென்றது. கண்களிலிருந்து ஒரு பொட்டு நீர் கீழே விழுந்தது. சுபாவத்திலேயே அவன் குதூகலப் பேர்வழியாகையால் துக்கம் மேலிடவில்லை. தலையிலிருந்து தொப்பியை எடுத்து ஊரின் பக்கமாகத் திரும்பி, "போய் வருகிறேன்" என்று சொல்லி தொப்பியை ஆட்டிவிட்டு, மீண்டும் பிரயாணத்தை ஆரம்பித்தான்.

சூரிய வெப்பம் பொறுக்க முடியவில்லை. கடைசியாக ஒரு சிற்றோடையும், அதன் மீது ஒரு பழுதடைந்த பாலமும், அக்கரையில் ஒரு வயலும் தென்பட்டன. தான் எங்கு செல்கிறான் என்பதை அவன் அறியவில்லை. வழிகாட்டும் கம்பமுமில்லை. ஓடையருகில் வந்து அதன் தெள்ளிய நீரைப் பருகினான். பிறகு கரையின்மீது காணப்பட்ட ஒரு வில்லோ மரத்தைப் படமாக வரைந்தான். சற்று அங்கே இளைப்பாறிவிட்டு மீண்டும் பையை எடுத்துக்கொண்டு நெடுக நடந்து சென்றான்.

இரண்டு மணி நேரம் நடந்து சென்றான். போகும் வழியில் செடிகள் புதர்களை வரைந்துகொண்டே சென்றான். வழியிலிருந்த ஒரு ஓடையின் கரையில் ஒரு தட்டையான கற்பாறையின் மீது ஒரு குடியானவப் பெண் உட்கார்ந்திருந்தாள். அவள் அவனைக் கண்டதும் எழுந்து அவனை நோக்கி வந்தாள்.

ஆர்னல்டு (சைத்திரிகனின் பெயர்) பதினேழு வயதுள்ள அழகான மங்கை தன்னை நோக்கி மகிழ்வுடன் வரக்கண்டு ஆச்சரியமடைந்தான். அடையாளம் தெரியாமல் வந்தாளென்பதை உணர்ந்தான். அவள் அவனருகே வந்தவுடன் திடுக்குற்று முகம் சிவந்து சொன்னாள் :

"ஐயா, என்னை மன்னிக்கவேண்டும். தாங்கள் வேறொருவரென நினைத்துவிட்டேன்."

வாலிபன் புன்னகை புரிந்துகொண்டே "அவன் உன் காதலனல்லவா? நான் அவனாயிராததால் என்மீது கோபப்படாதே." என்றான்.

"ஏன் அப்படிச் சொல்லுகிறீர்? கோபமென்ன கிடக்கிறது? நான் முதலில் எவ்வளவு சந்தோஷமடைந்தேன் தெரியுமா?"

இதற்குள் அவளது அழகை நன்கு நோக்கிய வாலிபன், "இனி அவனுக்காக நீ காத்திருப்பதற்கு அவன் அருகதையுடையவனல்லன். நான் மட்டும் அவனாக யிருந்தால் உன்னை இவ்விதம் காத்திருக்கும்படி செய்திருக்கவே மாட்டேன்."

"நீங்கள் கூறுவது விநோதமாயிருக்கிறது" என்றாள் அவள் வெட்கத்துடன். பின்னும் பெருமூச்சு விட்டுக்கொண்டே, "அவர் வர முடியுமானால் இதற்குள் வந்திருப்பார். ஒரு வேளை உடம்பு ஜுரமாயிருக்கலாம். அல்லது இறந்துதான் விட்டாரோ." என்றாள்.



"இத்தனை நாளாக அவனைப் பற்றி உனக்கு ஒன்றும் தெரியவில்லையா?"

"ஆமாம், இத்தனை நாளாக ஒன்றும் எனக்குத் தெரியவில்லை."

"அவன் இருக்கும் ஊர் இங்கிருந்து வெகு தூரமா?"

"ஆமாம், ரொம்ப தூரம்தான். அவரது ஊர் பிஷரோதா."

"பிஷரோதாவா? கொஞ்ச நாட்களுக்கு முன்தான் அங்கே நான்கு வாரங்கள் தங்கினேன். அந்தக் கிராமத்திலுள்ள ஒவ்வொருவரையும் நான் அறிவேன். அவன் பெயர் என்ன?"

"ஹென்ரிக். அவ்வூர் மேயரின் குமாரர்" என்றாள் நாணத்துடன்.

"என்ன? நான் மேயர் வீட்டிற்குச் சென்றிருக்கிறேனே. அவர் பெயர் போயர்லிங்கு. கிராமம் முழுவதிலும் ஹென்ரிக் என்பவனே கிடையாதே."

"உமக்கு ஒருக்கால் கிராமத்திலுள்ள எல்லாரையும் தெரியாதிருக்கலாம்."

"ஆமாம், பிஷரோதாவிலிருந்து இங்கு வர இரண்டு அல்லது மூன்று மணி நேரத்திற்கு மேல் பிடிக்காதே."

"அப்படியிருந்தும் இங்கே வரவில்லை, வருவதாக உறுதியாகச் சொல்லிப் போயிருந்துங்கூட" என்று பெருமூச்சு விட்டுக்கொண்டே சொன்னாள்.

"அப்படியானால் வருவான். ஒருவன் உறுதியாகச் சொன்ன பிறகு, கல்மனம் படைத்தவனாயிருந்தாலொழிய பேச்சுத் தவறமாட்டான். ஹென்ரிக் அவ்வளவு கல்மனமுடையவனல்லனென்பது எனக்குத் தெரியும்."

"அவர் அப்படித் தவறப்பட்டவரல்ல." என்றாள் அவளும் திடமாக. "ஆனாலும் நான் இனிக் காத்திருக்க முடியாது. சாப்பாட்டு நேரத்திற்குள் வீட்டிற்குப் போயாக வேண்டும். அப்பா கோபித்துக் கொள்வார்." என்று தொடர்ந்து சொன்னாள்.

"உன் வீடு எங்கே?"

"அந்தப் பள்ளத்தாக்கில். அதோ மணியோசை கேட்கிறது பாருங்கள். அது எங்கள் ஊரின் கோவில் மணி."

ஆர்னல்டு மணியோசையைக் கேட்டு, ஓசை வரும் திக்கை நோக்கினான்.

"உங்கள் ஊரின் பெயர் என்ன?"

"ஜர்மல்ஷோசன்."

"அங்கிருந்து விட்டலோசனுக்குப் போக முடியுமா?

"ரொம்ப சுலபமாகப் போகலாம். வேகமாய் நடந்தால் அரை மணி நேரத்திற்குள் செல்லலாம்."

"சரி, உன்னோடு கிராமத்தின் வழியாகச் செல்லுகிறேன். அங்கே நல்ல சத்திரமிருந்தால் அங்கேயே சாப்பிடுவேன்."

"சத்திரம் நல்ல சத்திரம்தான். ஆனால் எங்களுக்கு அது அதிகம்" என்று சொல்லி, பெருமூச்சு விட்டுக்கொண்டே காதலன் வருகிறானா வென்று பின்புறமாகப் பார்த்தாள்.

"ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?"

"ஏனா? எங்கள் ஊர் குடியானவனுக்கு வீட்டில் அதிக வேலையுண்டு. பொதுச் சத்திரத்தில் இரவில் நீண்ட நேரம் பொழுது போக்கி விடுவதால் வீட்டு வேலையை அலட்சியம் செய்கிறான்."

"எனக்கு இன்று வேலையொன்றுமில்லை."

"நீங்கள் நகரத்தைச் சேர்ந்தவர். நகரத்தார்களுக்கு வேலை என்ன கிடக்கிறது? குடியானவன் பாடுபட்டால்தான் வயிற்றுக்குக் கஞ்சி கிடைக்கும்."

"அப்படிச் சொல்லாதே. நகரத்தானும் ஜீவனம் செய்வதற்கு உழைக்க வேண்டாமா?"

"நீங்கள் வேலை செய்வதேது?"

"ஏன் அப்படிச் சொல்லுகிறாய். அந்த மரத்தடியில் தட்டைக் கல்லின்மீது சற்று உட்காரு. உன்னை எழுதுகிறேன்" என்று சொல்லி சைத்திரிகன் பையைக் கீழே வைத்து குறிப்புப் புத்தகத்தையும் பென்சிலையும் எடுத்தான்.

"நான் வீட்டிற்குப் போகவேண்டுமே."

"ஐந்து நிமிஷங்களுக்குள் எழுதிவிடுகிறேன். உன் காதலனுக்கு ஆட்சேபனையிராது."

"என் ஞாபகார்த்தமாகவா? வேடிக்கையா யிருக்கிறதே."

"உனது படத்தை என்னுடன் எடுத்துச் செல்லுவேன்."

"நீர் சைத்திரிகரா?"

"ஆம்."

"என்ன அதிருஷ்டம்! எங்களது ஊர்க் கோவிலிலுள்ள படங்களை நீர் பழுதுபார்க்கக்கூடும். அவை விகாரமாயிருக்கின்றன."

அவன் அவளது முகலட்சணங்களை வரைந்து கொண்டே "உன் பெயர் என்ன?" என்று கேட்டான்.

"ஜர்டிரூட்."

"உன் தகப்பனாருக்கு என்ன வேலை?"

"கிராமமேயர். நீர் சைத்திரிகரா யிருந்தால் பொதுச் சத்திரத்திற்குப் போகக்கூடாது. நான் உங்களை என்னுடன் அழைத்துச் செல்லுகிறேன். போஜனத்திற்குப் பிறகு, தகப்பனாருடன் எல்லாவற்றையும் பேசலாம்."

"கோவில் படங்களைப் பற்றியா?" என்றான் அவன் சிரித்துக்கொண்டே. "ஆம். படங்கள் முடித்து எங்களது நாள் வருகிற வரையில் எங்களோடு தங்கவேண்டும்."

"அதைப்பற்றிப் பின்னால் பேசிக்கொள்ளலாம், ஜர்டிரூட். நான் எப்பொழுதும் உன்னுடனிருந்து அதிகம் பேசினால் ஹென்றிக்குக்கு கோபம் வராதா?"

"ஹென்றிக்குக்கா? அவர் இப்போது எங்கே வரப்போகிறார்?"

"இன்றைக்கில்லாவிடில் நாளைக்கு வரலாம்."

"இல்லை. பதினொரு மணி வரையில் வராததால், இனி எங்களது நாள் வருகிற வரையில் வரமாட்டார்." என்றாள் அமைதியாக.

"'எங்களது நாள்' என்றால் என்ன?"

அவள் அவனை நன்றாக முழித்துப் பார்த்துவிட்டு பதில் சொல்லாம லிருந்தாள். பிறகு விசனம் படர்ந்த முகத்துடன் ஆகாயத்தை நோக்கினாள். இது சமயம் அவளது அழகு தேவதூதையின் வனப்பை யொத்திருந்தது. படம் வரைவதில் முழு கவனத்தையும் செலுத்தின ஆர்னால்டு அவனது கேள்வியையும் மற்ற எல்லாவற்றையும் மறந்து விட்டான். அவள் எழுந்தாள்.

"நான் போகவேண்டும்: பொழுதாய் விட்டது. வீட்டில் என்னை எதிர்பார்த்துக் கொண் டிருப்பார்கள்."

இதற்குள் ஆர்னால்டு படத்தை முடித்து விட்டு, அதை அவளுக்குக் காட்டி, "உன் போல இருக்கிறதா?" என்று கேட்டான்.

அவள் மிக ஆச்சரியத்துடன் "அது நானே" என்றாள்.

"பின் யாராக இருக்கும்?" என்றான் அவன் புன்னகையுடன்.

"அந்தப் படத்தை உங்களுடன் எடுத்துக் கொண்டு போகப் போகிறீர்களா?" என்று கேட்டாள் நாணத்துடன்.

"ஏன்? ஆமாம். நான் உன்னை விட்டு வெகுதூரத்தி லிருக்கையில் உன்னைப் பற்றி நினைப்பேன்."

"என் தகப்பனார் அதை அனுமதிப்பாரா?"

"நான் உன்னை நினைப்பதையா? அதை எப்படி அவர் தடுக்க முடியும்?"

"இல்லை, இந்தப் படத்தை எடுத்துச் செல்வதற்கு."

"அதை அவர் தடுக்க முடியாது, என் கண்மணி" என்றான் மிருதுவாக. "படம் என்வச மிருப்பது உனக்குப் பிடிக்கவில்லையா, என்ன?" என்றான் தொடர்ந்து.

"எனக்கா? அப்படியில்லை. நான் மட்டுமானால்... ஆனால் அதைப்பற்றி அப்பாவைக் கேட்க வேண்டும்."

"நீ என்ன அசட்டுப் பெண்ணாயிருக்கிறாயே." என்றான் சிரித்துக் கொண்டே. "சைத்திரிகன் வரைந்த படத்தை அவன் வைத்திருப்பதை ராஜகுமாரிகூட ஆட்சேபிக்க மாட்டாள். அதனால் உனக்கு ஆபத்தொன்றும் வராது. ஓடிப்போய் விடாதே. நானும் உன்னுடன் வருகிறேன். கோவில் படங்களைப் பற்றி மறந்துவிட்டாயா?"



"ஆமாம், ஆமாம். கோவில் படங்கள்" என்று சொல்லி சற்று நின்று அவனுக்காகக் காத்திருந்தாள். ஆர்னால்டு ஒரு நிமிஷத்திற்குள் அவளைச் சேர, இருவருமாகக் கிராமத்தை நோக்கி நடந்து சென்றனர்.

தோப்புகள், வயல்களால் சூழப்பட்ட கிராமம். அதன் கோவில் கோபுரத்துடனும் அதைச் சுற்றிலுமிருந்த குடிசைகளுடனும் கண்ணுக்குத் தென்பட்டது.

இருவரும் கைகோர்த்துக் கொண்டு சென்றனர். அவளது சூடான மலர்க்கரங்களைப் பிடித்துச் செல்லுகையில் அவனுக்கு ஒருவித உணர்ச்சி யேற்பட்டது. அவள் எதையும் கவனிக்காமல் அவனைத் தனது தகப்பன் வீட்டிற்கு அழைத்துச் சென்றாள். வழியில் கிராமத்தினர் வாயைத் திறவாமல் மௌனமாக விருந்தனர். எங்கும் ஒரே நிசப்தம். இது அவனுக்கு ஆச்சரியமாக விருந்தது.

"என்ன எங்கும் ஒரே நிசப்தமா யிருக்கிறதே?"

"இது சாப்பாட்டு நேரம். இப்பொழுது எவரும் பேசமாட்டார்கள். மாலை வரும்போது வேண்டிய அளவு கூச்சலிடுவர்."

"அப்பாடா! அங்கே சில குழந்தைகள் விளையாடிக்கொண் டிருக்கின்றனர்."

"அதோ, இருக்கிறதே, அதுதான் எனது தகப்பனார் வீடு."

"சாப்பாட்டு நேரத்தில் நாம் திடீரென வீட்டிற்குள் நுழைந்தால் அவருக்கு எப்படி யிருக்கும்? அவர் என்னை வரவேற்க மாட்டார். ஆகவே, சத்திரத்திற்கு வழி காட்டு."

"அவர்கள் நம்மை எதிர்பார்க்கின்றனர். உம்மை வரவேற்காமலிருக்க மாட்டார்கள்."

"நம்மை, என்றால் என்ன? உன்னையும் ஹென்றிக்கையு மல்லவா? ஆ! இன்றைய தினம் ஹென்றிக்கின் இடத்தில் என்னை வைப்பாயானால், என்னை 'போ' என்று வெளியே தள்ளி விடும் வரையில் உன்னுடனேயே தங்கி விடுவேன்." என்றான் ஆர்னால்டு உணர்ச்சி ததும்ப.

ஜர்டிரூட் சற்று அப்படியே நின்று அவனை முழித்துப் பார்த்தாள். "உண்மையாகவா நீர் அவ்விதம் விரும்புகிறீர்?" என்று கேட்டாள்.

அவளழகில் களிகொண்ட ஆர்னால்டு "அதற்கென்ன ஆட்சேபம்?" என்றான்.

இருவரும் வீட்டின் வாயிற்படியண்டை வந்தனர்.

"இதுதான் நான் வசிக்கும் வீடு. என்னுடனே வாரும். நீர் என்னுடைய தகப்பனாருடன் சாப்பிடுவீராகில் அவர் மிகவும் பெருமை யடைவார்."

## II

கிராம மேயரே வீட்டின் வாயிலில் வந்து நின்றுகொண்டிருந்தார்.

"என்ன ஜர்டிரூட், இத்தனை நேரம்? சரி, நல்ல வாலிபனைத் தான் பார்த்து அழைத்து வந்திருக்கிறாள்!"

"அன்பு மிக்க ஐயா" என்று ஆரம்பித்தான் ஆர்னால்டு.

"வாயிற் படியண்டை மரியாதை வார்த்தைகள் வேண்டாம். சாப்பாடு தயாரா யிருக்கிறது. உள்ளே வாரும்." என்றார் மேயர்.

வீட்டுக் கிழவி ஆர்னால்டை உற்றுப் பார்த்துவிட்டு "ஆ! இது ஹென்றிக் அல்லவே. அவன் திரும்பி வரவே மாட்டான் என்று நான் சொல்லவில்லையா?" என்றாள்.

மேயர், "இருக்கட்டும் அம்மா, அவனுக்குப் பதில் இவர்தான் இருக்கட்டுமே" என்று சொல்லி, ஆர்னால்டை நோக்கிக் கை நீட்டி, "வாலிபரே, இவ்வூருக்கு நான் உம்மை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். சாப்பிட வாருங்கள். பிறகு எல்லாவற்றையும் பேசிக் கொள்ளலாம்" என்று அவனை வீட்டுக்குள் அழைத்துச் சென்றார்.

எல்லோரும் அன்புடன் உணவருந்தினர். பிறகு மேயர் பிடிலை எடுத்து வாசிக்க, ஆர்னால்டும் ஜர்டிரூட்டும் கைகோர்த்துக்கொண்டு கூத்தாடினர்.

பிறகு திடீரென்று அறையில் ஒரு நிசப்தம். தெருவில் சென்ற ஒரு பிணக் கோலத்தை மேயர் ஜன்னலிலிருந்து பார்த்த வண்ணமா யிருந்தார். ஜர்டிரூட் ஆர்னா

ல்டைத் தன்னுடன் கொஞ்ச தூரம் நடந்து வரும்படி அழைத்தாள். ஆர்னல்டு கையில் குறிப்புப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

"புத்தகம் எதற்காக?" என்று கேட்டார் மேயர்.

"அப்பா, அவர் நன்றாகப் படம் எழுதுகிறார். என்னைப் படமெழுதி யிருப்பதைப் பாருங்கள்."

ஆர்னல்டு படத்தை மேயருக்குக் காட்டினன்.

"அதை உம்முடன் எடுத்துக்கொண்டு போகப் போகிறீர்களா?"

"ஏன்?"

"அவர் அதை எடுத்துக்கொண்டு போகலாமா, அப்பா?"

"நம்மோடு தங்கியிராவிட்டால் அதைப் பற்றி எனக்கு ஆட்சேபமில்லை. ஆனால் பின்னணி ஒன்று இல்லாதது அதற்குக் குறையா யிருக்கிறது."

m211,0132MK
N39;3

"என்ன!"

"இதோ சென்றதே ஒரு பிணக்கோலம், அதை வரைந்து பிறகு நீர் அதை எடுத்துச் செல்லலாம்."

"என்ன! ஜர்டிரூட் படத்தில் பிணக்கோலமா?"

"அதற்கு இடமிருக்கிறது. இல்லாவிடில் நீர் அதை எடுத்துச் செல்ல அனுமதி கொடுக்க மாட்டேன்."

"ஆர்னல்டு அதற்கு ஒப்புக்கொண்டு தனது ஞாபகத்திலிருந்து பிணக்கோலத்தை வரைந்தான்."

198774

"சரிதானா?"

"சரி, நன்றாயிருக்கிறது. மகளுடன் சென்று ஊரைச் சுற்றிப் பார்த்துவிட்டு, ஐந்து மணிக்கெல்லாம் திரும்பிவிடுங்கள். நடனத்திற்கு நீர் கட்டாயம் இருக்கவேண்டும்."

ஜர்டிரூடும் ஆர்னல்டுமாகச் சேர்ந்து கிராமத்தின் வழியாகச் சென்றனர். அது சமயம், முன்போல நிசப்தமில்லை. சிறுவர்கள் இங்கு மங்கும் விளையாடிக் கொண்டிருந்தனர். கிழவர்கள் வீட்டு வாயிலில் உட்கார்ந்து கொண்டு வம்பளந்துகொண்டிருந்தனர். கூரைகளிலிருந்து புகை வெளிக்கிளம்பிக் கொண்டிருந்தது. எங்கு பார்த்தாலும் ஒரே புகைச்சல்.

"என்ன இது? வேறெந்த ஊரிலும் நான் இந்த மாதிரி பார்த்ததில்லை."

"அது பூமியிலிருந்து வரும் ஆவி. நீர் ஜர்மல்ஷோசன் கிராமத்தைப் பற்றிக் கேள்விப்பட்டதில்லையா?"

"இது ஒரு பழைய கிராமம். இங்கு எல்லாமே விநோதம்."

இவ்விதம் பேசிக்கொண்டே அவர்கள் கிராமத்தின் எல்லைக்கு வந்தனர். அங்கு ஒரே நிசப்தம். ஜன நடமாட்டமே யில்லை. பிரேதங்களை அடக்கம் செய்யுமிடத்திற்கு வந்தனர். அங்குள்ள கல்லறைகளைப் பார்வையிட்டனர்.

"இதுதான் எனது தாயின் கல்லறை. வீட்டிலுள்ளவள் எனது சிற்றன்னை." என்றாள் ஜர்டிரூட்.

பிறகு கல்லறையின்முன் மண்டிபோட்டுப் பிரார்த்தனை செய்தாள். கோவில் மணியின் சத்தம் கேட்டது. அவள் உடனே எழுந்து "வீட்டுக்குப் போவோம். உம்முடனே நான் முதல் நடனமாடப் போகிறேன்" என்றாள்.

அவர்கள் கிராமத்திற்குத் திரும்பிச் சென்றனர். கிராமத்தில் ஏகப்பட்ட சலசலப்பா யிருந்தது. ஜர்டிரூட் புதிய ஆடைகளைக் கட்டிக்கொண்டாள். ஆர்னல்டும் புதிய உடைகளைப் போட்டுக்கொண்டான். ஜர்டிரூட் மிக அழகுடன் பொலிந்தாள். இருவருமாகக் கைகோர்த்துக்கொண்டு சென்றனர்.

"நாளைக்கு உன்னை விட்டுப் பிரிந்து போகவேண்டுமே என்றிருக்கிறது."

"அதைப்பற்றிக் கவலை வேண்டாம். எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் நீர் எங்களுடன் தங்கலாம்."

"உன்னுடன் தங்கியிருந்தால் உனக்குச் சந்தோஷம்தானே?"

"அதற்கென்ன சந்தேகம்? நீர் பட்சமா யிருக்கிறீர். அப்பா உம்மை விரும்புகிறார். ஹென்ரிக் வரவில்லை."

"அவன் நாளைக்கு வந்தாலோ?"